REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 ஏப்ரல் 17 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
89 1932 - 2021
வரு. 89 இல. 90 | April 17, Saturday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

## தந்தையும் மகனும் நீரில் மூழ்கி மரணம்

### ஹல்துமுல்லையில் சடலங்கள் மீட்பு

ஹல்துமுல்லை, களுபஹன பகுதியில் நீரில் மூழ்கி காணாமல் போன இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளனர்.

களுபஹன, வெலிஓய பகுதியில் குளிக்கச் சென்ற நிலையிலேயே அவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர். 06













# இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை அடைவதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்

### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலைனா கருத்து



இலங்கை அரசாங்கம் தனது கடனை நிர்வகிப்பதிலும் மேலும் நிலையான பாதையை கண்டுபிடிப்பதிலும் அமெரிக்கா உதவியளிக்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலைனா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையில் மேலும் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் காண விரும்புவதாக அமெரிக்கா ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது. அதற்கு ஆதரவளிக்க விரும்புவதாகவும் அமெரிக்க தூதுவர் எலைனா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

முன்னோக்கிச் செல்லும்போது, இலங்கையில் பல வாய்ப்புகளும் உள்ளன, அதேநேரம் பல சவால்களுமுள்ளன, அந்த சவால்களுக்கு 06

### வர்த்தக ரீதியாக இலங்கைக்கு ஒரு திருப்பு முனையே இலக்கு

# கொழும்பு துறைமுக நகரம் தனிநாடல்ல எவர் எந்நேரத்திலும் பயமின்றி செல்லலாம்

### எதுவும் மூடி மறைக்கப்படவில்லை என்கிறார் இராஜாங்க அமைச்சர் கப்ரால்



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொழும்பு துறைமுக நகரம் வர்த்தக ரீதியாக இலங்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பதுடன், இதுவொரு தனிநாடல்ல. இதன் மொத்த நிலப்பரப்பும் இலங்கையுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையர் எவர் வேண்டுமானாலும் எவ்வித தடைகளுமின்றி கொழும்பு துறைமுக நகருக்குள் செல்ல முடியுமென இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் உருவாக்கப்பட்டதன் பின்னர் 06

### தண்டனை சட்டக் கோவையில் விரைவில் திருத்தங்கள்



# அடிப்படைவாத, தீவிரவாத அமைப்புகள் அனைத்துக்கும் தடை

### நாட்டிலிருந்து கட்டம் கட்டமாக தடை செய்ய நடவடிக்கை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அடிப்படைவாதம் மற்றும் தீவிர வாதத்துடன் தொடர்புடைய அமைப்புகள் கட்டம் கட்டமாக நாட்டில் தடைசெய்யப்படுவதுடன் சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கும் வகையில் விரைவில் தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரித்துள்ளதாவது,

தற்போதைய தண்டனை சட்டக் கோவையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகள் வெளியிடப்படுவதால் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு அவை பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதத்திற்கு அடிகோலும் கருத்துகளும் வெளியிடப்படுகின்றன. அவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்பவர்களுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடல்களுக்கு அமையவே 11 இஸ்லாமிய அமைப்புகள் 06

**சமூக வலைத்தளங்களில் போலி செய்திகளை வெளியிடுவோருக்கு எதிராகவும் தண்டனை**



தேசிய மரநடுகை திட்டத்துக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய செஞ்சந்தன மரக்கன்றை அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று (16) காலை 6.40க்கு கூடிய சுப வேளையில் தனது அங்குனுகொலபெலஸ்ச இல்லத்திலுள்ள காணியில் நடுகை செய்த போது பிடிக்கப்பட்ட படம். (படம் : ரோஹன ஆரியரத்ன)

# மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் மூன்று மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கண்டி, கேகாலை மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கே 06

# யாழில் வறிய குடும்பத்துக்கு படையினர் வழங்கிய வீடு

### இராணுவத் தளபதியால் நேரில் கையளிப்பு



செய்தி 3ஆம் பக்கம்

# இந்தியா கைது செய்த இரு இலங்கை மீனவர்களையும் விடுவிக்க கோரிக்கை

### அமைச்சர் தினேஷுக்கு உறவினர்கள் கடிதம்

இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் இருவரையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்களின் உறவினர்கள் கோரிக்கை 06

# மின்னல் தாக்கியதில் விவசாயிகள் மூவர் பலி

### முல்லைத்தீவு வயல்வெளியில் சம்பவம்



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு 03 கண்டம் வயல்வெளிப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் 06

### குறைந்த வருமானம் பெறும்

# ரமழான் நோன்பாளிகளுக்கும் 5,000 ரூபா நிவாரணப் பணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



குறைந்த வருமானம் பெறும் ரமழான் நோன்பாளிகளுக்கும் 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு இறுதித் திகதி இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார். சமுர்த்தி அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். 06

# சவூதியில் 41 இலங்கைப் பெண்கள் நீண்டகாலமாக தடுத்து வைப்பு

### சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

சவூதி அரேபியாவில் இலங்கையைச் சேர்ந்த 41 பணிப்பெண்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபை இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது. சுமார் 18 மாதங்களாக இவர்கள் அனைவரும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் பெண்கள் மீது எந்த விதமான குற்றச்சாட்டுகளும் இதுவரையில் பதிவு செய்யப்படவில்லையெனவும் 06


ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 15-18 |
| --- | --- |
| சஹர் | 04-31 |
| சுபஹ் | 04-46 |
| சூ.உதயம் | 06-03 |
| லுஹர் | 12-12 |
| அஸர் | 03-19 |
| மஃரிப் | 06-19 |
| இஷா | 07-30 |

DETERGENT POWDER
Hotline: 077 4648855


### தடை செய்யப்பட்ட அமைப்புகளில் அங்கம் வகிப்போரை

# பள்ளிவாசல் பொறுப்புகளிலிருந்து விலகுமாறு வக்பு சபை அறிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

தடை செய்யப்பட்டுள்ள 11 இஸ்லாமிய அமைப்புகளிலுள்ளவர்கள் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் இருக்கும் பட்சத்தில் உடனடியாக அந்தப் பதவிகளிலிருந்து விலகுமாறு வக்பு சபை அறிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட இந்த அமைப்புகளுடன் தொடர்புள்ள நபர்கள் தம்வசமுள்ள பள்ளிவாசல் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மீள ஒப்படைக்குமாறும் அறிவித்துள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அஷ்ரப் அறிவித்துள்ளார். ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத் (UTJ), சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் (CTJ), ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத் (SLTJ), அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் (ACTJ), பரகஹதெனியவில் தலைமையகத்தைக் 06

# தப்பிச்சென்ற கெப் வாகனம் மீது அதிரடிப்படை துப்பாக்கிச் சூடு

### இருவர் காயம்; மணல் கொள்ளையர்கள் என சந்தேகம்



**நாகர்கோவில் விஷேட, யாழ்.விசேட நிருபர்கள்**

மணல் கடத்தல்காரர்கள் மீது விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டதுப்பாக்கிபிரயோகத்தில்குடும்பஸ்தர்கள் இருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மணல் கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டதாக விசேட 06

### வாகன விபத்துகளில்

# 48 மணி நேரத்துள் 30 பேர் பலியாகினர்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



புத்தாண்டுடன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரையான 48 மணி நேரத்துள் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 30 பேர் உயிழந்துள்ளதுடன், 150 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 06

### விக்கல் வீராச்சாமி



அரசுக்கு எதிரான செய்திகள மட்டும் போடுவதையே சில ஊடகங்கள் தங்கட ஊடக தர்மமாக கடைப்பிடிக்குது.....

எதிரான செய்திகளை போட்டாத்தான் தங்கட ஊடகம் நல்ல விலை போகு– மெண்டு அவை நினைக்கினம் போல ...!!!

# சர்வதேச செய்திகள்

## தடைக்கு விளக்கம்: அமெரிக்க தூதுவருக்கு ரஷ்யா அழைப்பு

### இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம்

ரஷ்யா தன் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகள் குறித்துப் பேச, மொஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரை அழைத்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா மீது தடைகளை அறிவித்து, ரஷ்ய இராஜதந்திரிகள் 10 பேரை நாட்டைவிட்டு வெளியேற்றியதை அடுத்து ரஷ்யாவின் அழைப்பு வந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தலையிட்டது, இணைய ஊடுருவல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் ரஷ்யா மீது அமெரிக்கா தடைகளை விதித்தது. இந்தத் தடை உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வியாழக்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எடுத்துள்ள மிகக் கடுமையான நடவடிக்கையாக அது கருதப்படுகிறது.

எனினும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை ரஷ்யா மறுத்துள்ளது.

ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான உறவில் பதற்றமான சூழலிலேயே



இந்தத் தடை கொண்டுவரப்பட்டுள்ளது. ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னிக்கு நஞ்சூட்டிய விவகாரத்தில் ஏழு ரஷ்ய அதிகாரிகள் மற்றும் பல டஜன் ரஷ்ய நிறுவனங்கள் மீது அமெரிக்கா கடந்த மாதம் தடை விதித்திருந்தது. இந்த சம்பவத்தில் தமக்கு தொடர்பு இல்லை என்று ரஷ்யா கூறி வருகிறது. இத்தகைய நடவடிக்கை பற்றி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் ஏற்கனவே எச்சரித்துவிட்டதாக ஜனாதிபதி பைடன் கூறினார். எனினும் ரஷ்யா உடனான சர்ச்சையைப் பெரிதுபடுத்துவது அமெரிக்காவின் நோக்கமல்ல என்று பைடன் கூறினார். நிலையான இருதரப்பு உறவை ஏற்படுத்தவே தாம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக அமெரிக்கப் புலனாய்வுத் துறை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து அண்மையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்க அரசாங்கத் தொடர்புக் கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட பெரிய அளவிலான ஊடுருவல் சம்பவத்தையும் ரஷ்யா வழிநடத்தியதாக வொஷிங்டன் குற்றஞ்சாட்டுகிறது.

## இளவரசர் இறுதிச் சடங்கு: அரச குடும்பத்தில் சர்ச்சை



காலமான இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கிற்கு இளவரசர் ஹரியும் இளவரசர் அண்ட்ரூவும் இராணுவச் சீருடை அணிய வேண்டுமா என்பது குறித்து இடம்பெற்ற விவாதத்தில் எலிசபத் அரசியார் தலையிட நேர்ந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

பொதுவாக, அரசக் குடும்பத்தின் அதிகாரத்துவ நிகழ்ச்சிகளில் அரசக் குடும்ப உறுப்பினர்கள் இராணுவச் சீருடை அணிவது வழக்கம்.

பிரிட்டிஷ் இளவரசர் ஹரி அவரது அரசக் கடமைகளிலிருந்து விலகியுள்ளதால், இராணுவத்துடனான அவரது தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவர் தம்முடைய இராணுவச் சீருடையில் இறுதிச் சடங்கில் பங்கேற்க விரும்பியதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் வெளிவந்த தகவல்களுக்கு பக்கிங்ஹம் அரண்மனை பதிலளிக்க மறுத்து விட்டது.

இந்த விவகாரத்தில் 94 வயது எலிசபத் அரசியார் தலையிட்டு, அனைவரும் துக்கம் அனுசரிக்கும் உடைகளில் இருக்க வேண்டும் என்று முடிவுசெய்துள்ளதாக டெய்லி மெயில் செய்தி நிறுவனம் கூறியது. இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் கடந்த வாரம் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

99 வயதான அவரின் உடல் இன்று சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படுகிறது.

## கொரோனா நோயாளர்களுக்கு பிரேசிலில் மருந்து தட்டுப்பாடு



பிரேசிலில் உள்ள மருத்துவமனைகளில் கொவிட்–19 நோயாளிகளுக்குப் பயன்படுத்தும் மயக்க மருந்திற்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றின் உடனடி இறக்குமதிக்கு அந்நாட்டு அரசாங்கம் ஏற்பாடுசெய்து வருகிறது.

முறையான மயக்க மருந்து செலுத்தப்படாமல் மோசமாக நோய்வாய்ப்பட்ட நோயாளிகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேவையான மருந்து குறித்து ஸ்பெயின் உள்ளிட்ட மற்ற நாடுகளுடன் கலந்துரையாடி வருவதாக பிரேசிலின் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கான பிராணவாயு விநியோகத்திலும் பற்றாக்குறை நிலவுவதாக அவர் கூறினார்.

பிரேசிலில் கொவிட்–19 நோயால் சுமார் 362,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

எந்த நாட்டிலும் இல்லாத எண்ணிக்கையாக பிரேசிலில் தினமும் வைரஸ் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தற்போதைய வைரஸ் பரவல் நிலவரத்தைச் சமாளிக்க முடியாமல் அங்குள்ள மருத்துவமனைகள் சிரமப்பட்டு வருகின்றன.

## ஐ.எஸ் தகர்த்த மொசூல் பள்ளிவாசல் புனரமைப்பு



நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழுவால் தகர்க்கப்பட்ட மொசூலின் பெரிய பள்ளிவாசலான அல் நூர் பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்யும் போட்டியில் எகிப்து கட்டடக்கலைஞர்கள் குழு ஒன்று வெற்றி பெற்றுள்ளது.

மொசூல் நகரை கைப்பற்ற அரச படை முன்னேறியபோது 2017 ஜூன் மாதத்தில் இந்தப் பள்ளிவாசலை ஐ.எஸ் வெடி வைத்து தகர்த்தது.

இதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஐ.எஸ் குழு தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி இந்த பள்ளிவாசலில் இருந்தே, தன்னிச்சையாக கலீபத் ஒன்றை அறிவித்திருந்தார்.

மொசூல் நகரை புத்துயிர்பெறச் செய்யும் ஐ.நா திட்டதின் கீழே இந்தப் பள்ளிவாசல் புனரமைக்கப்படவுள்ளது.

பள்ளிவாசலை வடிவமைப்பது தொடர்பில் 123 நிறுவனங்கள் போட்டியிட்ட நிலையில் எகிப்தின் எட்டு கட்டடக்கலைஞர்களின் வடிவமைப்பு வெற்றிபெற்றுள்ளது.

ஒன்பது மாதங்கள் வரை நீடித்த மொசூல் நகர மோதலால் அந்த நகர் முற்றாக அழிந்துள்ளது. இதில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டதோடு 90,000க்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில் மொசூல் பள்ளிவாசலை புனரைப்பது அந்த நகரின் மீள் கட்டுமானத்தின் முக்கிய அடையாளமாக பார்க்கப்படுவதாக ஐ.நா கலாசார நிறுவனமான யுனெஸ்கோவின் தலைவர் அவுட்ரே அசூலாய் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதியில் பள்ளிவாசல் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## சீன நிறுவனத்திற்கு அமெ. அழைப்பாணை

தகவல் மற்றும் தொடர்பாடல் வழங்கலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயற்பாட்டை மேற்கொண்டது தொடர்பில் விசாரணைக்காக பெயர் குறிப்பிடப்படாத சீன நிறுவனம் ஒன்றுக்கு அமெரிக்க அரசு அழைப்பாணை விடுத்திருப்பதாக அமெரிக்க வர்த்தகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



‘இந்த அழைப்பாணை வர்த்தகத் திணைக்களம் தகவல்களை சேகரிக்க அனுமதிப்பதோடு அது அமெரிக்கா மற்றும் அதன் மக்களுக்கு உள்ள அச்சுறுத்தல் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதில் உதவும்’ என்று வர்த்தகத் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டு எதிரிகளிடம் இருந்து தகவல், தொடர்பாடல் மற்றும் சேவை வழங்கல் வலைப்பின்னலை பாதுகாக்கும் நோக்கில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட உத்தரவின் இணக்கப்பாட்டிற்கு அமைய, இந்த நிறுவனத்தின் மூலமான பரிவர்த்தனைகளை வர்த்தகத் திணைக்களம் மீளாய்வு செய்யவுள்ளது.

சீனாவின் முன்னணி சுப்பர் கம்யூட்டர் மையங்களுடனான வர்த்தகங்களில் அமெரிக்கா கடந்த வாரம் கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது. அவை நவீன ஆயுதங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு முறைமைகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படலாம் என்று அதற்கு காரணமாகக் கூறப்பட்டது.



## தடுப்பூசியை விடவும்: கொரோனா தொற்றால் இரத்தக்கட்டு அபாயம்

மூளையில் இரத்தக்கட்டு ஏற்படும் அபாயம் தடுப்பூசி போட்டுக்கொண்டோரை விட கொவிட்–19 நோய்க்கு ஆளானோருக்கு மிக அதிகம் என்று பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

சிலவகைத் தடுப்பு மருந்துகளைப் போட்டுக்கொண்டோருக்கு இரத்த உறைவு ஏற்பட்டதாகத் தகவல் வந்துள்ள நிலையில் தடுப்பூசிகள் குறித்துக் கேள்விகள் எழுந்துள்ளன.

அஸ்ட்ராசெனக்கா, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் ஆகிய நிறுவனங்களின் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டோரில் சிலரிடையே அரிய வகை இரத்தக் கட்டிகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு ஒன்றில், கொவிட்–19 நோய் அடையாளம் காணப்பட்ட 1 மில்லியன் பேரில் 39 பேருக்கு அத்தகைய இரத்தக் கட்டி ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டது. அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி போட்டுக் கொண்ட 1 மில்லியன் பேரில் ஐவர் பாதிக்கப்பட்டனர்.

பைசர் தடுப்பூசி பெற்ற ஒரு மில்லியன் பேரில் நால்வருக்கு இரத்தக் கட்டி ஏற்பட்டது.



## ‘பைசர்’ தடுப்பூசியை 3ஆவது முறையாகவும் போட வாய்ப்பு

பைசர் தடுப்பூசியை முழுமையாகப் போட்டுக்கொண்ட ஒரு வருடத்திற்குள், மூன்றாவது முறை தடுப்பூசி போடத் தேவைப்படலாம் என்று பைசர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஒளிபரப்பப்பட்ட நேர்காணலில் அவர் அதுபற்றிப் பேசினார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக, வருடந்தோறும் தடுப்பூசி போட்டுக்கொள்ளத் தேவைப்படலாம் என்றும் ஆல்பர்ட் பொர்லா கூறினார்.

எந்த வரிசையில், எத்தனை முறை போட்டுக்கொள்வது போன்ற விபரங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று அவர் சி.என்.பி.சி செய்தியின் நேர்காணலில் குறிப்பிட்டார்.

ஆறிலிருந்து 12 மாதங்களுக்குள் மூன்றாவது முறை தடுப்பூசி போட்டுக்கொள்ளத் தேவைப்படலாம், அதன் பின்னர் வருடந்தோறும் மீண்டும் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம் என்று அவர் கூறினார். ஆனால் அவை அனைத்தும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார் அவர்.

புதிய வகை வைரஸ் தொற்றுகள் இதற்கு முக்கியப் பங்கு வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசிகள் எவ்வளவு காலம் பாதுகாப்பு அளிக்கும் என்பது தற்போது ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியவில்லை.

## அமெரிக்க பொலிஸாரால் சிறுவன் சுட்டுக் கொலை



அமெரிக்காவின் சிகாகோவில் பொலிஸாரால் 13 வயது சிறுவன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

அந்த சம்பவத்தின் வீடியோ காட்சியை இரண்டு வாரம் கழித்து சிகாகோ பொலிஸார் வெளியிட்டுள்ளனர். ஒன்பது நிமிடம் ஓடக் கூடிய பொலிஸாரின் உடலில் பொருத்தப்பட்ட கெமராவினால் எடுக்கப்பட்ட வீடியோவில், ஒரு காரில் இருந்து அந்த அடையாளம் தெரியாத பொலிஸ் அதிகாரி இறங்கி வருவதையும் தோலேடோ என்ற சிறுவனை மடக்கி கைகளை உயர்த்தச் சொல்வதையும் பின்னர் துப்பாக்கியால் சுடுவதையும் காட்டுவதாக உள்ளது. சுடப்பட்ட சிறுவன் சுருண்டு விழுந்து உயிரிழந்தான்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டான்ட் என்ற கறுப்பின இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய சம்பவத்தையடுத்து பொலிஸாரின் அராஜகத்தை விளக்கும் இன்னொரு வீடியோ காட்சியாக இது கடும் சர்ச்சைக்குள்ளானது.

## அமெரிக்க அமைதித் திட்டம்: தலிபான் அமைப்பு நிராகரிப்பு



ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் அமைதி முயற்சியை ஆரம்பிப்பது மற்றும் அமெரிக்க துருப்புகள் வாபஸ் பெறுவதை ஆறு மாதங்கள் ஒத்தி வைத்திருப்பதை தலிபான்கள் நிராகரித்துள்ளனர்.

தலிபான்களின் இணைய தளப் பக்கத்தில் இந்த அறிவிப்பு ஆங்கில மொழியில் வெளியாகி இருப்பதாக அமெரிக்காவின் செய்தித் தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

‘பைடனின் கருத்து மற்றும் அறிவிப்பான, ஆக்கிரமிப்புப் படைகள் இணங்கிய திகதிக்கு வெளியேறாவிட்டால் இஸ்லாமி எமிரேட் கடுமையான பதில் நடவடிக்கை எடுத்து, தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படும்’ என்று தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

நேட்டோ மற்றும் அமெரிக்கத் துருப்புகள் மே 1 ஆம் திகதிக்கு வெளியேறத் தவறினால் தாக்குதல் நடத்தப்படும் என்ற முந்தைய எச்சரிக்கையையே அந்த அமைப்பு மீண்டும் விடுத்துள்ளது.

“ஆறு மாத நீடிப்புத் தொடர்பில் தலிபான்களுடன் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு உடன்படிக்கையும் எந்த நன்மையையும் தராது” என்றும் தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் கடந்த இரண்டு தசாப்தங்களாக மோதல் மற்றும் வன்முறைகளை சந்தித்து வருகிறது. இந்த தொடர்ச்சியான வன்முறைகள் மற்றும் அரசியல் செயலற்ற தன்மை அந்நாட்டின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்திருப்பதோடு அங்கு அமைதி முயற்சியையும் சாத்தியமில்லாமல் செய்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 17 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
15 முதல் 18 வரை
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.11
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் சித்திரை 4
ராகுகாலம் : காலை : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பஞ்சமி



### இறக்குமதி உணவுப் பொருட்களில் நச்சு பதார்த்தங்கள்

# விரிவான விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சுக்கு கோப் குழு அறிவுறுத்தல்

நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களில் உள்ளடங்கியிருக்கும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான அதிகாரம் சுகாதார அமைச்சுக்கே இருப்பதாகவும், இதற்கமைய உணவுப் பொருட்களில் காணப்படும் தீங்கிளைக்கும் பதார்த்தங்கள் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.



உணவுகளைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும், உணவுப் பாதுகாப்பு தொடர்பான சட்டம் விரைவில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண குறிப்பிட்டார்.

உணவுகளைப் பரிசோதனை செய்யும் ஆய்வுகூடங்களுக்கிடையில் உரிய தொடர்புகள் இன்மையால் நிலைமை தற்பொழுது மோசமடைந்துள்ளது என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன்னாள் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய வேலைத்திட்டமொன்று இன்மையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், மற்றும் 2017 / 2018 ஆண்டு காலப் பகுதியில் சுகாதார அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, சுகாதார அமைச்சின் செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கூடியபோதே இவ்விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டன.

சுகாதார அமைச்சின் சட்ட திட்டங்களே உணவுப் பாதுகாப்புக்காக நடைமுறைப்படுத்தப்படுவதால், உணவுகளின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பது அவசியமானது என்றும் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, வீரசுமன வீரசிங்ஹ ஆகியோரும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களில் புத்தாக்கத்திட்டங்களை ஊக்குவிக்க 346 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2017ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 34 புத்தாக்க ஆய்வுத் திட்டங்களுக்காக 399 மில்லியன் ரூபா அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் குழு விசேட கவனம் செலுத்தியது.

2006ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் 31.71 மில்லியன் ரூபா செலவில் 224 கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் 15 வருடங்களுக்கு மேலாக அவை செயலற்ற நிலையில் இருப்பது தொடர்பில் குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

## ரமழான் சிந்தனை

# நோன்பின் நோக்கம்

அல்லாஹ்தஆலா காலத்திற்கு காலம் மனிதர்களில் இருந்து தான் இறைத்தூதர்களாகத் தெரிவு செய்துள்ளான். அவர்கள் நோன்பு நோற்று பக்குவப்பட்ட நிலையில் தான் அவனது இறை வேதங்களை அவர்களுக்கு அருளியுள்ளான். அவர்களில் இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), தாவூத் (அலை), இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) உள்ளிட்ட இறைத்தூதர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இதன்படி இறைத்தூதர்களும் அவர்களது சமூகங்களும் ஈருலகுக்கும் ஏற்ப பக்குவப்படுத்தப்படவென நோன்பு பயன்படுத்தப்படுள்ளது என்பது தெளிவாகின்றது.

அதாவது ஒரு விடயம் எவ்வளவு தான் நோக்கம் நிறைந்ததாகவும் பயனுள்ளதாகவும் இருந்தாலும் மனிதனின் உள்ளம் அதனை ஏற்றுக் கொள்வதற்கு தூண்டுதலும் உதவியும் அவசியம். அப்போது தான் அதனை உள்ளம் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளும். அந்த வகையில் தான் ஒவ்வொரு சமூகத்திற்கும் கடமையாக்கப்பட்ட நோன்பின் பிரதான நோக்கமாக மனித உள்ளங்களை இறையச்சத்திற்கும் இறை உணர்வுக்கும் ஏற்ப தயார்படுத்தல் அமைந்திருக்கின்றது.

ஏனெனில் மனிதனின் உணர்ச்சிகளும், இச்சைகளும், எண்ணங்களும், எதிர்பார்ப்புக்களும் கட்டுக் கடங்காமல் தவறான பாதையில் செல்வதைத் தவிர்த்து அவற்றை நெறிப்படுத்தி மனிதனை நேர்வழியில் இட்டுச்செல்லவே நோன்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலைகுலையாத பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் இறையச்சம் மற்றும் இறை நினைவைப் பெற்றுக்கொள்வதற்கான சிறந்த ஏற்பாடாக விளங்குகிறது நோன்பு. இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சம், விமோசனம் பெற்றிட அல்லாஹ்வை எந்நேரமும் மனதில் கொண்டு நினைவில் இறுத்தி மனிதன் இயங்க வேண்டும். அதனால் தான் அல் குர்ஆனில் ' நம்பிக்கையாளர்களே... உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. (அதனால்) நீங்கள் இறையச்சமுடையவராகலாம்'. (02 1 83) என்று அல்லாஹ் குறிப்பிட்டிருக்கின்றான்.

ஆகவே ஈருலக வாழ்விலும் சுபீட்சம் பெறுவதற்கு ஏற்ப இறை நினைவின் ஊடாக ரமழான் மாத நோன்பு காலத்தை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# யாழில் வறிய குடும்பத்துக்கு படையினர் வழங்கிய வீடு

### இராணுவத் தளபதியால் நேரில் கையளிப்பு

**யாழ்.குறூப் நிருபர்**

பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும், கொவிட் 19 பரவலை தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்துக்கான தனது விஜயத்தின் போது யாழ்ப்பாணத்தின் கிராண்ட் பஜாரில் இராணுவத்தால் வறிய குடும்பத்திற்காக கட்டப்பட்ட புதிய வீட்டை கையளித்தார்.

யாழ். பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் அழைப்பின் பேரில் நிகழ்வில் கலந்துகொண்ட ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத்தால் கட்டடப்பட்ட வீட்டின் 06

### பேலியகொடை மீன் சந்தையின்

# குறைகளை நிவர்த்தி செய்வதில் அமைச்சர் டக்ளஸ் அதீத கவனம்

பேலியகொடை மத்திய மீன் சந்தைக்கான கண்காணிப்பு விஜயம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று(16) மேற்கொண்டார்.

கடந்த 12 ஆம் திகதி கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்த கடற்றொழில் அமைச்சரினால் அவதானிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்குடனேயே இந்த விஜயம் அமைந்திருந்தது.



கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் விஜயத்தின் போது, வடிகான் கட்டமைப்பு, ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் வாகன தரிப்பிடத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் விசாரித்ததுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கு வடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகளிடம் உறுதியளித்தார்.

குறிப்பாக அன்றைய தினம் வாகனங்கள தரித்து வைப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவு படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் எவரும் இல்லாதால் நேற்று(16) அதிகாலை அங்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வாகன தரிப்பிடத்திற்கு பொறுப்பான அதிகாரி இவ் விடயம் தொடர்பாக தெளிவூட்டினார்.

இதன் போது கருத்து தெரிவித்த அவ்வதிகாரி, வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதிய இடவசதி இல்லையெனவும் பக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியை பெற்றுக் கொடுத்தால் அக் குறையை நிவர்த்தி செய்யலாமென அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.

சந்தை வளாகத்தில் ஒரு சில பகுதிகளில் மின் விளக்குகள் இல்லையெனவும் அதனால் வாகன உரிமையாளர்கள் இரவு நேரங்களில் அப்பகுதிக்கு செல்ல தயங்குவதாகவும் அவர் அமைச்சரிடம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஒரு சில வியாபாரிகள்கள் மீன் வெட்டும் பகுதிகளை தங்களது களஞ்சியங்களாக பயன்படுத்துவதால் தங்களுக்கான வருமானம் பாதிக்கப்படுவதாக ஐஸ் உற்பத்தி நிலையத்தின் அதிகாரி ஒருவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

அதிகாரிகள் தரப்பில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளை செவிமடுத்த கடற்றொழில் அமைச்சர், தன்னை அமைச்சு அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படியும் உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

# இந்த மாத இறுதியில் GCE (A/L) பெறுபேறு

நடைபெற்று முடிந்த க. பொ. த. உயர் தர பரீட்சை பெறுபேறுகளை இந்த மாத இறுதியில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டு, மூன்று மாத காலப் பகுதிக்குள் பல்கலைக்கழக பிரவேசத்திற்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிட எதிர்பார்க்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவரு தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அரசியல் பழிவாங்கல்கள்

# விசாரணை அறிக்கை மீதான விவாதம் திங்களன்று தீர்மானம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீது பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவது குறித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்படுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீது கடந்த பாராளுமன்ற அமர்வில் இரண்டு நாட்கள் விவாதம் நடத்த ஏற்கனவே கட்சித் தலைவர்கள் இணங்கியிருந்த போதிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாத்தில் உரையாற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் முகமாக இந்த விவாதம் பிற்போடப்பட்டது.

இந்நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார். இதன் போது ஏற்கனவே எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகளின் பிரகாரம் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீது விவாதம் நடத்த தீர்மானிக்கப்படுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க கூறியுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை சபையில் ஆளுங்கட்சி சமர்ப்பிக்கவுள்ளதாகவும் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இதன் மீது விவாதம் நடத்தப்படுமெனவும் அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# 6 கட்சிகளின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆறு அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

அக்கட்சிகளின் உள்ளக நெருக்கடிகள் தொடர்பில் தற்போது நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில் மேற்படி ஆறு அரசியல் கட்சிகளினதும் செயற்பாடுகளை 06

# மத்திய வங்கியின் நிச்சயமற்ற கணக்கில் தோட்டத் தொழிலாளர்களின் ETF, EPF

### *தனியான கணக்கில் வைப்பிலிட CWC நடவடிக்கை - சட்டத்தரணி கா. மாரிமுத்து*

ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, ஸ்ரீலங்கா அரச பெருந்தோட்ட யாக்கம் மற்றும் எல்கடுவ பிளாண்டேசன் ஆகியவற்றின் கீழ் இயங்கும் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன அறவிடப்பட்டு சரியான விபரம் இல்லாத காரணத்தினால் மத்திய வங்கியில் நிச்சயமற்ற வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தனியான வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்ய துரித நடவடிக்கை எடுக்குமாறு இ.தொ.கா உபதலைவரும், சட்டத்தரணியுமான கா. மாரிமுத்து கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் இ.தொ.காவின் பிராந்திய இயக்குனர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இது பற்றி கடந்த 08ஆம் திகதி தொழில் திணைக்களத்தில் தொழில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்கங்களுக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. இதனோடு 09ஆம் திகதி மத்திய வங்கியிலும் இது தொடர்பாக விசேட கூட்டமும் நடைபெற்றது. இதன் அடிப்படையில் தோட்டங்களில் தொழில்புரியும் தொழிலாளர்களின் "ட" கார்ட், தேசிய அடையாள அட்டை போன்றன இல்லாத காரணத்தினால் நிரந்தர வைப்பீட்டில் வைப்பீடு செய்ய முடியவில்லை.

எவ்வாறாயினும் பிரதேச மட்டத்தில் பகுதிவாரியான தோட்ட நிர்வாகங்களோடு தொடர்பு கொண்டு இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதோடு சம்பந்தப்பட்டவர்களின் கணக்கில் மத்திய வங்கியில் வைப்பீடு செய்வதற்கு உடன் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிராந்திய இயக்குனர்களுக்கு அனுப்பப்பட்ட தனது சுற்றறிக்கையில் சட்டத்தரணி கா. மாரிமுத்து கேட்டுக்கொண்டுள்ளார்.

# தரம்– 5 மாணவர்களுக்கான நூல் தமிழ் சங்கத்தில் நாளை வெளியீடு

கொழும்பு_4 இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ஏ.சந்திரபவன்(BA, Dip in teach, PGDE, M.Ed) எழுதிய 'சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்_ தரம்5' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை(18.04.2021) பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ரி.முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில், இந்துக் கல்லூரி அதிபர் கடம்பேஸ்வரன் மணிமார்பன் முதன்மை அதிதியாகவும், கொழும்பு வலயக் கல்விப் பணிமனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பிரபா, இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் ரி.பி. பரமேஸ்வரன், கொ/சைவமங்கையர் வித்தியாலய அதிபர் அருந்ததி இராஜவிஜயன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

முதல் பிரதியை உதவி அதிபர் எஸ்.கே. சோதிலிங்கம் பெற்றுக் கொள்வார். 06

# சுகாதார வழிமுறைகளை மீறுவோரை கைது செய்ய விசேட நடவடிக்கை

சுகாதார வழிகாட்டல்களை மீறுகின்றவர்களை கண்டுபிடிக்க விசேட நடமாடும் சேவையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சோதனை நடவடிக்கை இன்றும் நாளையும் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்கள் கூடிய கரிசனை செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.83 | 156.99 |
| கனடியன் டொலர் | 154.86 | 161.91 |
| யூரோ | 232.95 | 241.65 |
| ஜப்பான் யென் | 1.7981 | 1.8625 |
| சிங்கப்பூர் டொலர் | 145.93 | 151.67 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 268.19 | 278.09 |
| சுவிஸ் பிராங்க் | 210.74 | 220.32 |
| அமெரிக்க டொலர் | 195.72 | 201.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 530.33 |
| குவைத் டினார் | 663.04 |
| ஓமான் ரியால் | 519.32 |
| கட்டார் ரியால் | 54.90 |
| சவூதி ரியால் | 53.30 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.43 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 04ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 04

## குறள் தரும் சிந்தனை



வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்

*புகழ் என்னும் பெரும் செல்வத்தைப் பெறாது போனால், இந்த உலகத்தவர்க்கு அதுவே பழி என்று அறிந்தோர் கூறுவர்.*

# உயிர்ப் பாதுகாப்பில் அக்கறை கொள்வது அனைவரதும் பொறுப்பு

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் இடம்பெற்றுள்ள அகால மரணங்கள் அதிர்ச்சியும், கவலையும் தருகின்றன. இருபத்து நான்கு மணி நேரத்தில் மாத்திரம் வீதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகள் காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளதாக நேற்றுக் காலை வெளியான உறுதிப்படுத்தப்பட்ட தகவலொன்று தெரிவித்தது.

அதேசமயம் பதுளை மாவட்டத்தில் உள்ள அல்துமுல்ல என்று இடத்தில் புத்தாண்டு விடுமுறைக் கொண்டாட்டத்துக்காக சென்றிருந்த வேளையில், ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தவர்களில் மூவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். புத்தாண்டு காலப் பகுதியில் இடிமின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி வன்னி பகுதியில் மூவரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருவருமாக மொத்தம் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

இவை அனைத்துமே புத்தாண்டு காலத்தில் சற்றேனும் எதிர்பார்க்காத விதத்தில் சம்பவித்துள்ள அநியாய உயிரிழப்புகள் ஆகும். வாகன விபத்துகள் மற்றும் நீரில் மூழ்கிய மரணங்களுக்கெல்லாம் காரணம் உயிர் மீதான அச்சமின்மையும், அலட்சியமும் ஆகும். அதே சமயம் இடிமின்னல் வேளையில் அவதானமாகவும், பாதுகாப்பாகவும் நடந்து கொண்டால் உயிராபத்தை பெருமளவில் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

வீதிகளில் இடம்பெறுகின்ற வாகன விபத்துகளால்தான் நாட்டில் இப்போது கூடுதலான மரணங்கள் சம்பவிக்கின்றன. ஒரு வருட காலத்துக்கு முன்னர் வீதி விபத்துகளால் தினமும் சம்பவிக்கின்ற உயிரிழப்புகளின் எண்ணிக்கை 7 ஆக இருந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை தினமும் இப்போது சுமார் 9 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழப்புகளைத் தவிர படுகாயமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தபடியே செல்கின்றது.

இலங்கையில் கடந்த வருடம் தமிழ்_சிங்களப் புத்தாண்டை மக்கள் கொண்டாடவில்லை. கடந்த வருடம் கொவிட்19 அலை தலைதூக்கியிருந்ததால் மக்கள் தத்தமது வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். இவ்வருட சித்திரைப் புத்தாண்டின் போது கொவிட் அலை பெருமளவில் தணிந்து விட்டதனால் புதுவருடத்தை மக்கள் விமரிசையாகக் கொண்டாடுவரென பொதுவாகவே எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை புத்தாண்டை கொரோனா அச்சுறுத்தல் கருதி, சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தபடி அமைதியான முறையில் கொண்டாடுமாறு மக்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டும் இருந்தது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நாடெங்கும் ஏற்கனவே வீதிவிபத்துகள் அதிகரித்திருப்பதனால் புத்தாண்டு காலத்தில் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களின் சாரதிகளை மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறு போக்குவரத்து பொலிசார் அறிவுறுத்தி இருந்தனர். ஏனெனில் நாட்டில் இவ்வாறான பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துகளும், அதனால் சம்பவிக்கின்ற மரணங்களும் அதிகரிப்பது வழமை ஆகும்.

எவ்வாறான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றபோதிலும் வாகன விபத்துகள் சற்றும் குறையவே இல்லை. சித்திரைப் பண்டிகை கொண்டாடப்படுகின்ற இந்நாட்களில் கடந்த வருடத்தைப் பார்க்கிலும் விதிவிபத்துகள் அதிகரித்தே காணப்பட்டன. கடந்த காலத்தை விட இவ்வருடம் உயிரிழப்புகளும் அதிகமாகும்.

வாகன விபத்துகளை எடுத்துக் கொள்வோமானால் மோட்டார் சைக்கிள் விபத்துகளே அதிகமாக இடம்பெற்றுள்ளன. சிதறுண்டு போய்க் கிடக்கும் மோட்டார் சைக்கிள்கள், படுகாயமடைந்த நிலையிலான உயிரற்ற உடல்கள் போன்றவை தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படுகின்ற போது வீதி விபத்துகளின் அகோரம் புரிகின்றது. வாகன விபத்துக் காட்சிகளும், உயிரிழப்புத் தகவல்களும் கவலை தருகின்றன.

உயிரிழப்போரில் கூடுதலானவர்கள் இளைஞர்களென்பது தெரிந்த விடயம். விபத்தின் தன்மையைப் பார்க்கின்ற போது, கட்டுப்படுத்த முடியாத அதிகரித்த வேகமே இதற்கெல்லாம் காரணமென்பது நன்கு தெரிகின்றது. இளவயது துடிப்பும், வேகமுமே உயிரிழப்புக்கான காரணங்களாக அமைந்துள்ளன. அதுவும் வாகனமோட்டிகளில் பலர் மதுபோதையில் வாகனம் செலுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவது விபத்தைக் கொண்டு வருமென்ற அறிவுறுத்தல் எப்போதும் வழங்கப்பட்டே வருகின்றது. ஆனாலும் மதுபானம் அருந்தி விட்டு வாகனம் செலுத்துவோர் அக்குற்றத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டபடியே வருகின்றனர். போக்குவரத்துப் பொலிசாரின் பிடியில் இருந்து தப்பிக் கொள்ள வேண்டுமென்பதே அவர்களின் எண்ணமே தவிர, வாகன விபத்தினால் தனது உயிருக்கும், மற்றையோரின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுமென்ற சிந்தனை அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்துவோர் தங்களது உயிருக்கு மாத்திரமன்றி மற்றையோரின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கின்றனரென்பதை மறந்து விடலாகாது. அதுமட்டுமன்றி, தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற அக்கறை ஒவ்வொருவருக்கும் எந்நேரமும் இருப்பது அவசியம். அலட்சியப் போக்கு உள்ளவர்களின் உயிரை பொலிசார்தான் வந்து காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் தவறானது.

நாட்டின் ஒவ்வொரு இடத்திலும் பொலிசாரை கடமையில் ஈடுபடுத்துவதென்பது முடியாத காரியம். ஆனால் ஆபத்து நேரும் போது பொலிசாரை பாதுகாப்புக்கு அழைப்பது அவசியம். முதலில் ஒவ்வொருவருக்கும் தத்தமது உயிர் மீதான அக்கறை அவசியம். இடிமின்னல் தாக்கம், நீரில் மூழ்குதல், வீதிவிபத்துகள் போன்ற ஒவ்வொன்றுமே விபத்துகளாகும். அவற்றில் இருந்து நம்மை நாமே காத்துக் கொள்வதில் அலட்சியமாக இருந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வெள்ளி விழா

கிழக்கு மாகாணத்தில் மூத்த ஊடக வரலாறு கொண்ட முதன்மை அமைப்புக்களில் ஒன்று அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனமாகும்.

1995 ஏப்ரல் 30 ஆம் திகதி 'அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது தமிழ்_முஸ்லிம் ஊடகவியலாளர்களை அரவணைத்துக் கொண்டு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கமாக பெயர் மாற்றம் பெற்று செயற்பட்டு வருகின்றது.

26 ஆவது வருடத்தில் கால் பதித்து வெள்ளிவிழா காணும் இச்சங்கத்தின் நடப்பாண்டுக்கான தலைவராக மருதமுனையைச் சேர்ந்த பீ.எம்.எம்.ஏ. காதர் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். சாய்ந்தமருது பொலிவோரியன் கிராம எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின் போதே இத்தெரிவு நடைபெற்றது.

பொதுச் செயலாளராக சம்மாந்துறை ஏ.ஜே.எம். ஹனீபாவும், பொருளாளராக கல்முனை யூ.எம்.இஸ்ஹாக்கும், சிரேஷ்ட ஆலோசகர்களாக கலாபூஷணங்களான மீரா இஸ்ஸத்தீன், ஏ.எல்.எம்.சலீம் மற்றும் எம்.எல்.எம்.ஜமால்டீன் ஆகியோரும் தெரிவாகினர். கடந்த ஆண்டுக்கான நிருவாகக் குழுவிலுள்ள அனைவரையும் நடப்பாண்டின் நிருவாகமாகக் கொண்டு செயற்படுமாறு சபை அனுமதி வழங்கியதன் பிரகாரம் தலைவர் மீரா இஸ்ஸத்தீனின் வழிமொழிதலுடன் புதிய நிருவாகத் தெரிவு நடைபெற்றது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது தலைவராக ஏ.எல்.எம்.சலீம் (9596) தெரிவானார். அதனைத் தொடர்ந்து கலாபூஷணங்களான எம்.ஏ.பகுறுதீன் (9799), மீரா இஸ்ஸத்தீன்(992020), பீ.எம்.எம்.காதர் வரை நான்கு பேர் தலைவராக தெரிவாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 26 ஆண்டுகளை எட்டிய நிலையில் அதில் 21 ஆண்டுகள் மீரா இஸ்ஸத்தீன் தலைவராக இருந்துள்ளார். யுத்த சூழல் மற்றும் அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலகட்டத்தில் சங்கத்தை துணிச்சலுடன் நின்று வழிநடத்தியவர் அவர். ஊடகவியலாளர்களுக்கு எதிராக தனிப்பட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பழிவாங்கல்கள் இடம்பெற்ற போதெல்லாம் இன, பேதம் பாராது குரல் கொடுத்து சங்கத்தை முன்னெடுத்துள்ளார்.



## மீரா இஸ்ஸதீனையடுத்து புதிய தலைவராக பீ.எம்.எம்.ஏ.காதர்

ஊடகவியலாளர்களையும் ஊடகத்துறைக்குப் பங்களிப்புச் செய்து வந்தவர்களையும் கௌரவிப்பதில் ஈடுபாடு காட்டியுள்ளார் அவர். 2000 ஆம் ஆண்டு ஒலுவிலில் ஆரம்பமான ஊடகவியலாளர் கௌரவிப்பு பயணம் கொழும்பு, அக்கரைப்பற்று, மருதமுனை, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது என பல்வேறு இடங்களிலும் விழா கண்டது.

சங்கத்தின் முதலாவது தலைவரான கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்த போது அவரது சொந்த ஊரான நிந்தவூரில் 'பொன்விழா காணும் சலீம்(2017)' என்ற பெயரில் ஆவண நூலொன்றை வெளியீடு செய்துள்ளார் மீரா இஸ்ஸத்தீன்.

ஊடகவியலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகி கலக்க வேண்டுமென்ற நோக்குடன் 'குடும்ப சவாரி' திட்டத்தை உருவாக்கி நிந்தவூர், மருதமுனை, சம்மாந்துறை உள்ளிட்ட இடங்களில் அதனை மிகக் கச்சிதமாக ஏற்பாடு செய்து ஊடகக் குடும்பங்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த தலைவரானார் அவர்.

ஊடகவியலாளர்களின் விபரத் திரட்டுக்களை வெளியீடு, நூல் வெளியீடுகள், சங்க மேலங்கி வெளியீடு, உறுப்பினர்களுக்கான நலனோம்புக் கொடுப்பனவுகள், வருடாந்த இப்தார் நிகழ்வுகள் என எல்லாமே அவரது காலத்தில் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டவைகளே.

சங்கத்தால் இறுதியாக நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின ஊடகவியாளர்களையும் கௌரவிக்க எடுத்த முயற்சியானது அவரது பணிக்கான நற்சான்றாகும். சங்கத்திலிருந்து பிரிந்து சென்று வேறு அமைப்புக்களை உருவாக்கி செயற்படும் ஊடகத்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்க அவர் எடுத்த முயற்சி நல்லெண்ண ஊடகப் பணிக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

1974 ஆம் ஆண்டு ஊடகத்துறைக்குள் நுழைந்த மீரா தமது 67 வயதில் 47 ஆண்டுகளை ஊடகப்பணிக்குள் நிறைவு செய்த நிலையில், அதன் அரைவாசிப் பகுதியை சங்கத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளார்.

கலாபூஷணம், வித்தகர், ஜனாதிபதி விருது எனப் பல உயர் விருதுகளைத் தம் வயப்படுத்திக் கொண்டவர் மீரா இஸ்ஸத்தீன். தமது சொந்த விருப்பின் பேரில் தலைமைத்துவத்திற்கு அவர் விடைகொடுத்துள்ளார்.

அவரால் வழிமொழியப்பட்டுள்ள மருதமுனை பீ.எம்.எம்.ஏ.காதர் சங்கத்தில் 23 வருடங்கள் உறுப்பினராகவும் செயலாளர், பொருளாளர் பதவி நிலையிலும் சங்கத்தின் விசுவாசியாகச் செயற்பட்டு வந்தவர். இலங்கை பத்திரிகை ஸ்தாபன விருது, கலாபூஷண விருது, வித்கர் விருது உள்ளிட்ட பல விருதுகளின் சொந்தக்காரனான காதர் துடிப்போடு முழுநேரமும் ஊடகத்துறையில் ஈடுபட்டு, 33 வருட ஊடகப்பணியைத் தன்னகத்தே கொண்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.

வெள்ளி விழாக் காணும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் பணி கால ஓட்ட நகர்வுகளுடன் தொடர்ந்தும் வெற்றியுடன் முன்னெடுக்கப்படுமென்பது உறுதி.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
*(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)*

# இலங்கையின் மாவட்டங்கள் தோறும் உருவாகும் எழுத்தாளர் சங்கங்கள்

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திட்டத்திற்கமைய இலங்கையின் சகல மாவட்டங்களிலும் எழுத்தாளர் சங்கங்கள் உருவாக்கப்படவுள்ளன.



அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான எழுத்தாளர் சங்கம் உருவாக்குவது தொடர்பான கூட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட கலாசார திணைக்களம் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைய மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இருந்து தலா 3 பேரை கொண்டதாக மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட வேண்டும். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேர் வீதம் மொத்தமாக 42 பேர் ஒவ்வொரு பிரதேச செயலாளரினாலும் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் சங்க உறுப்பினர் தெரிவுகள் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்க நிறைவேற்றுத் தலைவராக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் செயற்படுவதுடன், தலைவராக கலாநிதி முருகு தயாநிதி, உப தலைவர்களாக இரா. தவராஜா, கே. நௌஷாத், செயலாளராக வீ. மைக்கல் கொலின், உப செயலாளராக திருமதி சுதாகரி மணிவண்ணன், பொருளாளராக கதிரவன் ரீ. இன்பராசா மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக திருமதி ரூபி வலன்டினா பிரான்சிஸ், ஜுனைதா ஷெரீப், ஏ.சீ. அப்துல் ரஹீமான், கே. அருளம்பலம், கலாபூஷணம் கே. தணிகாசலம், ஜிப்ரி ஹசன் ஆகியோரும் சபையோரினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

எழுத்தாளர்களின் செயற்றிறனை விருத்தி செய்தல், துறைசார் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்தல், சிறந்த ஆக்கங்களை உருவாக்குதல், எழுத்தாளர்களுக்கான உதவி, வழிகாட்டல், ஆலோசனை என்பவற்றை ஒரு கட்டமைப்பு ரீதியான செயற்பாட்டிற்கூடாக வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிகழ்வில் மாவட்ட கலாசார திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.சீ ஜெய்னுலாப்தீன், மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. தனுஷியா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**யூ.எல்.எம்.ஹரீஸ்...**
*(வாழைச்சேனை விசேட நிருபர்)*

# எக்மோ கருவி உதவியுடன் தீவிர சிகிச்சையில் விவேக்



நடிகர் விவேக்கிற்கு நேற்றுக் காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. சென்னை சாலி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து சென்னை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் நடிகர் விவேக்கிற்கு எக்மோ சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் விவேக்கின் இதயம் மற்றும் நுரையீரல் செயல்பாட்டை சீர் செய்யும் வகையில் எக்மோ கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நடிகர் விவேக்கின் உடல் நிலையை பின்னடைவில் இருந்து மீட்க எக்மோ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கும் இதுபோன்று எக்மோ சிகிச்சை அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நடிகர் விவேக் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதே மயக்க நிலையில் இருந்ததாகவும் இதயத் துடிப்பு குறைந்து இருந்ததாகவும் தெரிவித்துள்ள மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

நடிகர் விவேக் அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனையின் இதய சிகிச்சை நிபுணர்கள் விவேக்கிற்கு தீவிர சிகிச்சை அளித்து வருவதாகவும் அவரது உடல் நிலையை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த நடிகர் விவேக்கின் உதவியாளர் நிகில் முருகன், விவேக்கிற்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் விரைவில் நலம் பெற்று வீடு திரும்புவார் என்றும் கூறினார்.

நடிகர் விவேக் நேற்றுமுன்தினம் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டார். அதன் பின் பேசிய அவர், 'பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தடுப்பூசி குறித்து எவ்வித அச்சமும் தேவையில்லை' என்றார்.

நகைச்சுவை நடிகர் விவேக், 'சின்ன கலைவாணர்' என அனைவராலும் அன்போடு அழைக்கப்படுபவர். இவர் சினிமாவில் தனது நகைச்சுவை மூலம் மூடநம்பிக்கைகளை விட்டொழிக்கும் கருத்துகளை மையமாக வைத்து நடித்துள்ளார்.

அப்துல் கலாம் மீது அதிக பற்றுக் கொண்ட அவர், மரம் நடுதலை ஊக்குவித்து வருகிறார். இவர் தனது மகனின் பெயரில் 'சாய் பிரசன்னா பவுண்டேஷனை' தொடங்கி மரநடுதலை செய்து வருகிறார்.

மரம் நடுதலை ஊக்குவிக்கும் அவர், சமூக பொறுப்புணர்வு கொண்டவர். இந்த நிலையில் நேற்று காலையில் விவேக்கிற்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

இதையடுத்து மயங்கி விழுந்த அவர், வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் அனுமதிக்கப்பட்ட போதே அவரது இதய துடிப்பு குறைந்த நிலையில் இருந்தது. இதையடுத்து அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு இதய சிகிச்சை நிபுணர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவரது செய்தித் தொடர்பாளர் நிகில் முருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "விவேக் சுயநினைவுடன் இருக்கிறார். அவருக்கு எம்.ஆர்.ஐ ஸ்கான் பரிசோதனை எடுக்கப்படவுள்ளது. கொரோனா தடுப்பூசி போட்ட பிறகு, விவேக் நன்றாகத்தான் இருந்தார். அவர் விரைவில் நலமுடன் திரும்புவார்" என்றார். இந்த நிலையில் விவேக்கிற்கு எக்மோ சிகிச்சை கொடுக்கப்படுவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதய செயல்பாட்டை சீர் செய்ய எக்மோ கருவி கொடுக்கப்படுகிறது.

விவேக் மாரடைப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பிரபலங்கள் பலரும் அவர் விரைவில் நலம் பெற வேண்டி வருகின்றனர்.

"சகோதரர் நடிகர் விவேக் விரைவில் நலம் பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்" என்றார் துணை முதல்வர் ஓ பன்னீர்செல்வம்.

கவிஞர் வைரமுத்து டிவிட்டில், சின்னக் கலைவாணர் தம்பி விவேக் விரைந்து நலமுற்று மீள வேண்டும்; மனிதர்களின் மாரடைப்பைத் தடுக்கின்ற நகைச்சுவைக் கலைப்பணியை வாழ்நாளெல்லாம் தொடர வேண்டும். வாழ்த்துகிறேன்" என பதிவிட்டுள்ளார்.

நடிகர் சிபிராஜ் தனது டிவிட்டில், "நடிகர் விவேக் சார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். விரைவில் நலம் பெற வேண்டும்" என பதிவிட்டுள்ளார்.

**ஆரோக்கிய உடல் நிலையில் இருந்தவருக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பு**

# சூழலுக்கு பாதகமற்ற மின்னுற்பத்தி முறைகளே நாட்டுக்கு அவசியம்



'மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரை தற்போது நாட்டுக்குத் தேவை நீண்ட கால நன்மை தரக்கூடிய சூழலுக்கு பாதகமற்ற முறைகளாகும்' என்று கூறுகிறார் மின்சாரத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

கேள்வி: மின்சாரத் துறை அமைச்சராக நீங்கள் பதவியேற்று பல மாதங்களாகியும் உங்களுடைய பொறுப்பு தொடர்பாகவும் அமைச்சின் விடயங்கள் குறித்தும் சமூகத்துக்கு புரிந்துணர்வு ஏற்படவில்லை. அது பற்றி தெளிவுபடுத்த முடியுமா?

பதில்: நாம் எமக்கு வழங்கப்பட்ட பணியை சரிவர செய்வது குறித்தே கவனம் செலுத்துகிறோம். நான் இந்த அமைச்சை பொறுப்பு ஏற்கும் போது இந்த அமைச்சின் பணிகள் பற்றி அறிந்திருக்கவில்லை. சுவிட்சை போடுவது பற்றி மாத்திரமே அறிந்திருந்தேன். அதனால் முதலில் எனக்கு வழங்கப்பட்ட விடயம் குறித்து கற்றுக் கொண்டேன். தற்போது எமது முயற்சி மின்சாரம் தொடர்பாக மக்களுக்கு தேவையான சேவைகளை புரிவதாகும்.

கேள்வி: இப்பணியை தனியே நிறைவேற்ற முடியுமென நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: நான் தனித்து இயங்க விரும்புவதில்லை. 'டீம் வேர்க்கை' நம்புபவன். எனக்கு நல்ல இராஜாங்க அமைச்சரொருவர் உள்ளார். அவர் துமிந்த திஸாநாயக்க. நல்ல அதிகாரிகள், பொறியியலாளரகள், இருக்கிறார்கள். நான் இவர்களுடன் அணியாக பணி பணிபுரிந்து பொதுமக்களுக்கு தேவையான சேவையை வழங்க முடியுமென நம்புகிறேன். ஜனாதிபதியிடம் நல்ல நோக்கும் திட்டங்களும் உள்ளன. அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதே எமது அடிப்படை நோக்கமாகும்.

கேள்வி: நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மின்சார தேவைக்கும் மற்றும் மின் உற்பத்திக்கும் இடையே சிக்கல்கள் உள்ளதல்லவா?

பதில்: நிச்சயமாக உள்ளது. இந்த விடயம் எதிர்காலத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்தக் கூடும். 2013ம் ஆண்டு நுரைச்சோலை மின்நிலையத்தை அமைத்ததற்குப் பின்னர் பிரதான மின் உற்பத்தி நிலையமொன்று தேசிய மின்சார தொகுதியில் உள்ளடக்கப்படவில்லை. அதே போன்று எம்மால் இன்னும் மூன்று நீர்மின் உற்பத்தி நிலையங்களையே அமைக்க முடியும். அவற்றாலும் இப்பிரச்சினையை தீர்க்க முடியாது. ஏனென்றால் இந்நாட்டில் வருடாந்தம் மின்சார தேவை நூற்றுக்கு ஆறு வீதத்தால் அதிகரித்து வருகிறது. அதனால் மாற்று உற்பத்தி முறைகளை போன்று மின்சார விரயத்தைத் தடுக்கும் வழிவகைகளையும் கண்டறிய வேண்டும். மின்சாரத் துறை அமைச்சராக நான் கண்ட உண்மையொன்றை இங்கு குறிப்பிட வேண்டும். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் மகாவலி மின் உற்பத்தி நிலையத்தையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தையும் அமைத்திருக்கா விட்டால் இன்று நாம் எமது மின்சார தேவையை நிறைவேற்ற முடியாது போய் இருக்கும்.



## 'மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தும் எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டும்' என்கிறார் அமைச்சர் டலஸ் அழகப்பெரும

கேள்வி: இந்நாட்டு சூழலுக்கு பெரும் பாதிப்பை டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்துகின்றன. அதைத் தடுக்க எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.?

பதில்: நீங்கள் கூறுவது சரி. டீசல் மின் உற்பத்தி நிலையத்தால் ஆயிரம் மரங்களை வெட்டுவதற்கு சமமான அளவு சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. அதே போன்று ஒரு அலகு மின் உற்பத்தி செய்ய 27 ரூபா செலவாகிறது. ஆனால் நாம் சலுகை விலைக்கே பாவனையாளர்களுக்கு வழங்குகிறோம். நாம் வெகு விரைவில் சூரிய வெப்ப மின்உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: மின்சார உற்பத்திக்கும், விரயத்தை தடுப்பதற்கும் எவ்வாறான திட்டங்கள் உள்ளன?

பதில்: கல்வி அமைச்சுடன் இணைந்து 43 இமாணவர்களை இத்திட்டத்துக்காக இணைத்துக் கொண்டுள்ளோம். உண்மையில் உரு மாணவன் ஒரு மின்குமிழை அணைத்தாலும் வீட்டில் மின் விரயத்தை தடுக்கலாம். பிள்ளைகளுக்கு நற்பண்புகளை கற்பிப்பது இலகு. அதன் மூலம் மின்சாரத்தை சேமிக்கும் எதிர்கால சந்ததியை உருவாக்கலாம்.

கேள்வி: குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலவசமாக மின் இணைப்பை பெற்றுக் கொடுக்க திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி தெளிவுபடுத்த முடியுமா?

பதில்: இன்று அநேகமான பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தாலும். மின் இணைப்பை பெற முடியாத குறைந்த வருமானம் உடையவர்கள் இருக்கிறார்கள். வீட்டுக்கு முன்னால் மின்கம்பங்கள் இருந்தாலும் மின்சாரத்தை பெற பண வசதியில்லை. அவர்களை அறிந்து இலவசமாக மின்சாரத்தை வழங்க ஆரம்பித்துள்ளோம். எமது நோக்கம் அனைவருக்கும் மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதாகும்.

கேள்வி: அமைச்சு ஏழாயிரம் கிராமங்களுக்கு ஏழாயிரம் சூரிய சக்தியிலான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இது பற்றி தெளிவுபடுத்த முடியுமா?

பதில்: ஆம், நாம் சூரிய மின் உற்பத்தி திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இது பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இதற்கான ஒரே தகுதி டிரான்ஸ்போமருக்கு பக்கத்தில் நாற்பது பேர்ச்சஸ் காணி இருக்க வேண்டும் என்பதாகும். நாம் தற்போது எழுநூறு திட்டங்களுக்காக டென்டர் கோரியுள்ளோம். இத்திட்டத்தை மூன்று வருடங்களில் பூர்த்தி செய்ய எண்ணியுள்ளோம்.

கேள்வி: சூழலுக்கு இயைவான இந்த திட்டம் எவ்வளவு தூரம் வெற்றி பெரும் என எதிர்பார்க்கின்றீர்கள்.?

பதில்: நிச்சயமாக எதிர்காலத்தில் மின்சாரம் உள்ளிட்ட சக்தி பிறப்பாக்கிகள் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும். அதற்கு அமையவே சூரிய சக்தியை பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ள எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பெரும் ஒத்துழைப்பை வழங்கி வருகிறார். ஒரு சூரிய மின் உற்பத்தி திட்டத்தின் மூலம் 75 வோட் மின்சாரத்தை பெற முடியும். இன்று நாட்டுக்குத் தேவை குறுகிய காலத் திட்டங்கள் அல்ல. நீண்ட கால நன்மை தரக் கூடிய சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத முறைகளே அவசியமாகும். ஜனாதிபதி, பிரதமர் ஆலோசனையின் பேரில் அத் திட்டங்களையே நாம் செயற்படுத்துகிறோம்.

**உதித்த குணவர்தன...**
*(தமிழில்: வீ.ஆர்.வயலட்)*

---

# கல்வித் துறையில் கிழக்கின் முதலாவது பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்

கிழக்கு அறிஞர்களில் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் தனித்துவமானவர். அவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் கிராமத்தில் பிறந்தவர். உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கல்விச் சிந்தனைகளை உள்வாங்கி கல்வித் தத்துவங்களை உருவாக்கியவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம்.

சுவாமி விபுலாநந்தர் உருவாக்கிய சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். அதுவும் சுவாமியிடம் கல்வி கற்ற பேறு பெற்றவர். கல்வியியல் துறையில் ஆய்வாளராகவும் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணி புரிந்தவர். கல்வியியலை தமிழ்மொழி மூலம் கற்பித்த முன்னோடி. தமிழ்மொழி மூலம் உயர்நிலையான ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமென்பதை நிரூபணமாக்கியவர். தாய்மொழிக் கல்வி வாயிலாகவே புதிய கண்டுபிடிப்புகளையும் அறிவுருவாக்கச் செயற்பாடுகளையும் மேற்கொண்டவர்.

கல்வித் தத்துவம் தொடர்பான விரிநிலை சிந்தனையும் ஆழமான தரிசனமும் கொண்டவர். சில நூல்களையும் கட்டுரைகளையும் ஆக்கியவர். கல்வித் தத்துவத்தை உயர்நிலையில் எடுத்துரைப்பதற்குரிய வலுவான மொழிக் கட்டமைப்பைத் தமிழில் உருவாக்கியவர். கல்வியியல் சார்ந்த பல எண்ணக்கருக்களையும் தமிழில் உருவாக்கியவர்.

மேலைத்தேய, கீழைத்தேய தத்துவ சிந்தனை மரபுகளுடன் ஊடாடி நமக்கான அறிகை மரபை, கல்வி மரபை மீள்கண்டுபிடிப்பதிலும் முனைப்புடன் செயற்பட்டவர்.



சேர் பொன்.இராமநாதன் அவர்களின் சகோதரியின் மகளை திருமணம் புரிந்து மூன்று பிள்ளைகளுக்கு தந்தையானவர். 61வருடங்கள் கல்விப் பணிபுரிந்து 1987.11.12ஆம் திகதி அவர் காலமானார்.

பல்கலைக்கழக மட்டத்தில் அறிந்திருந்த அளவுக்கு பொதுமக்கள் மத்தியில் இவரை அதிகமாக பலர் அறிந்திருக்கவில்லை. பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் கல்வியியற் துறையில் முக்கியமான பங்களிப்பு செய்தவர். இவரது படைப்புகளைப் பார்க்கும் போது இவர் மேலைத்தேய, கீழைத்தேய கல்வித் தத்துவங்களை உள்வாங்கி அவற்றிலிருந்து தான் உருவாக்கிய எண்ணங்களைத் தன் மாணவர்களுக்குப் போதித்தவர் என்பது தெரிகின்றது.

இவரைப் பற்றி இலங்கையின் நுண்கலைத்துறையின் முன்னோடியாகத் திகழும் பேராசிரியர் சி.மௌனகுருவிடம் வினவிய போது அவருடனான பலவிடயங்களை பகிர்ந்து கொண்டார்.

"1960களில் பாடசாலையில் நான் பயின்று கொண்டிருந்த வேளையில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு கூத்துக் கலையை மேடையேற்ற குழாத்துடன் சென்றிருந்தேன். அங்கு கல்வித்துறை விரிவுரையாளராகவிருந்த பேராசிரியர் ப.சந்திரசேகரம் எங்களை அன்போடு அழைத்து பேராதனை பூங்காவையும் காண்பித்து கூத்துக்லையை மேடையேற்ற உதவினார்.

பின்பு நான் 1971இல் 35ஆவது வயதில் கொழும்பு பல்கலையில் கல்வி டிப்ளோமா பயிலச் சென்ற போது அங்கு விரிவுரையாளராக எமக்குக் கற்பித்தார். அவரது கற்பித்தல் பாணியே தனி.மேலைத்தேய, கீழைத்தேய கல்வி முறைமைகளை கலந்து ஒப்பிட்டு அழகாகக் கற்பிப்பார். பின்பு 1980களில் நான் கடமை நிமித்தம் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போது அங்கு அவர் கல்வித் துறைத் தலைவராக பணியாற்றியிருந்தார்.

நல்ல குணம் படைத்த அற்புதமான மனிதர் ப.சந்திரசேகரம். இனிமையான தமிழ் பேசுவார். இவர் மார்க்சிய கோட்பாடான பொதுவுடமைத் தத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் பேராதனையில் பணியாற்றுகின்ற போது மார்ட்டின் விக்ரமசிங்கவின் வீட்டில்தான் வாழ்ந்தார். அதேசமயம் இவரது கட்டுரைகளைப் படிக்கையில் இவர் முற்று முழுதாகப் பொருள் முதல்வாதச் சிந்தனையில் மூழ்கிய மார்க்சியவாதியாகவும் தெரியவில்லை. ஆன்மாவே அனைத்துக்கும் அடிப்படை என்னும் கருத்துமுதல்வாதச் சிந்தனை மிக்க ஒருவராகவே இவரை அறிய முடிகின்றது".

இவரது கட்டுரையான 'கல்வித் தத்துவமும் இலட்சியவாதமும்' கட்டுரை 'ஆசிரியம்' சஞ்சிகையில் அதன் 5556 ஆவது இதழில் வெளியாகியுள்ளது. கல்வியியல் நிலையிலே நீண்டு நெடிது தேடல்களை முன்னெடுத்த புலமையாளராக விளங்கியவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம்.

தனித்துவமான செவ்வியல் எழுநடையுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதக் கூடிய ஆற்றல் மிக்கவராக பேராசிரியர் விளங்கினார். இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை ஆங்கிலமொழி ஆய்விதழ்களிலும் அவர் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்துணை ஆளுமையுள்ள, கீர்த்திபெற்ற பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்களின் சகோதரரே மறைந்த பேராசிரியர் கோணேசபிள்ளை.

## சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மாணவனாக அடியொற்றி வாழ்ந்து மறைந்த பெருந்தகை

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

---

# 'அந்–நூரை அழகுபடுத்துவோம்' விசேட வேலைத் திட்டம்

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பாடசாலை சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். வெறுமனே பாடசாலை நிர்வாகத்தினால் மாத்திரம் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பது இயலாத காரியமாகும். குறிப்பாக பாடசாலை சமூகம்சார் அமைப்பாக இருக்கின்ற பாடசாலை அபிவிருத்திக் குழுவினதும், பழைய மாணவர் சங்கத்தினரினதும் பங்கு பாடசாலை அபிவிருத்தியில் மிகப் பிரதானமாக இருத்தல் வேண்டும்.



அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள 1சீ தரமுடைய பாடசாலையாகும். இங்கு சுமார் 1000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாடசாலையில் ஆசியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஆனாலும் மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இப்பகுதி மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும், அவை கைகூடவில்லை. இருந்த போதிலும் கடந்த காலங்களில் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புக்களுடன் இப்பாடசாலையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டும் உள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள மக்களினதும், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கத்தினதும் நோக்கம் இந்தப் பாடசாலையை சகல வழிகளிலும் முன்னேற்றி கல்வியின் ஊடாக அந்த சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்பதேயாகும். அதற்காக அவர்கள் பாடசாலை அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றனர்.

தற்போது இப்பாடசாலையின் சுற்றுச் சூழலை அழகுபடுத்தும் நோக்கில், பாடசலை பழைய மாணவர் சங்கத்தினர் 'அந்நுரை அழகுபடுத்துவோம்' எனும் தொனிப் பொருளில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் முதற் கட்ட பணியாக பாடசாலை சுற்று மதில் நிறம் பூசப்பட்டு, பாடசாலை வளாகத்தில் பூ மரங்கள், நிழல் மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

பூமரங்களையும் நிழல் தரும் மரங்களையும் பாடசாலை வளாகத்தில் நடுவதன் மூலம் பாடசாலை வளாகம் எழில்மிகு தோற்றம் பெறும். கற்றலுக்கான அழகிய சூழல் உருவாகும். மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கும் இவ்வாறான செயற்பாடுகள் உறுதுணையாக அமையும்.

குறித்த வேலைத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எப். ஹலிம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது பாடசாலை அதிபர் ஏ.எம்.அஸ்மி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஹசன், பழைய மாணவர் சங்க உபதலைவரும், அல்நஜா விளையாட்டுக் கழகத்தின் உபதலைவருமான எஸ்.எல்.முசம்மில் உள்ளிட்ட பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டமானது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பழைய மாணவர் சங்கத்தின் பணிகளுக்கு பாராட்டு

**ஏ.எல்.றியாஸ்...**
*(பாலமுனை விசேட நிருபர்)*

# "சிட்டி பஸ்" சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை




கொழும்பு நகரில் வாகன நெரிசலுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட "பார்க் அன்ட் ரைட் சிட்டி பஸ்" சேவையை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில வாரங்களில் பிலியந்தலை 120 பஸ் பாதையினூடாகவும் (120 bus route) காலி வீதி மொரட்டுவ கொழும்பு பஸ் பாதையினூடாகவும் நாட்டின் இன்னும் சில பிரதான நகரங்களூடாகவும் இந்த பஸ் சேவையை விரிவுபடுத்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது கொழும்பை அடுத்துள்ள 04 பஸ் பாதைகளினூடாக பயணிக்கின்ற சிட்டி பஸ் வாகனங்களின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருமானம் கிடைப்பதாக இலங்கை போக்குவரத்து சபை குறிப்பிட்டுள்ளது.

சிட்டி பஸ் சேவை கடந்த ஜனவரி 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அந்த பஸ் சேவை கொட்டாவ, மாகும்புற போக்குவரத்து மத்திய நிலையத்திலிருந்து 138, 174, 112 மற்றும் 115 ஆகிய பஸ் பாதைகளினூடாக நடைபெறுகிறது.

இந்த பஸ் சேவைக்கு பொதுவான பஸ் கட்டணத்தின் ஒன்றரை மடங்கு கட்டணம் அறவிடப்படுகின்றது. இந்த சேவையின் மூலம் கடந்த மூன்றரை மாதங்களினுள் குறிப்பிடத்தக்களவு வருமானம் பெறப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# வத்தளையில் கைப்பற்றிய 02 கோடி பெறுமதியான ஐஸ் போதைப்பொருள்

## பாதாள உலகக்குழுவின் நிபுனவுக்கு சொந்தமானது

வத்தளை பகுதியில் நேற்றுமுன் தினம் கைப்பற்றப்பட்டிருந்த ஐஸ் ரக போதைப்பொருள், துபாய்க்கு தப்பிச் சென்றுள்ள போதைப்பொருள் வர்த்தகரும், திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவருமான நிபுன என்பவருக்கு சொந்தமானதென தெரியவந்துள்ளது.

போதைப்பொருளின் பெறுமதி சுமார் 02 கோடி ரூபாவுக்கும் அதிகமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள மேலும் 100 கிலோ ஐஸ் ரக போதைப்பொருளை தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் வெளிநாட்டிலுள்ள ரூபன் மற்றும் குடுலால் ஆகியோர் உள்ளதாக முன்னர் தெரியவந்தது. ஜாஎல மற்றும் சப்புகஸ்கந்த பகுதியில் இதற்கு முன்னர் சுமார் 125 கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது.

100 கோடிக்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருட்களுடன் 13 பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்கிஸ்சையில் கரையொதுங்கிய 20 அடி நீளமான திமிங்கிலம்



கல்கிஸ்சை, வெடிகந்த கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு பாரிய திமிங்கிலமொன்று கரையொதுங்கியது. 20 அடி நீளமான இந்த திமிங்கிலத்தின் தலை மற்றும் செட்டைகள் சிதைவடைந்துள்ள நிலையில் காணப்பட்டது. இந்த மீன் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்து, பின்னர் கரையொதுங்கியிருக்கலாமென அப்பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## யாழில் வறிய குடும்பத்துக்கு... 03ஆம் பக்கத் தொடர்

சாவியை பயனாளியான திருமதி. கருணாநிதி ஜெகதிஷ்வரனுக்கு வழங்கினார்.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் படையினர், இந்த புதிய வீட்டைக் கட்டுவதற்கு தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் மனிதவள ஒத்துழைப்பை வழங்கினர். கிராம சேவகர் மற்றும் வீடமைப்பு அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகத்தால் கட்டுமானத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 512 ஆவது பிரிகேட் தளபதியின் மேற்பார்வையின் கீழ் கட்டுமானப் பணிகளுக்கு மிகவும் தேவையான மனித வலுவை 14 ஆவது கஜபா படையணியின் படையினர் வழங்கியதுடன், புத்தாண்டு தினத்தில் வீடு நிறைவு பெற்றது.

மாவட்ட செயலாளர், யாழ் மாவட்ட மேலதிக செயலாளர், யாழ்ப்பாண காணி அதிகாரிகள், 51ஆவது படைப் பிரிவு தளபதி, 511 மற்றும் 512 படைப்பிரிவுத் தளபதிகள் , மூத்த அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் கட்டுமானத்தில் பங்களித்த படையினர் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தரம் 5 மாணவர்களுக்கான... 03ஆம் பக்கத் தொடர்

கௌரவ அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர் சாந்தி விஸ்வநாதன், விரிவுரையாளர் சி.சிவசங்கர் ஆகியோர் பங்கேற்பர். நூலாசிரியரான இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ். ஏ.சந்திரபவன், எமது தினகரன் பத்திரிகையில் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகின்ற 'புலமைக் கதிர்' கல்விப் பகுதியை தயாரித்து வழங்குபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு, துறைமுக நகரம்...

இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்குமெனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

2014ஆம் ஆண்டில் இலங்கைக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக 1,635 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. 2015ஆம் ஆண்டில் 1161 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அது குறைவடைந்தது. 2019ஆம் ஆண்டில் 1,190 மில்லியன் அமெரிக்க டொலர்களே நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. ஆகவே, தொடர்ச்சியாக எமது நாட்டில் வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்தே வந்துள்ளன.

நாட்டின் தேசிய உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமாயின் பன்நாட்டு நேரடி முதலீடுகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்கான ஒரு மூலோபாயமாகத்தான் கொழும்பு துறைமுக நகர் வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் நாட்டில் அதிகரிக்கும் என்பதுடன், அந்நிய செலவாணி கையிருப்பும் அதிகரிக்கும்.

2014ஆம் ஆண்டில்தான் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டு ஜனவரி மாதம் இத்திட்டத்திற்கான புதிய சட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு மார்ச் மாதம் ஒப்புதல் பெறப்பட்டதுடன் தற்போது சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை அனைவரும் பார்க்க முடியும். சட்டத்தை முறையாக படிக்காதவர்கள்தான் பல்வேறு விளக்கங்களையும் கருத்துகளையும் கூறுவருகின்றனர்.

கொழும்பு துறைமுக ஆணைக்குழுவை உருவாக்கும் சட்டத்தின் முதல் பகுதியிலேயே 'விசேட பொருளாதார வலயமொன்றை உருவாக்குவதற்கான சட்டத்திட்டங்களை உருவாக்குதல்' எனக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவதாக இவ்வலயத்தில் வர்த்தக நடவடிக்கைகளை கொண்டுசெல்வதற்கான விதிமுறைகளை உருவாக்குதல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் ஏனைய அனுமதிகளை வழங்குதலுக்கான ஆணைக்குழுவை உருவாக்கல் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுச் சட்டம், இலங்கையால் உருவாக்கப்படுவது என்பதுடன், ஆணைக்குழுவுக்கான அதிகாரம் இச்சட்டத்தின் ஊடாகவே கிடைக்கப்பெறுகிறது.

வேலைத்திட்டத்தில் இரண்டு பங்குகள் உள்ளன. அரசாங்கத்தால் அனுமதியளிக்கும் இடங்களும் நிறுவனத்தால் அனுமதியளிக்கும் இடங்களும் உள்ளன.

பொருளாதார வலயத்திலிருந்து வர்த்தகங்களைஆரம்பிப்பதற்கும் கொண்டுநடத்துவதற்கும் வர்த்தகங்களை மேம்பாடுகளை ஊக்குவிப்பது ஆணைக்குழுவின் கீழ் நடைபெறும்.

சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித் தொழில், நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பம், வியாபார வழிமுறைகள், வெளியாட்களை பணிக்கு அமர்த்தல், கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழில்பாடுகள், பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும் வேறு துணை சேவைகளை மேம்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கே அதிகாரமுள்ளது.

சர்வதேச பிணக்குத் தீர்வு நிலையமொன்றை தாபிப்பதற்கும் நகர வசதி தொழிற்பாடுகள் மற்றும் பொருளாதார வலயத்தினுல் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றங்களை மேம்படுத்துவதற்கும் ஏனைய கருமங்களை ஏற்பாடு செய்வதும் சட்ட மூலத்தின் மூலம் உருவாக்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

கொழும்பு துறைமுக நகருக்கான சட்டம் இந்த நாட்டின் வர்த்தகத்துறைக்கு திரும்புமுனையாக அமையும். இதுவொரு முத்தரப்பு உடன்படிக்கையாகும். ஏனையவர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரமாகவும் இத்திட்டம் அமையும். எந்தவொரு நாட்டிலும் முதலீடுகளை மேற்கொள்பவர்கள் முதலில் நாட்டின் சட்டத்திட்டங்களையே ஆய்வுக்கு உட்படுத்துவார்கள். அதன் பின்னர்தான் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து தீர்மானிப்பர். இவை அனைத்துக்கும் தீர்வாக இச்சட்டம் அமையும்.

மொத்தமாக 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இத்திட்டத்திற்காக 269 ஹெக்டேயர் கடலில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 178 ஹெக்டேயர்தான் வணிக ரீதியான நிலமாக உள்ளது. இதற்காக கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முத்தரப்பு உடன்படிக்கை 2016ஆம் ஆண்டு ஒகஸ்டில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 990 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதுவரை முதலீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வருட டிசம்பர் மாதத்துக்குள் ஏனைய நிதி முதலீடும் மேற்கொள்ளப்படும்.

269 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வணிக ரீதியாக பெறுமதியாகவுள்ள 178 ஹெக்டேயர் நிலபரப்பில் வேலைத்திட்டத்தை உருவாக்கும் நிறுவனத்துக்கு 116 ஹெக்டேயர் நிலப்பரப்பு வழங்கப்படும் என்பதுடன், 62 ஹெக்டேயர் நிலப்பரப்பு அரசுக்கு சொந்தமானதாகவும் 91 ஹெக்டேயர் பொது நிலப்பரபாக அரசாங்கத்தின் கீழ் இருக்கும். உருவாக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு, புதிய நிலப்பரப்பாக நாட்டின் வரைப்படத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மூடிமறைக்கப்பட்டு இந்த விடயத்தை செய்துள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறில்லை. அனைத்து விடயங்களும் வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடாகவே செய்யப்பட்டுள்ளன. நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு, 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்படும்.

புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நகர அபிவிருத்தி ஆணைக் குழுவுக்கு சுவீகரிக்கப்பட்டிருந்த இந்த நிலப்பரப்பு, ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். தெற்காசிய வலயத்தின் மத்திய நிலையமாக கொழும்பு துறைமுக நகரை மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இச்சட்டத்திற்கு எதிராக 20 மனுக்கள் இதுவரை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பான தீர்ப்புகள் வெளியான பின்னர்தான் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்படும். உயர்நீதிமன்றம் சட்டத்தில் வாக்கியங்களை மாற்றியமைக்குமாறு கூறினால் அதனையும் நாம் செய்வோம். நாட்டுக்கு நல்லதையே நாமும் செய்ய விரும்புகிறோம்.

ஆகவே, சட்டம் தொடர்பில் உரிய தெளிவில்லாதவர்களே இது குறித்து விமர்சனங்களை முன்வைக்கின்றனர். கொழும்பு துறைமுக நகருக்கு எவர் வேண்டுமெனாலும் செல்ல முடியும். அதற்கு எவ்வித தடையும் இல்லை என்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சென்று வரலாம். இதற்கான உறுதியை அரசாங்கம் ஏற்கிறது என்றார்.

## 6 கட்சிகளின் செயற்பாடுகள்... 03ஆம் பக்கத் தொடர்

தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரையில் மேற்படி ஆறு கட்சிகளும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்சிகளின் செயலாளர் மற்றும் தலைவர் உள்ளிட்ட பதவிகளில் ஒரு பதவிக்கு பலரது பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் பிரச்சினைகள் தோன்றி யுள்ளதாகவும் அதனால் அந்த விவகாரம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## அடிப்படைவாத, தீவிரவாத...

தடைசெய்யப்பட்டுள்ளன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எவ்வித கலந்துரையாடல்களுமின்றி இவ்வாறான அமைப்புகள் மீதான தடைகள் நீக்கப்பட்டிருந்தன. அதனால்தான் மீண்டும் தீவிரவாதம் தலைத்தூக்கியிருந்தது.

அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதத்துடன், தொடர்புடைய அமைப்புகள் கட்டம் கட்டமாக தடைசெய்யப்பட்டு வருவதுடன், தொடர்புடைய நபர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அத்துடன், இவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் சொத்துகளையும் அரசுடமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## மூன்று மாவட்டங்களுக்கு...

இவ்வாறான மண்சரிவு அபாய எச்சரிக்கையை இந்நிறுவனம் விடுத்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் உடுநுவர, தொல்தொட்ட, கங்காவத்த கோரளை, யட்டிநுவர, தும்பனே, உடுதும்புர, தொலுவ, மெததும்பர மற்றும் பாத்ததும்பர உள்ளிட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தில் மாவனல்ல மற்றும் அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவுக்கும், மாத்தளை மாவட்டத்தில் அம்பாகங்க கோரளை மற்றும் ரத்தொட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவுக்கும் இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் மலைப் பகுதிகளை அண்டி வாழும் மக்கள் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டில் பல பிரதேசங்களில் இரவு நேரங்களில் பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இடி மின்னலுடன் மழை பெய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்குதல் அபாயத்திலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறும் வளிமண்டல திணைக்களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## இந்தியா கைது செய்த இரு இலங்கை...

விடுத்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஊடாக வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்ததாகத் தெரிவித்து கடந்த மார்ச் 10ஆம் திகதி மன்னார் பேசாலையைச் சேர்ந்த இரு மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட, ரவீந்திரன் அருண் குரூஸ் மற்றும் வெலிசோர் ரேகன் பாய்வா ஆகிய இருவரும் தமிழக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சென்னை புழல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மீனவர்கள் இருவரும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்திய கடல் எல்லைக்குள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களை உடனடியாக விடுவிக்கவேண்டுமென உறவினர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பாக மீனவர்களின் உறவினர்களால் பேசாலை பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பள்ளிவாசல் பொறுப்புகளிலிருந்து...

கொண்டு இயங்கும் ஜம்இய்யதுல் அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதியா (JASM), காத்தான்குடியில் இயங்கும் தாருல் அதர் அத்த அவிய்யா அல்லது ஜாமிஉல் அதர், ஜமாஅதே இஸ்லாமியின் மாணவர் அமைப்பான ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் அமைப்பு (SLISM), சர்வதேச தீவிரவாத அமைப்புகளான ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் அல் கைதா, சேவ் த பேர்ள்ஸ் மற்றும் சுப்பர் முஸ்லிம் ஆகிய அமைப்புகள் கடந்த வாரம் தடை செய்யப்பட்டன.

இந் நிலையில் சில தவ்ஹீத் அமைப்புகளும் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் அமைப்பும் தத்தமது சட்டத்தரணிகளுடன் இத் தடையை சட்ட ரீதியாக எதிர்கொள்வதற்கான ஆலோசனைகளை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மின்னல் தாக்கியதில்...

ஈடுபட்ட விவசாயிகள் மூவர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் (15) மாலை வேளை முல்லைத்தீவின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழைபெய்துவந்தது. குமுழமுனை மேற்கு 07ஆம் வட்டாரத்தினை சேர்ந்த கணபதிப்பிள்ளை மயூரன் (36) குமுழமுனை கிழக்கினை சேர்ந்த சிவசிதம்பரம் யுகதந்தன் (30 ) வற்றாப்பளை கிராமத்தை சேர்ந்த யோகலிங்கம் சுஜீவகரன் (42) ஆகியோர் வயல் வேலை செய்துள்ளார்கள். மழை காரணமாக வயல்கொட்டிலில் வந்து நின்றவேளை மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்கள்.

இரவாகியும் இவர்கள் விடு திரும்பாத நிலையில் இவர்களை தேடி உறவினர்கள் மற்றும் விவசாயிகள் சென்றவேளை வயல் கொட்டிலில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பில் இரவு 10.00 மணியளவில் முல்லைத்தீவு பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு பொலிசார் சடலங்களை மீட்டு இது தொடர்பிலான விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## ரமழான் நோன்பாளிகளுக்கும்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்காக 5,000 ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டத்தை பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும்இணைந்து அமுல்படுத்துகின்றன.

சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர், வயோதிபர்கள், விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவைப் பெறுபவர்கள், 100 வயதை எட்டியுள்ள வயோதிபர்களுக்கான கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களுக்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

புத்தாண்டுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு இக் கொடுப்பனவை வழங்க முயற்சிக்கப்பட்ட போதிலும் முடியாமல் போயுள்ளது. இதனால் பணம் கிடைக்காதவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதுவரை நாடு முழுவதுமுள்ள சமுர்த்திப் பயனாளர்கள் 18 இலட்சம் பேருக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கொடுப்பனவைப் பெறத் தகுதியானவர்கள் வியாழக்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## 48 மணி நேரத்துள்...

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இவ்வருடத்தில் அதிகமான விபத்துகள் கடந்த 48 மணி நேரத்துள் அதாவது புதன், வியாழக்கிழமைகளில் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டில் அதிக விபத்துகள் இடம்பெற்ற இரண்டு தினங்களாக 14 மற்றும் 15ஆம் திகதிகள் பதிவாகியுள்ளன.

வியாழக்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் விபத்துகளால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 12 பேர் மோட்டார் சைக்கிள்களை செலுத்தியவர்களாவர். அத்துடன், இரண்டு பாதசாரிகளும் உயிரிழந்துள்ளனர். புதன்கிழமை 14 மரணங்கள் பதிவாகியிருந்தன. மொத்தமாக 48 மணித்தியாலத்தில் 30 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், 150 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் 10ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலமானது விபத்துகள் தொடர்பில் மிகவும் தீர்மானமிக்க காலப்பகுதியாக உள்ளதால் வாகன சாரதிகள் வீதிச் சட்டங்களை கடைப்பிடித்து வாகனங்களை செலுத்துவதன் மூலம் விபத்துகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான சுற்றிவளைப்புகள் நாடு முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 24 மணித்தியாலத்தில் (வியாழக்கிழமை) மாத்திரம் 1,200இற்கும் அதிகமானவர்கள் மது அருந்தி வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த வாகனங்களும் பொலிஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அவை நீதிமன்றத்திலேயே ஒப்படைக்கப்படும் என்றார்.

## சவூதியில் 41 இலங்கைப் பெண்கள்...

குறிப்பிடப்படுகின்றது. இப் பெண்களுடன் மூன்று குழந்தைகளும் உள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை...

தீர்வு காணப்பட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் கடன் சுமையை நிர்வகிக்கவும், மேலும் அதற்கான நிலையான வழியைக் கண்டறியவும் அமெரிக்கா தமது ஆதரவை வழங்கவுள்ளது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலைனா பி. டெப்லிட்ஸ் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இலங்கை அரசாங்கம் அதன் கடன் சுமை தொடர்பிலான உரிய நடைமுறையை பின்பற்ற வேண்டும், மேலும் நிலைத்தன்மையை நோக்கி முன்னேற வேண்டும். அரசாங்கம் கடனைச் சுமக்க வேண்டியது அவசியமில்லை, ஆனால் அந்தக் கடனைச் செலுத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

## தப்பிச்சென்ற கெப் வாகனம் மீது...

அதிரடிப் படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை(16) காலை வடமராட்சி முள்ளிப்பகுதியில் மணல் கடத்தலை முறியடிப்பதற்காக யாக்கரை பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமை சேர்ந்த அதிரடிப்படையினர் பதுங்கி இருந்துள்ளனர். இதன் போது மணல் கடத்திவரப்பட்ட வாகனம் ஒன்றினை பல தடைகள் போட்டு மறிக்க முற்பட்ட போதும் வாகனத்தை நிறுத்தாமல் கடத்தல்காரர்கள் தப்பிச் செல்ல முற்பட்டனர். இதன்போது விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் துன்னாலை பகுதியை சேர்ந்த பழனி மிகுந்தன் (வயது 28), ஜெயக்குமார் சந்திரகுமார் (வயது 30) ஆகிய குடும்பஸ்தர்கள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை மணல் கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் விசேட அதிரடிப்படை முகாமை சேர்ந்த செனவிரட்ன என்ற விசேட அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் கால் பகுதியில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தந்தையும் மகனும்...

மஹரகம பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய தந்தையும், 14 வயது மகனுமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் இணைந்து நீரில் மூழ்கியிருந்த மேலும் இரண்டு பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அத்துடன், காணாமல் போயிருந்த இருவரையும் மீட்பதற்கான பணிகளில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# பன்விலையில் வெள்ளத்தினால் மக்கள் குடியிருப்புகளுக்கு சேதம்

**புசல்லாவை தினகரன் நிருபர்**

## வீதி அபிவிருத்தி, முறையற்ற கழிவுமுகாமைத்துவம் காரணமென மக்கள் தெரிவிப்பு





மலையகத்தில் நிலவும் கடும் மழை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர்.

கண்டி பன்விலை காவகடை பிரதேசத்தில் வியாபார நிலையங்கள், வீடுகளுக்கு உள்ளே வெள்ள நீர் உட்புகுந்ததால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பொதுமக்களின் உடமைகளுக்கும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதற்கு முன்னர் இப்பிரதேசத்தில் இவ்வாறான ஒருநிலை ஏற்பட்டதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். திடீரென வெள்ள நீர் உட்புகுந்ததால் தமது பொருட்களை பாதுகாக்க முடியாமல் மக்கள் பெரும் திண்டாட்டத்துக்குள்ளாகினர். சுமார் இரண்டு அடி உயரத்திற்கு வெள்ள நீர் தேங்கி நின்று தமது வீட்டுப்பாவனை பொருட்களை துவம்சம் செய்துள்ளது. வீடுகளிலிருந்த இலத்திரனியல் பொருட்களும் அன்றாடப் பாவனைப் பொருட்களும் பழுதடைந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் பன்விலை பொலிஸ் நிலையத்திற்கு பொதுமக்கள் அறிவித்துள்ளனர். பன்விலை நகர வீதி காபட் இடப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட முறையற்ற கழிவகற்றல் முகாமைத்துவமே இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு காரணமென மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ள அனர்த்தத்தினால் 10 மேற்பட்ட வீடுகளும் வியாபார நிலையங்களும் சேதமடைந்துள்ளன.



# கொடிய ஆயுதத்தை விடவும் கொடூரமானது வெறுப்புப் பேச்சு

## தேசிய சமாதான சபை அதிகாரி நிரோசா அந்தோனி




**அக்குறணை குறூப் நிருபர்**

வெறுப்புப் பேச்சு என்பது கொடிய ஆயுதத்தைவிடவும் கொடூரமானது. வெறுப்புப் பேச்சால் ஏற்படும் விபரீதங்களை சரிசெய்ய பல வருடங்கள் எடுத்தாலும் மீளமுடியாமற்போகும் என்று தேசிய சமாதான சபையின் செயற்திட்ட அதிகாரி திருமதி நிரோசா அந்தோனி தெரிவித்தார்.

கண்டி, பேராதனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்:-

தேசிய சமாதான சபை நாடு முழுவதும் 23 மாவட்டங்களில் 'வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிரான பிரசாரப் பணி ஒன்றை மேற்கொள்கின்றது. அதன் முதலாவது வேலைத்திட்டம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் பல்வேறு பிரச்சினைகளை நாம் சந்தித்துள்ளோம். அதன் பாரிய விளைவாக 30 வருட யுத்தத்தைக் கண்டோம், அதுபோல் எதிர்காலத்தில் பாரிய விளைவுகள் ஏற்படாதிருக்க நாம் உடனடியாக வெறுப்புப் பேச்சுக்களை தவிர்ந்துகொள்ள வேண்டும். இன்று சமூக வளைத்தளங்கள் பரவலாக வெறுப்புப் பேச்சுக்களை பதிவிடுகின்றன. வெறுப்புப் பேச்சுக்கள் இல்லாத தகவல்கள் எதுவும் இல்லை என்ற நிலையில் இன்று சமூக ஊடகங்கள் நடந்து கொள்கின்றன. அதே நேரம் சமூக ஊடகங்களை அதிகம் இளைஞர்களே கையாள்கின்றனர். எனவே இளைஞர்களுக்கு மத்தியில் வெறுப்புப் பேச்சுக்களை தவிர்ந்து கொள்ளும் வகையில் நாம் பிரசாரப்பணி ஒன்றை மேற்கொண்டுள்ளோம். வெறுப்புப் பேச்சு என்பது வெறுமனே பேச்சு மட்டுமல்ல. சகல வெளிப்படுத்துகைகளும் அதில் சேரும். அது குறியீடாகவோ, நடத்தையாகவோ, அல்லது ஏதோ ஒரு வகையில் அமையலாம் என அவர் தெரிவித்தார்.

# கொழும்பு - பதுளை வீதி உணவகங்களில் சீர்கேடு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

கொழும்பு பதுளை வீதியில் உணவுத் தேவைகளுக்காக நிறுத்தப்படும் உணவகங்களில் சீர்கேடுகள் இடம்பெறுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எஹலியகொடை, மின்னானபரகடுவ, குருவிட்ட, இரத்தினபுரி, லெல்லோபிடிய பெல்மதுளை, பலாங்கொடை, பெலிஹுல்ஓய, மரன்கஹவெலஹல்துமுல்ல போன்ற இடங்களில் உணவிற்காக பஸ் வண்டிகள் நிறுத்தப்படுகின்றன.

இவற்றில் பெரும்பாலான உணவகங்களில் உணவுப்பொருட்களின் தரம், அளவு, சுத்தம், சுவை போன்ற விடயங்களில் மோசடிகள் இடம்பெறுவதாக பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் உணவு வகைகளை தயாரிப்பதிலும் பரிமாறுவதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் சுத்தம் கீழ்மட்டத்தில் உள்ளதுடன் இது சம்பந்தமாக சுகாதார அதிகாரிகள் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாமா – மருமகன் வாய்தர்க்கம்; ஒருவர் பலி





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கொத்மலை வெதமுல்ல தோட்டத்தில் கெமினிதென்ன பிரிவில் மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் முற்றியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொத்மலை வெதமுல்ல தோட்டத்தின் கெமினிதென்ன பிரிவில் வசித்த 35 வயதான கணேசன் விஜயகுமார் என்ற மருமகனே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

வாய்தர்க்கம் முற்றியதில் மாமனார் மருமகனை அருகில் இருந்த பொல்லால் தாக்கியுள்ளார்.

இதன்போது காயமடைந்த மருமகன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் தொடர்பில் 1990 என்ற அவசர இலக்கத்திற்கு அழைப்பெடுத்து அறிவித்த போதும் நோயாளர் காவு வண்டி அங்கு வர தாமதமாகியுள்ளது. இதனையடுத்து தாக்குதலை நடத்திய மாமானார் தனது முச்சக்கர வண்டி மூலம் காயமடைந்த வரை நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு கொண்டு செல்லும் போது நோயாளர் காவு வண்டி இடையில் வந்துள்ளது.

அப்போது நோயாளர் காவு வண்டியில் வந்தவர்கள் காயமடைந்தவரை பரிசோதித்த போது அவர் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனைதொடர்ந்து மாமனார் சடலத்தை கண்டி – நுவரெலியா பிரதான வீதியில் வீசிவிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலை சம்பவம் தொடர்பில் மாமா கொத்மலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் நுவரெலியா பொது வைத்தியசாலையின் பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வெலிஓயாவில் மூழ்கி காணாமல் போன தந்தையும் மகனும் சடலமாக மீட்பு



**பதுளை தினகரன் விசேட நிருபர், மஸ்கேலியா தினகரன் விசேட நிருபர்**

ஹல்துமுள்ளை பகுதியை ஊடறுத்துச் செல்லும் ஆற்றில் நேற்று முன்தினம் நீராடச்சென்ற நான்கு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அங்கு கூடி இருந்த இளைஞர்கள் ஆற்றில் குதித்து இருவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். அவர்கள் கிசிச்சைகளுக்காக அரசினர் மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

மகரகமையிலிருந்து பதுளைக்கு சுற்றுலா சென்றவர்களே இவ்வாறு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளனர். பதுளைக்கு சுற்றுலா செல்லும் வழியில் இவர்கள் ஹல்துமுள்ளை ஆற்றில் நீராடச்சென்றனர். அவ்வேளையில் திடீரென ஆற்றின் நீர் அதிகரித்துள்ளது. இதனால் நால்வரும் ஆற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். இருவர் மீட்கப்பட்ட நிலையில் ஏனைய இருவரையும் தேடும் பணியில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை வரை மீட்பு பணிகள் இடம்பெற்ற போதும் இருள் சூழ்ந்தமையால் தேடுதல் பணிகள் இரவு 9 மணியளவில் நிறுத்தப்பட்டன. இதனையடுத்து நேற்று 16.04.2021 காலை மீண்டும் தேடுதல் பணிகள் ஆரம்பமாகின. இந்நிலையில் இருவரும் நேற்று 500 மீற்றர் பள்ளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டனர்.

இலங்கை இராணுவம் பொலிஸ், அதிரடிப்படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தேடுதல் பணியில் ஈடுபட்ட போதே இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட இருவர் தியத்தலாவை அரசினர் மருத்தவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். 52 வயதான தகப்பன் 17வயதான மகன் ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

# பெருந்தோட்டக் குடும்பங்களுக்கு ரூ.5,000 நிவாரணக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனையடுத்து அரசாங்கம் சித்திரைப் புத்தாண்டுக்கான நிவாரணக் கொடுப்பனவாக 5000 ரூபா வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனையடுத்து 5000 ரூபா கிடைக்காத பெருந்தோட்டங்களை சேர்ந்த குடும்பங்களுக்கு அதனை பெற்றுக்கொடுக்க, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்த வகையில், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஆறாயிரம் பெருந்தோட்ட குடும்பங்களுக்குஐந்தாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானத்தைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு, சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஐந்தாயிரம் ரூபாய் நிவாரணத் தொகையொன்றை வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இருப்பினும், பெருந்தோட்டப் பகுதிகளில், சமுர்த்தி பயனாளிகளின் தொகையானது, விரல் விட்டு எண்ணக்கூடிய வகையிலேயே காணப்படுகின்றது. அதனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஐந்தாயிரம் ரூபாய் கொடுப்பனவு கிடைப்பதில் சிக்கல் நிலை காணப்படுகிறது.

இது தொடர்பில், பதுளை மாவட்ட அரசாங்க அதிபரிடம் செந்தில் தொண்டமான் கேள்வி எழுப்பிய போது, சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்க மாத்திரமே நிதி கிடைத்துள்ளதென்றும் அதனால், பெருந்தோட்டக் குடும்பங்களுக்கு வழங்க வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பிரதமருடன் கலந்துரையாடிய செந்தில் தொண்டமான், குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்குமாறு வலியுறுத்தினார்.

அதற்கமைய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு இந்த ஐந்தாயிரம் நிவாரணத் தொகை, இன்னும் ஓரிரு நாட்களில் கிடைக்கப்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலேவெலவில் பட்டப்பகலில் திருட்டு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதிபொல பகுதி வீடொன்றில் சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணத்தை திருடிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்திருட்டு சம்பவம் ஆசிரியர் தம்பதி ஒருவரின் வீட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆசிரியர் தம்பதிகள் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி காலை 10 மணியளவில் வீட்டின் முன் கதவை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்துள்ளார். அங்கு அலுமாரியை உடைத்து திருடிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த வீட்டாரின் (பெண்) உறவினர் ஒருவர் திருடனைக்கண்டு கூச்சலிட்டுள்ளார். இதனையடுத்து அங்கிருந்து சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் 25 ரூபாய் பணத்தை திருடிக்கொண்டு திருடன் தப்பி சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தம்புள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



2021 சித்திரை புத்தாண்டு தினத்தன்று குயின்ஸ்பெரி மத்திய பிரிவு அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அகில இலங்கை மக்கள் முன்னேற்ற முன்னணி தலைவர் இளங்கோ காந்தி ஊடாக கையளிக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

# பதுளைக்கு சுற்றுலா சென்ற வான் விபத்து ஒருவர் பலி, 13 பேர் படுகாயம்

புத்தாண்டை முன்னிட்டு பதுளைக்கு சுற்றுலா சென்று கொண்டிருந்த வான் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

14 பேர் சென்ற நிலையில் வான் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் ஏனைய 13 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை கந்தகெட்டிய பிரதான பாதையில் போபிட்டிய என்ற இடத்திலேயே இவ்விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளான 13 பேரும் பதுளை அரசினர் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் ஆறு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருந்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆறு ஆண்களும் ஐந்து சிறார்களும் மூன்று பெண்களுமாக 14 பேர் சுற்றுலா சென்றிருந்தாகவும் இவர்களில் ஆணொருவர் பலியானதுடன் 13 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கந்தகெட்டிய பொலிஸார் இவ் விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வான் சாரதியின் பொறுப்பற்ற தன்மையே விபத்துக்கு காரணமென பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 ஏப்ரல் 17
சனிக்கிழமை





புத்தாண்டு தினத்தில் வவுனியா, வைரவபுளியங்குளத்தில் எழுந்தருளியிருக்கும் ஆதிவிநாயகர் திருக்கோவில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

(படங்கள் வவுனியா விசேட நிருபர்)

## குருந்தூர் மலையில் இந்துமக்கள் வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்போம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



முல்லைத்தீவு தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலமான குருந்தூர்மலையில், இந்து மக்கள் வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வழக்கொன்றினைத் தொடர்வது தொடர்பில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கடந்த 30.01.2021 அன்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அன்று வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் சிலவற்றினைக் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் இதன் தொடர்ச்சியாக நேற்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து வழக்குத் தொடர்வது தொடர்பான முக்கிய ஆவணங்கள் சிலவற்றினை கையளித்திருந்தனர்.

இச் சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை சம்பந்தமாக சில வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு பிணக்கு ஏற்பட்டது. அது தொடர்பாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு அதிலே ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்களத்தினர், அமைச்சரோடு வந்து அங்கே இருந்த வழிபாட்டுச்சின்னத்தை அகற்றி ஒரு புத்தர் சிலையை வைத்து புதியதாக தொல்பொருள் ஆராய்ச்சி என்று ஆரம்பித்துள்ளார்கள்.

ஆகையினாலே இது தொடர்பாக வழக்கு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக, கடந்த 2018ஆம் அண்டு தாக்கல்செய்யப்பட்ட AR/673/18 என்ற வழக்கின் ஆவணப் பிரதியை முழுமையாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் என்னிடம் கையளித்திருக்கின்றார். அந்த இடத்தில் இந்து மக்கள் சென்று வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையினை நாங்கள் மேற்கொள்வோம் என்றார்.

## தாக்கப்பட்ட மீனவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய அஞ்சுகின்றனர்

*மன்னார் குறூப் நிருபர்*



கடற்படையினரின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு அச்சப்படுகின்றனர்.தாக்குதலை மேற்கொண்ட கடற்படையினர் முறைப்பாடு செய்ய வேண்டாம் என குறித்த மீனவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனை பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடந்த 13ஆம் திகதி இரவு நேரத்தில் நாச்சிகுடா வளைப்பாடு எல்லை பகுதியில் இரண்டு படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணம் மற்றும் ஒரு தொலை பேசியையும் கடற்படையினர் எடுத்து சென்றுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பாதிக்கப்பட்ட மீனவர்களை வியாழக்கிழமை(15) நேரில் சந்தித்து கலந்துரையாடினார். அப்போதே பாதிக்கப்பட்ட மீனவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

கடற்படையினரின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு அச்சப்படுகின்றனர்.

தாக்குதல் மேற்கொண்டதற்கான எந்த ஒரு காரணமும் கடற்படையால் மீனவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. அதே நேரம் அவர்களிடம் இருந்த தொலைபேசியையும் பறித்து சென்றுள்ளனர்.

அதே நேரம் கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்ட சமயத்தில் அங்கிருந்த மீனவர்கள் தாக்குதலை வீடியோ பதிவு செய்து விடக்கூடாது என்பதற்காக அனைத்து தொலைபேசிகளையும் பறித்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ் விடயம் தொடர்பாக மன்னார் கடற்தொழில் திணைக்களத்திடம் வினவியதாகவும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தற்பொது விடுமுறையில் இருப்பதாகவும் இது தொடர்பாக தான் ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். அதே நேரம் கடற்றொழில் அமைச்சரிடமும் குறித்த விடயம் தொடர்பாக தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் குறித்த மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கு நீதி வேண்டும் என கோரியதாகவும், தான் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமானால் மாவையே முதலமைச்சர் வேட்பாளர்

*கோப்பாய் குறூப் நிருபர்*



மாகாணசபைத் தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜாவே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவார்.

ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடாத்தும் எண்ணம் அரசாங்கத்திடம் மிகக் குறைவாகவே காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

புதன்கிழமை (14) அவரது இலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,..

தற்போதைய அரசாங்கமானது மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் நிலைப்பாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கான அறிகுறிகளே பெரும்பாலும் காணப்படுகின்றன.

எல்லை நிர்ணயக் குழுவை ஏற்படுத்தி மாகாணசபை தேர்தல்களை பிற்போடுவதற்கான முயற்சிகள் அரங்கேறி வருகின்றன.

மாகாண சபையை பொருத்தவரை அரசியல் பேசும் இடமல்ல, அதிகாரிகளுடன் இணைந்து அபிவிருத்திகளை திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய சபை. இதனை நன்கு செயற்படக் கூடிய ஆளுமை அரசியல் அறிவு அதிகாரிகளுடன் அன்னியோன்னியமாக நடந்து கொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் தமிழ் மக்களுடைய ஆரம்ப கால வரலாறுகளை நன்கு அறிந்தவராக மாவை சேனாதிராஜா காணப்படுகிறார்.

மணிவண்ணன் தொடர்பில் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றது. மணிவண்ணன் தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் அல்ல அவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்றால் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு.ஆகவே மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தும் கருத்து எனது தனிப்பட்ட நிலைப்பாடு அதற்கான காரணங்களையும் கூறியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் இளைஞர் சடலமாக மீட்பு

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் கோணாவில் மத்தியில் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு (15) இச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். வீட்டின் பின்பகுதியின் கூரையில் கயிற்றினால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கோணாவில் மத்தியை சேர்ந்த செல்வநாயகம் விதுசன் வயது 25 என்ற இளைஞனே தவறான முடிவெடுத்து இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் இதே பகுதியைச் சேர்ந்த திருமணமான இளம் யுவதி ஒருவரும் தீயிட்டு தற்கொலை செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீப காலமாக தற்கொலைகள், அதிகரித்து வருகின்றதோடு குறிப்பாக இளம் சமூகத்தினர் அதிகளவில் தற்கொலை செய்துகொள்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

## பெண் ஒருவர் கொரோனாவால் உயிரிழப்பு

*யாழ்.விசேட நிருபர்*

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த 59 வயது பெண் ஒருவர் கொவிட் 19 தொற்றால் உயிரிழந்துள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முள்ளேரியா தொற்றுநோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் முள்ளேரியாவிலேயே மின்தகனம் செய்யப்படதாகவும் குறிப்பிட்டார்.



புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தினால் 5,000 ரூபா விசேட நிவாரண கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் மூன்றாவது நாளாக (15) ஆம் திகதி கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்ட போது,....

படம் வவுனியா விசேட நிருபர்

## வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் அறநெறி பாடசாலை



*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய வளாகத்தில் சிவத்தொண்டர் லயன நாகேந்திரம் சுபாதர்ஷன் ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை நேற்று திறந்து வைக்கப்பட்டது. ஆதிவிநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் நகரசபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சிவத்தொண்டர் லயன் நாகேந்திரம் சுபாதர்ஷனின் ஞாபகார்த்தமாக நாகேந்திரம் அகிலேஸ்வரி குடும்பத்தினரினால் இவ் அறநெறி பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது.

நகரசபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற அறநெறி பாடசாலை திறந்து வைக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நகரசபை உறுப்பினர்களான சந்தரகுலசிங்கம், லக்சனா நாகராஜன் பொதுமக்கள், ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## புத்தாண்டு தினத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவர் கைது

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புத்தாண்டு தினத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐந்து நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களின் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றொஷான் சந்திரசேகர தலைமையில் (14) இரவு முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் செலுத்திய மூன்று மோட்டார் சைக்கிள், இரண்டு முச்சக்கரவண்டி ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சட்டவிரோத கட்டடங்கள் அதிகரிப்பு

*மானிப்பாய் தினகரன் நிருபர்*

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சட்டவிரோத கட்டடங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன. இரவு நேரங்களிலும் விடுமுறை தினங்களிலும் இடம்பெற்றுவரும் கட்டடங்கள் அமைக்கும் செயற்பாடுகள் குறித்து பிரதேச சபை உறுப்பினர்கள் பல தடவைகள் தவிசாளருக்கு சுட்டிக் காட்டிய போதிலும் தவிசாளர் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாக இருப்பதாகவும் சாக்குப் போக்கு சொல்லி தட்டிக் கழிக்கிறார் என உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்களை கொண்ட வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் பலர் கட்டடங்களை அமைத்து வருகின்றனர். சிலர் இரவு நேரங்களிலும் விடுமுறை தினங்களிலும் சட்டவிரோத கட்டடங்களை அமைப்பதில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பிரதேச சபை நகர சபையாக தரம் உயர்த்தப்படவிருக்கும் நிலையில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத கட்டடங்கள் குறித்து உறுப்பினர்கள் பிரதேச சபை கூட்டங்களில் எடுத்துக்கூறியும் தவிசாளர் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வருவதால் தவிசாளரின் செயற்பாடு தொடர்பில் அதிருப்தி தெரிவித்துள்ள கட்டடங்கள் குழு உறுப்பினர்கள், குழு உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப்போவதாக தெரிவித்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



## வீதி அபிவிருத்தி;
# அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிப்பு

**பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன்**

காரைதீவு குறுப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் வீதி அபிவிருத்திவேலைத் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதனைத் தெரிவித்தேன் என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கோமாரிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் ஜெயசிறிலின் முயற்சியால் பிரான்ஸ் நாட்டில் 5 வயதில் மறைந்த கர்ணிகா ஞாபகார்த்தமாக ஒரு தொகுதி உதவிகள் பலஇடங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது.



அவைகளில் ஒன்றான கோமாரி தேவாலயத்திற்கு கதிரைகள் வழங்கிவைக்கும் நிகழ்வில் உரையாற்றிய கலையரசன் மேலும் கூறியதாவது:

கடந்தகால யுத்தத்தால் மிக மோசமாகப்பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் அபிவிருத்திகளை வேண்டி பலத்த எதிர்பார்ப்பில் உள்ளனர். பாரிய ஏக்கத்துடன் காலத்தைக் கடத்திவரும் அவர்கள் மேலும் புறக்கணிக்கப்பட்டு வருவது மனிதாபிமானமல்ல.

தமிழர் பிரதேசங்களில் குடிநீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. கவனிப்பாரில்லை. நானும் சுமந்திரன் எம்.பியும் அண்மையில் அமைச்சரைச் சந்தித்து இதுவிடயம் தொடர்பாக பேசியுள்ளோம். விரைவில் அது நடைமுறைக்கு வரலாமென்ற நம்பிக்கையுள்ளது.

தம்பி ஜெயசிறில் போன்று இளம் தலைவர்கள் உருவாகவேண்டும். தமிழின விடுதலைப் போராட்ட வரலாற்றில் கிறிஸ்தவ மதத்தலைவர்களுக்கு தனியிடமுண்டு. அண்மையில் மறைந்த ஆயர் இராயப்புஜோசப் அடிகளார் தமிழினத்திற்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர். அநீதிகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தவர் என்றார்.

# முள்ளிப்பொத்தானையில் புதுவருட கொடுப்பனவு



முள்ளிப்பொத்தானை குறுப் நிருபர்

தமிழ் சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராளவின் நெறியாள்கையில் முள்ளிப்பொத்தானை சமுர்த்தி வங்கியில் வைத்து திங்கட்கிழமை (12) பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள கலந்து கொண்டு 5000 ரூபா கொடுப்பனவினை வழங்கி வைத்தார். இந்த கொடுப்பனவானது தகுதிபெற்ற அனைவருக்கும் 12,13ஆம் திகதிகளில் மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளுக்குள்ளும் தொடர்ந்தும் வழங்கப்பட விருப்பதாக இதன் போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் தலைமை முகாமையாளர் முஸம்மிலா ராபிக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புதிய உறுப்பினர் நியமனம்

கிண்ணியா மத்திய நிருபர்

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் கிண்ணியா நகர சபை உறுப்பினராக நாஸிக் மஜீத் நேற்று (16) பதவியேற்றுக் கொண்டார். NFGG கட்சியின் திருகோணமலை மாவட்ட செயற்குழு உறுப்பினரான இவர், அக்கட்சியின் நகர உறுப்பினராக இருந்த ஏ.எம். அனீஸ் இராஜினமா செய்ததையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது பதவியேற்பு வைபவம் நகரசபை தவிசாளர் எம்.எச். நளீம் முன்னிலையில் இடம்பெற்றது.

# சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கவும்

(மூதூர் தினகரன் நிருபர்)

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றிய நிலையில் ஐவேளை தொழுகை மற்றும் தராவீஹ் தொழுகை உள்ளிட்ட ஏனைய வணக்க வழிபாடுகள், மூதூர் பிரதேச பள்ளிவாசல் நிருவாகத்தினரின் அறிவுறுத்தல்களுக்கமைய இடம்பெற்று வருகின்றன.

புனித ரழமான் நோன்பு ஆரம்பமாகிய நிலையில், ஒவ்வொரு பள்ளிவாசலிலும் ஆண் மற்றும் பெண்களுக்காக இடம்பெற வேண்டிய தராவீஹ் தொழுகை மற்றும் ஏனைய வணக்க வழிபாடுகளை எவ்வாறு சுகாதார நடைமுறைகளைப் பேணி கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றிய விளக்கங்களும் நிருவாகிகளால் தெளிவாக அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக றிஷாத் கடமையேற்பு



(கல்முனை விசேட நிருபர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்ட டொக்டர் அல்அமீன் றிஷாத் நேற்று முன்தினம் (15) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களினால் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.மாஹிர் உட்பட ஊர்ப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வந்த டொக்டர் ஏ.எல்.எம். அஜ்வத், வருடாந்த இடமாற்றத்திற்கமைவாக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

பொது வைத்தியசாலை போன்றவற்றில் கண் சிகிச்சைப் பிரிவு விசேட வைத்திய அதிகாரியாக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய வைத்தியர்களின் வருடாந்த பொதுக்கூட்டம்

(அட்டாளைச்சேனை குறுப் நிருபர்)

உள்நாட்டு பாரம்பரிய வைத்திய முறைமையினை பாதுகாப்பதோடு அவற்றை ஆய்வுசெய்து அவைகளின் சிறப்பு தகவல்களை ஆயுர்வேத திணைக்களத்திற்கு வழங்குவதன் மூலம் ஆயுர்வேத பாரம்பரிய செயற்பாடுகளை மேம்படுத்தலாம் என அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஒருங்கிணைந்த பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் தலைவர் வைத்தியர் எம்.ஏ.எம். நஹீம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஒருங்கிணைந்த பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையினரின் வருடாந்த பொதுக் கூட்டம் அக்கரைபற்று பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது, மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டதையடுத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொத்துவில் தொடக்கம் துறைநீலாவணை வரையுள்ள பாரம்பரிய சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் கலந்துகொண்ட இவ்வருடாந்த பொதுக்கூட்டத்தில், செயலாளராக வைத்தியர் எம்.எஸ்.வீ.எம். மர்சூக் மீண்டும் தெரிவானார்.

வைத்தியர் மர்சூக் அங்கு உரையாற்றுகையில், இவ்வமைப்பை உருவாக்குவதற்கு தான் எடுத்த முயற்சிகளையும் அனுபவித்த இடர்பாடுகளையும் விளக்கினார். இவ்வமைப்பு எவ்வாறு கட்டுக்கோப்புடன் இயங்கவேண்டுமெனவும் இங்கு சமுகமளிக்காத வைதியர்களையும் உள்வாங்கவேண்டும். இதன் வளர்ச்சிக்கும் மேலான செயற்பாட்டிற்கும் தம்மாலான பங்களிப்பை முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வைத்தியர் எம்.எ.எம். நஹீம், உபதலைவர்: வைத்தியர் இளையதம்பி வீரசிங்கம், செயலாளர்: வைத்தியர் எம்.எஸ்.வீ.எம். மர்சூக், உபசெயலாளர்: வைத்தியர் ஏ.ஏ. மன்சூர்,

பொருளாளர்: வைத்தியர் எம்.எம். முபாரக், கணக்காய்வாளர்: வைத்தியர் எ.எம். அஹ்மத்லெப்பே ஆகியோர் தெரிவாகினர்.

நி ர்வாகசபை உறுப்பினர்களாக வைத்தியர்கள்: எம்.ஏ.சலஹுடீன், எம்.ஏ.ஆரிபா, எம்.ரீ.ஹில்மி, எம்.எஸ்.எம்.சம்சுதீன், ஜே.நஜீப், என்.ஏ.மனாப், எம்.டி. தாஜுன்நிசா, டி.சிவமணி செல்லத்துரை, டி. மயில்வாகனம், எஸ்.எம்.செயினுலாப்தீன், எம்.ஏய்.எம்.சக்கி, எம்.டி.சேகு மொஹிடீன் ஆகியோர் தெரிவாகினர்.

# துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

(றொட்டவெவ குறுப் நிருபர்)

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்தாபெந்திவெவ பகுதியில் உள்ளூர் மற்றும் வெளியூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் நேற்றுமுன்தினம் (15) சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலாலுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அவருடைய வீட்டை சோதனையிட்ட போது இந்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் துப்பாக்கியை பாவிப்பதற்கான காரணங்கள் எதுவும் இன்னும் தெரியப்படுத்தப்படாத பட்சத்தில் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் பகிர்ந்தளிப்பு

கல்குடா தினகரன் நிருபர்

ரமழான் மாதத்தினை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கல்குடா தொகுதியில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கல்குடா கிளை காரியாலயத்தில் பேரீச்சம்பழம் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.




அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை பிரதித் தலைவர் மௌலவி ஏ.பி.எம்.முஸ்தபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தென்னை மற்றும் சிறு கைத்தொழில் இராஜங்க அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்புச் செயலாளர் என்.எம்.சுஐப், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்குடா தொகுதி செயற்பாட்டாளர்களான எஸ்.எம்.சிம்ஸான் மற்றும் என்.எம்.எம்.சியாம், சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட பேரீச்சம்பழ பெட்டிகள் ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட நாற்பத்தி ஏழு (47) பள்ளிவாசல்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



ஒலுவில் வஹாப்தீன் எழதிய முடக்கத்தான் கவிதை நூல் வெளியீடும் ரூபவ் கவிதை உரை நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒலுவிலில் நடைபெற்றது. கவிஞர் சோலைக்கிளி கவிஞர் பாலமுனை பாறூக்கிற்கு நூலை வழங்கும் போது.

(படங்கள்: மருதமுனை தினகரன் நிருபர்)

# மட்டக்களப்பில் மின்னல் தாக்கி விவசாயி மரணம்

(பெரியபோரதீவு தினகரன், மணல் சேனை நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையர்கட்டு கிராமத்தில வியாழக்கிழமை (15) மாலை மின்னல் தாக்கியதில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் இஸ்த்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வியாழக்கிழமை (15) நண்பகல் வரைக்கும் அப்பகுதியில் கடும் உஷ்ணத்துடன் வெயில் காணப்படது. ஆனாலும் மாலை வேலையில் திடீரென அப்பகுதியில் பலத்த இடி மின்னல் மற்றும் காற்றுடன் மழை பெய்திருந்தது.

இந்நிலையில் மாலையர்கட்டு கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நல்லதம்பி மோகனசுந்தரம் எனும் விவசாயி உயிரிழந்துள்ளதாக அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்தார்.

இந்நிலையில் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தென்னை மர உச்சியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(கல்லடி குறுப், பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் உள்ள தோட்ட காணியொன்றில் தென்னை மர வட்டிலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தேவாலய வீதி, மகிளூரைச் சேர்ந்த 59 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தென்னம் பதநீர் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய நபரை மிக நீண்ட நேரமாகியும் காணவில்லையென தேடியபோது, தென்னை மரத்தின் வட்டிற்குள் இருந்ததைக் கண்டதனைத் தொடர்ந்து களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குறித்த நபர் இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக களுவாஞ்சிகுடி பொலிசார் குறித்த சடலத்தினை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன், களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதன் பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக் குட்படுத்தும் படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிசார் மேற்கொண்டு வருவதுடன், பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பாடசாலையில் முறையான வரவு செலவு திட்டம் அவசியம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

பாடசாலையில் முறையான வரவு செலவுத் திட்டத்தின் மூலமே நிலையான அபிவிருத்தியைக் காண முடியும். காலத்திற்கு காலம்வரும் நிதி உபயோகம் தொடர்பாக வரும் மாற்றங்களை அறிவது அதிபர்களின் கடமையாகும் என கல்முனை வலயக்கல்வி அலுலக கணக்காளர் ஹபீபுல்லாஹ் தெரிவித்தார்.

கல்வி அபிவிருத்தியில் பாடசாலை நிதிப்பிரயோகம் தொடர்பாக கல்முனை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றுகையிலே இதனைத் தெரிவித்தார். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கணக்காளர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலைக்கு பல்வேறு நிதி மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியை காலந்தாழ்த்தாது வங்கியில் வைப்பிலிடுவதோடு சிறு தொகையை மாத்திரமே கையில் வைத்திருக்க வேண்டும்.

நிதிப்பிரயோக விடயத்தில் கவலையீனம் காணப்படுவதை மதிபீட்டாளர்கள் இனங்கண்டுள்ளனர். வசதிக்கட்டணம் அறவிடும்போது பற்றுச்சீட்டு வழங்குவது அத்தியாவசியமானதாகும் என தெரிவித்தார்.

## கலைக் கதம்பம்

சைத்திரியன்

# காதலையும் வீரத்தையும் சொல்லும் சங்க இலக்கியப் பாடல்கள்

காதலையும் வீரத்தையும் இரு கண்கள் எனப் போற்றி வாழ்ந்தவர்கள் சங்க கால மாந்தர்கள். அத்துடன் அவர்கள் கூர்த்தமதி உடையவர்கள் என்பதை அவர்களது பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கும்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணை காதல், அன்பு,இல்வாழ்க்கை முதலிய அக வாழ்வு முறைகளை எடுத்தியம்புகிறது.

அன்பு:

தலைமக்கள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் வைத்துள்ள அன்பின் வலிமையை பறைசாற்றுகிறது இப்பாடல்.

தலைவன் தலைவியை காணக் காலம் தாழ்த்துதலைத் தோழி சுட்டிக்காட்டும் வேளையில் தோழிக்குத் தலைவி 'என் தலைவன் எப்படிப்பட்டவன் தெரியுமா?' என்று கூறுவது போல் அமைந்துள்ளது நின்ற சொல்லர் நீடு தோறு இனிய என்கிற பாடல்.



"என் தலைவன் சொன்ன சொல் தவறாதவன். மனதில் நினைக்கும் தோறும் இனிமையைத் தருபவன். எங்களுக்குள் உண்டான அன்பு எத்தகையது தெரியுமா? குளத்தில் மலர்ந்துள்ள தாமரை மலரில் எடுத்த தேனை மலை உச்சியிலே இருக்கும் சந்தன மரத்தின் கிளையில் கொண்டு போய் அங்குள்ள தேன்கூட்டில் தேனை சேகரிக்கும் வண்டு.

அப்படி சேகரித்த தேனின் குணம் எவ்வளவு உயர்வானதோ அதைப் போன்றது அது மட்டுமல்ல உலக இயக்கத்துக்கு தண்ணீர் எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போன்றது. அது மட்டுமல்ல உலக இயக்கத்துக்கு தண்ணீர் எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போன்றது எங்களுக்குள் நாங்கள் கொண்டுள்ள அன்பு என்பதை பறைசாற்றுகிறது கபிலரின் இந்தப் பாடல்.

அறக்கருத்துக்கள்:

அறம் என்பதற்கு அகராதிகள் பல்வேறு பொருள்களை குறிப்பிடினும் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உடலாலும் மனதாலும் தீங்கு நேராத வண்ணம் வாழ்வை நகர்த்திச் செல்லும் வழி முறையை கற்றுக் கொடுப்பவற்றை அறங்கள் எனலாம்.

இந்த அறங்களை தனிமனிதனுக்கு, குடும்பத்திற்கு, சமூகத்திற்கு, அரசனுக்கு, நாட்டிற்கு என்று வகைப்படுத்தினும் சமூகம் சமநிலையில் தத்தமது அன்றாட பணிகளை மேற்கொள்ள துணையாக அறங்களைக் கொள்ளுதல் மரபு. அவ்வகையில் நற்றிணையில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் பலவற்றுள் ஒரு சோறு பதமாக ஒன்றைக்கூற முடியும்.

தலைவியைக் காணாது வருந்துகிறான் தலைவன். தோழி சொல்லைத் தலைவி கேட்டபாடில்லை. தலைவன் மீது தீராத ஊடல் கொண்டுள்ள தலைவியைத் தேற்றுதல் உடனடியாக நடக்காது என்பதை புரிந்து கொண்ட தோழியின் கூற்றாக அமைந்த பாடல் இது.

மலையிலிருந்து வீழும் அருவி எப்படி இருந்தது என்பதை கூற வந்த தோழி, "தலைவியே நீ வீணாக தலைவன் மீது குற்றம் சுமத்தாதே. நம் சமூகத்தின் வழக்கம் என்ன தெரியுமா? நமக்கு ஒரு விடயத்தில் ஐயம் ஏற்படின் அந்த ஐயத்தை நம்மை சுற்றியுள்ளவர்களிடம் கேட்டுத் தெளிவு பெறுதல் ஆகும்.

எனவே நான் சொல்வது உனக்கு உண்மையெனத் தோன்றவில்லையெனில் நான்கு பேரிடம் கேட்டு சந்தேகத்தைப் போக்கிக் கொள் என்கிறாள் அவள்.

முனைவர்
க.சிவமணி ...

## நோன்பு கவிதைகள்



### ஸஹர் செய்து!

வைகறை வெளுக்கும் முன்
ஸஹர் செய்து
பொழுதின் உதயத்தில்
கூட்டாக நோன்பை துறந்து
இரவு வணக்கங்களை சுகமாக
நின்று வணங்கி
நிலையான வாழ்க்கையை
சிந்திக்க வைக்கிறது
ரமழான் நோன்பு !

### பட்டறை

உள்ளங்களை சுத்தப்படுத்தும் எண்ணங்களும்
இருண்மைகளில் ஒளி வீசிடும் வண்ணங்களும்
பசியோடு கற்றுத்தருகிறது
ஏழ்மையின் தாகம்
ரமழானெனும்
பிறை வெளிச்சத்தின்
பட்டறையில்...!

### அமல்கள்

வீட்டின் சுவர்களை
வண்ணங்களால் அலங்கரித்து
கூரையின் தூசுக்களை
சுத்தப்படுத்தி எழிலாக்குவது போல
உள்ளத்தின் அடித்தளத்தில்
நன்மையான ரமழானின்
நிலையான தூண்களால்
சுவர்க்கத்தில் விலைமதிப்பான
அமல்களால் மாளிகை கட்டி
முடிந்தால் இன்னும்
எதையாவது சேர்த்துக்கொள்..!

ரஹீம்

# கல்முனையில் கலைஞர் சங்கமம்







கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய கலைஞர் சங்கமம் நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தொடக்க உரையினை சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன் நிகழ்த்தினார். கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். நவநீதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கல்முனை பிரதேசத்தின் தற்போதைய இலக்கியச் சூழல், ஈழத்து நூல்கள், ஈழத்து மெல்லிசை பாடல்கள், நாட்டுக்கூத்து மற்றும் நாடகம் தொடர்பிலும் கருத்துப் பகிர்வுகள் நடைபெற்றன.
(படங்கள்: வெல்லாவெளி தினகரன் நிருபர்)

# நக்கீரன் மகளின் இரு நூல்கள் வெளியீடு



மகுடம் பதிப்பக வெளியீடுகளான டென்மார்க் நக்கீரன்மகளின் ஆழக்கீறல் சிறுகதைத்தொகுப்பு, தேவதைமீட்டிய யாழ் கவிதைத்தொகுப்பு ஆகிய இரு நூல்களின் Zoom மூலமான வெளியீட்டு விழா நாளை ஞாயிறு 18ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி அகுஸ்தின் நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக பேராசிரியர். செ. யோகராசாவும் சிறப்பதிதியாக பேராசிரியர் பாலசுகுமாரும் (லண்டன்) கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை மகுடம் வி. மைக்கல் கொலினும் சிறுகதை நூல்விமர்சனத்தை டென்மார்க் எழுத்தாளர் ஜீவகுமாரனும் எழுத்தாளர் மண்டூர் அசோகாவும் கவிதைநூல்விமர்சனத்தை எழுத்தாளர் ச. மணிசேகரன் மற்றும் டென்மார்க் எழுத்தாளர் கே.எஸ்.துரையும் ஆற்றவுள்ளனர்.



சிறப்புரையை சிறுகதை மஞ்சரி ஆசிரியர் லண்டன் எழுத்தாளர் மு. தயாளனும் கருத்துரைகளை கவிஞர் மேமன்கவி, அருணா சுந்தரராசன் ஆகியோரும் வாழ்த்துரைகளை கவிஞர் கங்கைமகள், எழுத்தாளர் இணுவையூர் சக்திதாசன், எழுத்தாளர் குடத்தனை உதயன், எழுத்தாளர் தீபதிலகை கவிஞர் அவதானி ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஏற்புரையை நூலாசிரியர் நக்கீரன் மகளும் நன்றியரையை றொபேட் கெனடியும் நிகழ்த்துவர். பின்வரும் சூம் எண்கள் மூலம் நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும்.

*Zoom ID 817 4577 1670*
*pass code 810177.* (ஸ)

# இனிய நாதம் தரும் 'வீணையடி நீ எனக்கு'



(கடந்த வாரத் தொடர்)

மாமாங்கப் பிள்ளையார் திருவிழாவின் பேரிரைச்சலுக்குள்ளும் ஓர் ஆழ்ந்த மௌனம். ஒரு பெண்ணுக்குள் ஏற்படுகின்ற இத்தனை கொந்தளிப்புகளும், வேலிக் கம்பியில் மாட்டித் தவிக்கும் சொப்பிங் பேக்காய் தவிக்கும் தவிப்புக்களும் இந்த நாவலிலே அழுத்த வேண்டியதை அழுத்தாமல் சொல்லிவிடல் என்னும் உத்தியிலே மிக எளிமையாக அழகாக கடக்கப்பட்டிருக்கின்றதாகவே கருதுகின்றேன்.

இந்த நவீனத்திலே பிரதான பாத்திரங்களான ரதனையும் நிவேதாவையும் தவிர்த்து ஏனைய கதை மாந்தர்கள் மிக இயல்பாக தோன்றி மறைந்து போகின்றார்கள். நாவலின் பிரதான திருப்புமுனையாக வெடிக்கும் அந்த முகமற்ற கருங்காலி தவிர்த்து எல்லோருமே தம்மளவில் நேர்த்தன்மையான மெச்சத்தக்க குணாம்சங்களுடன் உலாவிச் செல்கின்றார்கள்.

எப்போதும் போலவே விருந்தோம்பலிற்குப் பெயர்போன மட்டக்களப்பின் விருந்தோம்பல் தன்மை நாவலில் வரும் சண்முகம் குடும்பத்தாரின் மூலம் மீண்டும் ஒரு தரம் உறுதி செய்யப்படுகின்றது. புகையிரதத்திலே முதன் முதலாய் சந்தித்துக் கொள்ளும் இளைஞனுடன் தன்னோடு ; கூட்டி வந்த தனது மகளாய் வளர்க்கும் மருமகளை கல்லோயா சந்தியில் நடுநிசியில் குழாயடியில் ஒன்றாக முகம் கழுவ அனுமதிப்பதன் மூலம் கூடப் பயணிக்கும் பயணி மீது நம்பிக்கை வைத்து நம் உள்ளங்களில் உயர்ந்து நிற்கின்றார் நிவேதாவின் மாமா ராமநாதன்;.

நாவலின் பிற்கூறிலே கதையின் வட்டத்திற்குள் ஒரு முக்கியமான பாத்திரமாக மாறும் விமலா பிற்பகுதியில் ஓர் சுவாரசியத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவோ என்னவோ ஆரம்பத்தில் அதிக ஆலாபனைகளின்றி அறிமுகமாகின்றார்.

குசேலன் படத்திலே சுப்பர் ஸ்டாராகவே ரஜனிகாந் நடிப்பதுபோல ஈழத்து இலக்கிய வெளியில் நன்கு பரிச்சயமான பேராசிரியர் மௌனகுரு சேரும் பேராசிரியர் சிவத்தம்பி சேரும் சுகுமார் சேரும் கூட இந்தப் புதினத்திலே அவரவராகவே வந்து போகின்றார்கள். அதிலும் குறிப்பாக புகையிரதத்திலே முன்னுக்கிருக்கும் ஜோடியை தொந்தரவு செய்யக் கூடாதென ஜன்னலுக்கு வெளியே விழிகளை எறிந்தவராக அறிமுகமாகும் மௌனகுரு சேரின் அறிமுகம் அலாதியானது.

மௌனகுரு சேருடன் நன்கு பழகியவர்கள் அவரின் அந்தக் குணாம்சத்தின் வெளிப்பாட்டில் மருந்திற்கும் பொய்யில்லை என்று அறிவார்கள். வளாகத்து மாணவர்கள் கூட மிக இயல்பாக அவர்களுக்கேயுரிய வால்தனங்களுடனும் போராட்டக் குணங்களுடனும் வந்து போகின்றார்கள்.

கணவனை இழந்த பின்னும் வீட்டினில் தான் தனிமையில் உழல வேண்டுமே என யோசிக்காமல் நிவேதாவை ரதனுடன் நம்பிக்கையோடு திருமலையிலிருந்து மட்டக்களப்பிற்கு அனுப்ப முனையும் நிவேதாவின் மாமி பாத்திரம் கூட ஒரு தன்னலமற்ற பாத்திரமாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றது..

இக்காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் அக்காலத்தில் தற்போதைய நவீன தொடர்பாடல்கள் முறைகளான எஸ். எம். எஸ், வட்ஸ்சப், கையடக்க தொலைபேசி, முகநூல் என்பன நம் மத்தியில் பரவியிருக்கவில்லை.இந்த நிலைமையில் ஒரு பெண்ணிடம் தனது காதலை வெளிப்படுத்த பொதுவாக மூன்று தெரிவுகள்தான் இருந்தன. 1.கடிதம்.2 நண்பர்கள் தூது. 3. தைரியமாக நேரில் வெளிப்படுத்தல். இதில் இந்த மூன்றாவது தெரிவு காலில் நெல்லுக்குத்தும் அளவிற்கு நடுங்க வைக்கும் ஒன்று. இந்த நாவலிலே

" உங்களின் 'என் பிரிய ராஜகுமாரிக்கு ' கவிதைப் புத்தகத்தை தவறுதலாக வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டேன்"; என கூறும் நிவேதாவிடம் " பரவாயில்லை அது உரியவரிடம்தான் சென்றிருக்கின்றது " எனப் பதிலிறுப்பதன் மூலம் காதல் வெளிப்படுத்தப்பட்ட விதம் ரசிக்கத் தக்கதாக இருந்தது.

நாவலை வாசித்துக் கொண்டிருக்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் ஏனோ தெரியவில்லை தமிழகத்து பிரபலமான எழுத்தாளர் ஜெயகாந்தனின் மிகச் சிறந்த கதைகளில் ஒன்றான " அக்கினிப் பிரவேசம்" ஞாபகத்திற்கு வந்தாலும் , அது வெறும் புனைவு என்பதும் அல்லது எப்போதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடக்கக் கூடிய சம்பவங்களின் திரிபு என்பதும் ஆனால் இதுவோ சிதைந்து போன எமது வாழ்வின் இரத்தமும் சதையுமான சாட்சியங்கள் என்பதும் புத்தியில் உறைக்க அந்த ஞாபகங்களை அக்கணமே துரத்தியடித்து விட்டேன்.

விமர்சனப் பார்வையில் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக எதுவித குறிப்புகளும் எடுத்துக் கொள்ளாது ஒரே ஒரு தடவை மட்டும் நாவலை வாசித்து விட்டு இந்தப் பதிவுகளை முன் வைத்திருக்கின்றேன் . அப்படி குறிப்புகள் எதுவும் எடுக்காது இவ்வளவு விடயங்களை என்னால் நினைவிற்கு கொண்டு வர முடிந்திருப்பதே கொலினின் இந்த நாவல் வெற்றி பெற்றிருப்பதற்கான தர்க்க பூர்வ சாட்சியாகும்.

ஆனாலும் இந்த நாவல் சீன எழுத்தாளர் ஜியாங் ரோங் கினால் எழுதப்பட்டு உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட 670 பக்கங்கள் கொண்ட "ஓநாய் குலச் சின்னம்" போன்ற மகத்தான வெற்றியா எனக் கேட்டால் இல்லையென்பதே எனது பதிலாயிருக்கும். ஆனால் அத்தகைய மகத்தான நாவலை எமக்களிக்கக் கூடிய அனுபவமும் அறிவுப்புலமும் உழைப்பும் கொலினிடம் உண்டு;;. ஆழக் கடலில் தாழக்கிடக்கும் பவளப் பாறைகள் போல ஒழிந்திருக்கும் அவை ஒருநாள் வெளிவந்து எம்மை கிறங்கடிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு..

திருக்கோவில்
கவியுவன்...

Best way
to fulfil
your
Future Dreams

Marriage
Proposals

in the

Sunday Observer

# உள்ளூராட்சித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

## 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தின் 66(எ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளர், கேட்டுவிலகியமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு புதிய துணைத் தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2021.04.29 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டம் தொடர்பான அறிவித்தல் என்னால் 2223/4 ஆம் இலக்க 2021.04.15 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**நா.மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

---

மேல் மாகாணம் - மாகாண சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

பொறியியல் நிறுவனம்

அறிவித்தலுக்கான திருத்தம்

## வத்துபிட்டிவள ஆதார வைத்தியசாலையில் வடிவமைத்தல் மற்றும் கட்டுமானம்

2021.03.25 ஆம் திகதியன்று ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில நிபந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன,

1. அறிவித்தலின் 3 ஆம் பந்தியிலுள்ள அட்டவணையில் அடக்கப்பட்டுள்ளவைகள்.

| செயற்றிட்டத்தின் பெயர் | வத்துப்பிட்டிவள ஆதார வைத்தியசாலையிலுள்ள தற்போதுள்ள சாக்கடை நீர் சுத்திகரிக்கும் முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் |
|---|---|
| CIDA பதிவு | கட்டிட நிர்மாணம் மற்றும் சாக்கடை மற்றும் நீர் வழங்கல் என்பதற்கான மின்னியல் மற்றும் பொறியியல் சேவைகள் மற்றும் தரம் சி-4/ சி5 ஆகியன கட்டிட நிர்மாணம் மற்றும் சாக்கடை மற்றும் நீர் வழங்கல் ஆகியவற்றிற்கான ஈஎம்-1/ஈஎம் 2 ஆகியன மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கான ஈஎம்1/ ஈஎம்2 ஆகியனவைகள் கட்டிட நிர்மாணத்திற்காக தரம் சி-5 அல்லது மேற்பட்ட தரம் **அல்லது** சாக்கடை நீர் மற்றும் நீர் வழங்கலுக்காக சி-4 அல்லது மேற்பட்ட தரம் ஆகியவற்றினால் பதிலீடு செய்யப்படுகின்றது. |
| காலப்பதிவு | ''150 நாட்கள்'' என்பது விலைமனுதாரரினால் முன்மொழியப்படும் என்பதனால் பதிலீடு செய்யப்படுகின்றது. |

2. 5 ஆம் பந்தியின் 3 ஆம் மற்றும் 4 ஆம் வரிசைகளில் -
"2021.03.26 ஆம் திகதியிலிருந்து 2021.04.23 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்" ஆகியன
''2021.03.26 ஆம் திகதியிலிருந்து 2021.05.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை'' ***என பதிலீடு செய்யப்பட்டுள்ளது.***

3. 7 ஆம் பந்தியின் 3 ஆம் வரிசையில்
''2021.04.30 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக என்பது

2021.05.21 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு என பதிலீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய பெறுகை அறிவித்தலிலுள்ள ஏனைய அனைத்து விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை. இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

**பெறுகை அலகு,**
**பொறியியல் நிறுவனம் (மே.மா.)**
**5 ஆம் மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**12.04.2021.**

**தொலைபேசி: 0112-092504**

**தொலைநகல்: 0112-092505**

---

இலங்கை பொலிஸ்
விசேட அதிரடிப்படை

# விலை மனுக்கோரல் (IFB)

## பொருட்கள் மற்றும் வாகனங்களின் கொள்முதல்

1. விசேட அதிரடிப்படை, இலக்கம் 223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, தளபதியினால், ஆப்பிரிக்க கண்டத்தில் STF துருப்புக்களை ஐ.நா.மிஷன் வரிசைப்படுத்துவதற்காக இலங்கை காவல்துறைக்கு பொருட்கள் மற்றும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| Con. No | Procurement No | Description of Items | Qty. | Document Charges Rs. | Value of Bid Security Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | STF/LOG/C/216/2020 | Light Cargo Single Axle Trailer | 02 | 6,000.00 | 360,000.00 |
| 2. | STF/LOG/C/217/2020 | Fork Lift (rough terrain) Over 5 Tons | 01 | 5,000.00 | 292,500.00 |
| 3. | STF/LOG/C/218/2020 | Fuel Trailer (up to 2,000 Litres) (Flow meter mandatory) | 02 | 5,000.00 | 225,000.00 |
| 4. | STF/LOG/C/219/2020 | Truck Fuel Tanker (over 6600 and up to 10,000 litres) (flow meter mandatory) | 01 | 6,000.00 | 360,000.00 |
| 5. | STF/LOG/C/220/2020 | Water Trailer (up to 2,000 litres) | 02 | 5,000.00 | 225,000.00 |
| 6. | STF/LOG/C/221/2020 | 1. 4 Nos. Breaching Tool Set<br>2. 4 Nos. Rappelling Gear Set<br>i) Abseiling Rope (100m)<br>ii) Carabiner<br>iii) Figure<br>iv) Ladder<br>v) Seat Harness<br>vi) Pulley<br>vii) Adjustable Anchor Strap<br>viii) EXO Eashook<br>ix) Rig | As per List | 5,000.00 | 285,516.00 |
| 7. | STF/LOG/C/222/2020 | Ballistic Shield (Leval – III A) | 03 | 3,000.00 | 111,375.00 |
| 8. | STF/LOG/C/224/2020 | Bus (13-24 Pax or greater than 24 passengers.) | 01 | 4,000.00 | 180,000.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை, பணிப்பாளர் / தளவாடங்கள் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2021.04.17 ஆம் திகதி முதல் 2021.05.12 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **காலை 09.00** மணி முதல் **மாலை 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற சட்டப்பூர்வமான உரிமையை கொண்டுள்ளனர். மனுதாரர்கள் தமது வியாபாரத்தினை பதிவு செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், உங்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்களின் பெறுமதியானது ரூ.05 மில்லியனுக்கு அதிகமானதாக இருக்குமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் (Public Contract Act) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக அமையும். மனுதாரரின் பெயரை தேசிய கொள்வனவு ஆணைக்குழுவில் (National Procurement Commission) தவறாக ஆவணத்துடன் சேர்க்கக்கூடாதுதென்பதுடன் மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

05. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் **2021.04.17** ஆம் திகதியிலிருந்து **2021.05.12** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப. 09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.05.13** ஆம் திகதி பி.ப.**02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2021.05.13** ஆம் திகதி **இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை, தலைமையக கேட்போர் கூடத்தில் பி.ப.02.00 மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.** மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை பெற வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

08. பங்குகள் கையிலிருப்பிலிருக்கும் வழங்குனர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

09. அனைத்து மனுக்களும், மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

   i. இலங்கையில் செயல்படும் வணிக வங்கியிடமிருந்து மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிணையாளராக இருத்தல் வேண்டும்

   ii. மனு படிவ தொகுப்பின் 4 ஆம் பிரிவில் இல் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின் படி மனுப்படிவம் இருக்க வேண்டும்

   iii. **மனு பிணையானது தளபதி / விசேட அதிரடிப்படை என்ற பெயரில் இருக்க வேண்டும்.**

   iv. மனுக்கள் **2021.05.13** ஆம் திகதி முதல் **2021.09.08** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. தள வருகையைத் தொடர்ந்து, **2021.04.28 ஆம் திகதி** இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07ல் அமைந்துள்ள விசேட அதிரடிப்படை தலைமையக கேட்போர்கூடத்தில் முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

11. விசேட அதிரடிப்படையின் தலைமை கணக்காளருக்கு மனு படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தர ஆய்வுக் கட்டணங்களை செலுத்திய பின்னர் மனுதாரர் பெற்ற ரசீது மனு படிவத் தொகுப்பில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

11. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

| விலாசம் | தொலைப்பேசி இலக்கம் | |
|---|---|---|
| பணிப்பாளர் / தளவாடங்கள் | பிரதான | - 011-2505933 |
| விசேட அதிரடிப்படை | பொது | - 011 2500471 / 2589741 - 251 |
| இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, | பெக்ஸ் | - 011-2556506 |
| கொழும்பு 07 | | |

**தளபதி,**
**விசேட அதிரடிப்படை**

---

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

# பெறுகை அறிவித்தல்

## பாத்ததும்பர பிரதேச சபை

பாத்ததும்பர பிரதேச சபையின் பெறுகைக்குழுத் தலைவராகிய என்னால், சபையின் பொது நிதிய மானியம் ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் அட்டவணையில குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக 2021ஆம் ஆண்டில் சீடா நிறுவனத்தில் C8 மற்றும் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்காக செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ், 2021.05.11 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணைத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | ஆகக் குறைந்த CIDA தரம் | ஒப்பந்தக் காலம் | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | CPC/ PDPS/04/ 02/2021 | தற்போதைய அலுவலகக் கட்டிடத்துடன் புதிய பகுதி ஒன்றைச் சேர்த்தல் | ரூபா 30,000/- | ரூபா 3,000/- | C8 மற்றும் C7 | 03 மாதங்கள் | திறக்கப்படும் தினத்திலிருந்து 63 நாட்கள் |

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை இச்சபையின் அலுவலகத்தில் செலுத்தி, 2021.04.17 முதல் 2021.05.10 அன்று பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் உரித்தான விலைமனுப்படிவங்களைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். பிணைத் தொகையை காசாகச் செலுத்தாமல், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப் பெற்றுள்ள அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து, ஆகக்குறைந்தது 63 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வண்ணம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவு ஒன்றின் மூலமும் செலுத்தப்படலாம்.

03. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனியான உறைகளில் சேர்த்து, மீண்டும் அவற்றை ஒரே உறையில் சேர்த்து, முத்திரையிட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு, 2021.05.11 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'தலைவர், பாத்ததும்பர பிரதேச சபை, பிட்டியேகெதர, வத்தேகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கப்படலாம்.

04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனு தொடர்பான இறுதித்தீர்மானம், பாத்ததும்பர பிரதேச சபையின் பொதுச் சபைக்கு உரித்தாகும்.

மேலதிக விபரங்களைப் பின்வரும் தொலைபேசிகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம். 081-2476276 மற்றும் 081-2476036

**டீ.எம்.ஏ.கே. பண்டார**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பாத்ததும்பர பிரதேச சபை**

**2021.04.17ஆம் திகதி**
**பாத்ததும்பர பிரதேச சபை அலுவலகத்தில்.**

---

BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free
on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!




AVAILABLE AT
Google play
App Store
Windows Store

LAKE HOUSE

# நகர்வலம்



# கல்வி வளர்ச்சியில் தனியார் துறையினர் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றனர்



அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



**புத்தளம் தினகரன் நிருபர்**

பம்பலப்பிட்டி அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கலந்துகொண்டார்.

வெறும் புத்தக கல்வியை மட்டும் மையமாக கொள்ளாமல், மாணவர்களுக்கிடையே சுய வேலைத்திட்டங்கள், (Individual Project) பயிற்சி பட்டறைகள் (practical workshops), வெளிநாட்டு மாணவர்களின் தொடர்பாடல்,(Foreign Students exchange), பல உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திடல், மாணவர்களுக்கு Individual Training போன்றவற்றை வழங்கி தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மாணவர்களை தயார்படுத்தி அனுப்புகின்றமை விசேட அம்சமாகும்.

எதிர்வரும் ஆண்டுகளில் உலகிலேயே அதிகமாக தேவைப்படுகின்ற தொழிற்துறையான Robertic Engineering, Green Technology, Solor Technology, Hybrid Technology, Cloud Computing, Automated System, Mobile Technology, Wireless Technology, போன்ற துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளையும் வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளது என அதன் நிறைவேற்று பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தனது வரவேற்புறையில் குறிப்பிட்டார்.

பட்டமளிப்பு விழாவில் சுமார் 140 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர். இதில் உளவியலும் உளவளத் துணையும், ஆசிரியர் பயிற்சி நெறி, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல், இதுபோன்ற பல துறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தனது உரையில்,

"எமது நாட்டிலுள்ள பல வளங்களை இன்னும் சரியாக நிர்வகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டுக்கு புதிய துறைகளைக் கற்ற துறை சார்ந்தவர்கள் அதிகளவில் தேவைப்படுகின்றனர், இதனை அரசாங்கத்தினால் மட்டும் செய்துவிட முடியாது.

இன்று இலங்கையின் பொருளாதார கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்கினை தனியார் துறையினரே வழங்கி வருகின்றனர் அந்த வகையில் அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் சேவை உண்மையில் பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.



தேசிய சமாதான சபையின் ஆதரவில் பேராதனை பல்கலைக்கழக வளவில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இனங்களுக்கிடையிலான வெறுப்புப் பேச்சுக்களை தவிர்ந்து கொள்வது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. படம்: அக்குறணை குறூப் நிருபர்

# மருமகனின் கத்திக்குத்துக்கு இலக்கான மாமியார்– மச்சான்

## வவுனியாவில் சம்பவம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் மருமகன் ஒருவர் தனது மாமியார் மற்றும் மச்சானை கத்தியால் தாக்கியுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று (16) பிற்பகல் வவுனியா வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக சந்தேகநபர் மனைவியின் சகோதரனான மச்சானுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார் . இந்நிலையில் தன்வசம் மறைத்து வைத்திருந்த கத்தி ஒன்றினால் இடுப்பு முதுகில் குத்தியுள்ளார் . இதனை அவதானித்த மாமியார் ஓடிச் சென்று தடுக்க முற்பட்டபோது அவருக்கும் கையில் கத்தியால் குத்தியுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த இருவரும் அருகிலிருந்தவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் . சந்தேகநபரை அப்பகுதியிலிருந்தவர்கள் தடுத்து வைத்திருந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் . காயமடைந்த இருவரும் தேக்கவத்தை பகுதியை சேர்ந்த அரியதாஸ் திரேஸ் (வயது 35), அசோகன் வசந்தி (வயது 52) என தெரியவந்துள்ளது. குடும்ப முரண்பாடுகள் காரணமாகவே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# டாக்டர் மஃரூபின் இழப்பு; ஈடு செய்ய முடியாதது

## யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினர் வசீர் முக்தார்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி தலைவராகவும் அக்குறணை மக்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும் சேவையாற்றிய டாக்டர் மஃரூபின் மரணம் ஈடு செய்ய முடியாத பெரும் பேரிழப்பாகும் என்று யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான வசீர் முக்தார் தெரிவித்தார்.

யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான வசீர் முக்தார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடரும் அவ் அனுதாபச் செய்தியில்,...

டாக்டர் மஃரூப் நீண்ட காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்டு உழைத்த ஒருவர். அந்த வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அக்கால கட்டத்தில் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகவுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்த கட்சியின் சிறந்த செயற்பாட்டாளர்.

இவை தவிர அக்குறணை கல்விக் குழுவின் தலைவராக இருந்து அக்குறணையின் கல்வி மறுமலர்ச்சிக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் கணிசமானளவு பங்களிப்புச் செய்த ஒருவர். அவரது இழப்பு அக்குறணைக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் பெரும் பேரிழப்பாகும்.



20 இலட்சம் மரக்கன்றுகள் நடும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சுற்றாடலை பாதுகாக்கும் திட்டத்திற்கமைய நேற்று ( 16) சுப வேளையில் நாடுமுழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டன. கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சா தலைமையில் ராகம தியகல சிறுவர் பூங்காவில் (பொயிஸ் டவுன்) மரக்கன்றுகளை நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு போக்குவரத்து வசதியை செய்து கொடுக்கும் நோக்கில் இலவச பயண சீட்டை மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் அண்மையில் வழங்கி வைத்தார்.

அநுராதபுரம் ரியன்ஷி அலஹிய வன்ன வித்தியாலய அதிபரினால் வடமத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையிடம் விடுக்கப்பட்ட வேண்டுக்கோளுக்கு அமைய ஆளுநரின் அனுமதியுடன் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வைபவரீதியாக சில மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து பயணச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அநுராதபுரம் ரியன்ஷி அலஹியவன்ன வித்தியாலயத்தின் அதிபர் கருத்து தெரிவிக்கையில், விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை இடை நடுவில் கைவிட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அதனைக் கருத்திற் கொண்டே இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அநுராதபுரம் மற்றும் பொலன்நறுவை மாவட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் போது ஆளுநரின் செயலாளர் ஏ.கே.என்.விக்கிரமசிங்க மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நஞ்சு கலந்து மிருகங்களை கொல்லும் இறைச்சி வியாபாரிகள்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

தாகத்திற்கு நீரருந்த வரும் மிருகங்கள் பிராணிகளை நஞ்சு கலந்த நீரை அருந்த செய்து அவற்றை கொன்று இறைச்சி வியாபாரம் செய்யும் கும்பல் தொடர்பான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. உடவளவை சரணாலயம் உட்பட கல்தோட்டை தியவின்ன வெலிபொத்தயாய ஹம்பேகமுவ மற்றும் சுற்றுப் பகுதிகளில் இந்நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் கோவிலின் விசேட சித்திரைப் புத்தாண்டு பூசை கோவிலின் அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி கோவிந்தசாமி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் விசேட நவகலச திரவிய அபிஷேகமும் அலங்கார தீபாராதனைகளுடன் பூஜைகள் இடம்பெற்றது. படம்: இக்பால் அலி

# கோடரியை எடுக்க சென்றவர் மின்னல் தாக்குதலில் படுகாயம்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வேணாவில் 01 ஆம் வட்டரா கிராமத்தில் கோடரியை எடுக்க சென்ற குடும்பஸ்தர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை வேளையில் இடியுடன் மழை பெய்து கொண்டிருந்த போது குடை பிடித்துக் கொண்டு முற்றத்தில் இருந்த கோடரியை எடுக்க வந்த போதே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். வேணாவில் கிராமத்தினை சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ஜெயக்குமார் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார். மின்னல் முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில் தாக்கியுள்ளது இதன் போது குடும்பஸ்தரும் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். குடையின் மீதும் மின்னல் தாக்கியுள்ளது. வயிற்றிலும்,காலிலும் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார். இந்நிலையில் அயலவர்களின் உதவியுடன் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை எடுத்து செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வெல்லாவெளியில் சிறுபோக வேளாண்மை விதைப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது சிறுபோக வேளாண்மைச் செய்கை நடடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் படுவாங்கரைப் பெருநிலப்பரபின் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்கு உட்பட்ட வயற் கண்டத்தில் தற்போது சிறுபோக வேளாண்மைச் செய்கையின் விதைப்பு வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

சிறுபோக வேளாண்மைச் செய்கையானது, குளத்து நீரை நம்பி செய்யப்படுவதாகும்.

கடந்த மழை வீழ்ச்சிக் காலத்தில் நவகிரிக் குளத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர் இவ்வாறு செய்கை பண்ணப்படும் வேளாண்மைச் செய்கைக்குப் பயன்படுத்தப் படவுள்ளது.

இந்நிலையில் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட பகுதியில் இம்முறை 10250 ஏக்கர் சிறுபோக வேளாண்மைச் செய்கை பண்ணப்படுவதாகவும், அவற்றுள் தற்போது விதைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதியிலிருந்து உரமானியம் வழங்க திட்டமிடப்பட்டுள்தாக வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் எம்.ஐ. எம்.பாயிஸ் தெரிவித்தார்.



கெக்கிராவ வெருன்குளம் வித்தியாலயத்தின் பிரதான மண்டம் பல வருடங்களுக்கு பின்னர் சீர்திருத்தம் செய்யப்பட்டு இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவினால் மாணவர்களின் பாவனைக்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

# BIG BAD WOLF புத்தக திருவிழா மீண்டும் ONLINE இல்!




உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனைத் திருவிழாவுக்குத் தயாராகுங்கள். BIG BAD WOLF புத்தக விற்பனை தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இலங்கைக்கு மற்றொருமுறை இணையவழியினூடாக வருகின்றது. புத்தக விற்பனையானது நம்மைச் சுற்றிவரும் அதேவேளையில் அதன் Wolf pack மற்றும் புத்தக ஆர்வலர்களிடையே மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றது.

இணையவழியிலான புத்தக விற்பனையானது எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை இது மிகப்பெரியதும் மற்றும் சிறந்த தான அனுபவத்தையும் பெற்றுத் தருவதாக இருக்கும். அதிசயமாக விலைக் கழிவுகளுடன் இந்தப் புத்தக விற்பனை உங்களுக்கு புதிய அனுபவத்தைத் தரக் காத்திருக்கின்றது.

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இணையவழியிலான புத்தக விற்பனை வடிவத்துடன் முதன்மையாக wolf pack தங்களது பிரதிகளை வழங்குகின்றது. இதனால் தங்கள் சொந்த வீடுகளின் வதியாகவும் பாதுகாப்புடனும் புத்தக விற்பனையை அனுபவிக்க முடியும்.

அத்துடன் சர்வதேச பயணங்களும் கட்டுப்பாடுகளுடன் இருப்பதால் கடந்த ஆண்டின் இணைவழி விற்பனை சுட்டிக்காட்டியுள்ள படி, WOLF இணையவழியினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்த ஆண்டின் இணைய வழி விற்பனை அனைத்து அம்சங்களிலும் மேம்பாடுகளைக் காணும், கடந்த ஆண்டின் முதல் இணைய வழி விற்பனையை முன்னெடுத்ததன் மூலம் இது செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளைக் கண்டறிய உதவியுள்ளது.


இந்த ஆண்டு, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட Big Bad Wolf இணையவழி புத்தக விற்பனை புனைகதை, அதிகம் விற்பனையான புத்தகங்கள் (bestsellers), இலக்கியம், புனைகதை அல்லாத, வணிகம், சமையல் புத்தகங்கள், கலை மற்றும் வடிவமைப்பு, அத்துடன் 50,000 இற்கும் மேற்பட்ட புதிய ஆங்கில புத்தக தலைப்புகளின் தேர்வைக் காண்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. coffee table புத்தகங்கள், பரிந்துரைக்கப்பட்ட சில்லறை விலையிலிருந்து 90% வரை பெரும் சேமிப்புடன் வழங்கப்படுகின்றன.

24 மணிநேர இணைய வழி கொள்முதல் அனுபவத்தை இன்னும் மென்மையான வீட்டு விநியோக சேவையுடன் வழங்க இணைய வழி விற்பனை மேலும் உருவாக்கப்படுகின்றது. அத்தோடு பணம் செலுத்தவதற்கான பாதுகாப்பான முறையை வழங்குவதற்காக விற்பனைக்கான அதிகாரப்பூர்வ வங்கி பங்காளராக சம்பத் வங்கியுடன் Wolf கூட்டு சேர்ந்துள்ளது.

Wolf ரசிகர்கள் Wolf இன் அதிகாரப்பூர்வ வானொலி பங்களாளர்களால் வழங்கப்படும் அற்புதமான விளையாட்டு மற்றும் போட்டிகளின் வரிசையையும் எதிர்பார்க்கலாம். Lite 87 and TNL Radio. விரைவில் வரவிருக்கும் இணைய விற்பனையில் எதிர்பார்க்கப்படுவது குறித்த கூடுதல் புதுமைகளுக்காக காத்திருக்க இலங்கை முழுவதும் உள்ள அனைத்து புத்தக விரும்புகளையும் மகிழ்ச்சியுடன் அழைக்கின்றோம்.

DFCC வங்கி அட்டைதாரர்களுக்கு

# புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் 60% சேமிப்பு வாய்ப்பு




விடுமுறைக் காலம் வேகமாக நெருங்கி வரும் நிலையில், நாடளவில் 300 கூட்டாளர் விற்பனை மையங்களில் தனது கடனட்டை வாடிக்கையாளர்களுக்கு 60% வரையான சேமிப்புக்களை வழங்குவதாக DFCC வங்கி உறுதியளித்துள்ளது. பொருட் கொள்வனவு முதல் இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் மின்வர்த்தக ஒன்லைன் தளங்கள் வரை, அனைவருக்கும் ஏற்ற வங்கியானது இந்த பண்டிகைக் காலத்தில் தனது விசுவாசமான வாடிக்கையாளர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுடன் பொருட் கொள்வனவுகளை மேற்கொண்டு குதூகலிப்பதற்கு இடமளிக்கிறது.

அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பாரியளவிலான சேமிப்புக்களுக்குப் புறம்பாக, ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு பரிவர்த்தனையின் போதும் அட்டைதாரருக்கு 1% பண மீளளிப்பானது அவர்களுடைய DFCC வங்கிக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படும். இந்த தனித்துவமான முன்மொழிவு, வாடிக்கையாளர்கள் புத்தாண்டைக் கொண்டாடும் வேளையில் தங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் செலவுகளை மேற்கொள்ளும் போதே சேமிக்கவும் இடமளிக்கிறது. இது தவிர, DFCC வங்கியின் கடனட்டைகள், அட்டை மூலமான கடன் மற்றும் நிலுவையை அட்டைக்கு மாற்றிக்கொள்ளும் திட்டங்களுக்கு மிகக் குறைந்த செயலாக்கக் கட்டணத்தையும் கொண்டுள்ளன.

DFCC வங்கி கைகோர்த்துள்ள 300 வணிக மையங்களில், நுகர்வோரின் அபிமானம் பெற்ற பல மையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கீல்ஸ், கார்கில்ஸ், ஆர்பிக்கோ, அபான்ஸ், சிங்கர், Galleria, Cotton Collection, Levi's, Adidas, Cool Planet, Sriyani Dress Point, DSI, Bata, CIB, House of Fashions மற்றும் ODEL ஆகியவையும் இதில் அடங்கும்.

'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு'

# முன்னோடி வேலைத்திட்டத்துடன் இணையும் எயார்டெல் நிறுவனம்



எயார்டெல் லங்கா நிறுவனம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவுடன் (TRCSL) இணைந்து நாடு முழுவதிலும் தமது வலைத்தளத்தில் காணப்படும் இடையூறுகளை தவிர்த்துக் கொள்வதற்காக 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' வேலைத்திட்டத்திற்காக தமது ஒத்துழைப்புக்களை வழங்குகிறது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் இரத்தினபுரி மாவட்டத்தில் புதிய 37 கவரேஜ் வலையங்களை நிறுவும் முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களுடன் இந்த வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்தங்கிய கிராமிய பிரதேசங்களை டிஜிட்டல் மயமாக்கலால் மேம்படுத்துவதன் மூலம் அனைத்து நபர்களுக்கும் அவர்களது அன்றாட வேலைகளுடன் தொடர்புபடுத்தும் வகையில் மிகவும் சிறந்த விதத்தில் அதனை மேற்கொள்வதற்கும் மற்றும் எவ்வித இடையூறுகளும் இன்றி தொடர்ச்சியாக தொலைத்தூர கற்றல் மற்றும் நெகிழ்வான சேவை தேவைகளுக்கும் இது உதவியாக அமையும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இணைந்து கருத்து தெரிவித்த இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனாநாயக்க, 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' அங்குரார்ப்பண வேலைத்திடத்தின் கீழ் இலங்கை எதிர்காலத்தில் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் அதற்குரிய சேவைகளுக்காக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வலய கேந்திரமாக வேகமாக முன்னேற்றுவதற்கு தேவையான அடித்தளத்தை அமைக்கும் வகையில் நாம் இன்று தைரியமான முடிவொன்றை எடுத்துள்ளோம். இதனூடாக பின்தங்கிய கிராமப்புற பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு இடையிலுள்ள டிஜிட்டல் இடைவெளியையும் குறைக்க முடிந்துள்ளது. 2021 நிறைவடையும் போது இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக 10 மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளதுடன் 2022 இறுதிக்குள் நாடு முழுவதிலும் 100%க்கு வரை கவரேஜைப் பெற்றுக் கொடுப்பதற்கு எம்மால் முடியுமென நாம் நம்புகின்றோம்.' என தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் எவ்வித இடையூறுகளும் இன்றி தொடர்ச்சியாக தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் தகவல் தொடர்புகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைமையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தேசிய முயற்சியின் ஒரு அங்கமாக இந்த 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' வேலைத்திட்டத்தின் மூலம் நாடு முழுவதிலும் டிஜிட்டல் மயமாக்கல் ஊடான பயணத்திற்கு தேவையான தொலைத்தொடர்பு அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

# லீசிங் வசதிகளுக்கு சிறப்பு கட்டணங்களை வழங்கும் கொம்பேங்கின் 'லீசிங் காலம்'



இலங்கை கொமர்ஷல் வங்கி அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'லீசிங் கால' ஊக்குவிப்பின் மீள் வருகை தொடர்பில் அறிவித்துள்ளதுடன், வாகனங்களை கொள்வனவு செய்பவர்கள் குறைந்த வட்டி விகிதங்களையும், புதிய ஒட்டோமொபைல் கொள்ளனவு மற்றும் உபயோகித்த வாகனங்களை பரிமாற்றும் போது கட்டுப்படியாகும் லீசிங் வாடகைகளையும் அனுபவித்து மகிழ முடியும்.

இந்த தெரிந்தெடுக்கப்பட்ட புகழ்பெற்ற வாகன விற்பனையாளர்களின் சிறப்பு சலுகைகளுடன், கொமர்ஷல் வங்கியின் லீசிங் காலம் 2021 ஜூன் 30 வரை இடம்பெறும். இந்த குறைக்கப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்கள் இந்த மூன்று மாத ஊக்குவிப்பு காலப்பகுதியில் வங்கியின் சூப்பர் லீசிங் மற்றும் ஹைப்ரிட் லீசிங் வசதிகள் உள்ளிட்ட தனிப்பட்ட வருமான முறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட லீசிங் தெரிவுகளிலிருந்து பயனடையலாம் என்று வங்கி தெரிவித்துள்ளது.

வங்கியின் சூப்பர் லீசிங் வசதி வாடிக்கையாளர்களுக்கு உயர் தர வாகனங்களை குறைந்த வாடகைக்கு வாங்க உதவுவதுடன், அதே நேரத்தில் எளிதாக திருப்பிச் செலுத்தும் வசதிகளையும் குறைந்த முன்செலுத்தல் கட்டண வசதியையும் வழங்குகிறது. இந்த கலப்பு லீசிங் வசதியும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த வாடகைக்கு உயர் தர வாகனங்களை வாங்குவதற்கான வழிவகைகளையும் வழங்குகிறது. மேலும், வாடிக்கையாளருக்கு முதல் வருடத்தில் நியம வாடகையின் பாதியையும், மீதமுள்ள குத்தகைக் காலத்திற்கான நியம வாடகையையும் மற்றும் நிலுவைத் தொகையை வாடகையாகவும் செலுத்த வாய்ப்பளிக்கின்றது. இந்த வசதி எளிதான திருப்பிச் செலுத்தும் திட்டத்தையும் வழங்குவதுடன், மீதமுள்ள தொகையை திருப்பிச் செலுத்த வாடிக்கையாளர்களுக்கு லீசிங் காலத்தை மேலதிகமாக இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்க உதவுகிறது.

இது கொமர்ஷல் வங்கியின் ஐந்தாவது லீசிங் கால ஊக்குவிப்பாகும். இது ஆர்வமுள்ள வாகன உரிமையாளர்கள், குறைந்த வட்டி விகிதங்களுடன் கூடிய மலிவு லீசிங் வாடகைகளுடன் தங்கள் பயணத்தை மேம்படுத்த விரும்புவோருக்காகவும் இந்த ஊக்குவிப்பு அவ்வப்போது நடத்தப்படுவதுடன், லீசிங் சந்தையில் வங்கியின் நிலையை மேம்படுத்துகிறது. அதன் லீசிங் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த லீசிங் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாக, கொமர்ஷல் வங்கி லீசிங் கால ஊக்குவிப்பின் போது பல புகழ்பெற்ற விற்பனையாளர்களுடன் கைகோர்த்துள்ளது. அசோசியேட்டட் மோட்டார்வேஸ் (பிரைவேட்) லிமிடெட் (ஏ.எம்.டபிள்யூ) உடனான பங்குடமையானது, தற்போதுள்ள வாகனங்களை பரிமாற்றம் செய்வதற்கு கவர்ச்சிகரமான லீசிங் தீர்வுகளை வழங்குவதுடன், நிவ் ஹோலண்ட் டிரக்டர்கள் மற்றும் பிற விவசாய வாகனங்களை வாங்குவதற்கான சிறப்பு வாடகை விகிதங்கள் மற்றும் ஐடியல் மோட்டார்ஸ் மற்றும் யுனிமோ எண்டர்பிரைசஸ் உடனான இணைந்த ஊக்குவிப்பின் மூலம் உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்கள் குறிப்பாக suvக்கள் போன்றவற்றுக்கான லீசிங் வாடகைக்கான சலுகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அப்பட்டியலில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 890 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியான்மாரின் நேய்பியுடோவில் நுண்நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.

# செலான் டிக்கிரியினால் சமூக ஊடகத்தில் "Cooking Kiddos"




இலங்கையின் முதற்தர சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் வங்கியின் செலான் டிக்கிரி ஊடாக, ஒன்லைனில் "Cooking Kiddos" நிகழ்ச்சி திட்டத்தை முன்னெடுத்திருந்தது. சிறுவர்களின் சமையல் திறனை உலகுக்கு வெளிக்காட்டும் வகையில் இந்த திட்டம் அமைந்திருந்தது. அன்புடன் அரவணைக்கும் வங்கி இந்தத் திட்டத்தை முன்னெடுத்து , சிறுவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளிலிருந்து சற்று விடுதலை பெற்று, புதிய சமையல் தயாரிப்புகளை முயற்சி செய்வதற்கு வாய்ப்பளித்திருந்தது.

தமது இளம் வாடிக்கையாளர்களை ஈடுபாட்டுடன் பேணுவதற்கு புத்தாக்கமான வழிமுறைகளில் எப்போதும் கவனம் செலுத்தும் செலான் வங்கி, ஒன்லைனில் தமது கற்றல் நடவடிக்கைகளை பெருமளவில் தொடரும் பிள்ளைகளுக்காக சமையல் நிகழ்ச்சியை முன்னெடுப்பது தொடர்பான சிந்தனையை வெளிப்படுத்தியிருந்தது. புதிய விடயங்களை முயற்சி செய்யும் அவர்களின் ஆர்வத்தை மேலும் தூண்டும் வகையில், செலான் டிக்கிரியினால், சிறுவர்களால் தயாரிக்கக்கூடிய எளிமையான உணவுகளை சமூக வலைத்தளங்களில் பரந்தளவானோருக்கு காண்பிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்த செலான் டிக்கிரி வாடிக்கையாளர்களில் முதல் பத்து ஸ்தானங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்காக வங்கியிடமிருந்து பெறுமதியான அன்பளிப்புகள் பரிசாக வழங்கப்பட்டிருந்தன.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "பிள்ளைகளை சுறுசுறுப்பாகவும், ஏதேனும் விடயத்தில் ஈடுபாட்டுடனும் பேணுவது என்பது பெற்றோருக்கு மிகவும் கடினமான காரியமாக அமைந்துள்ளது. குறிப்பாக தற்போதைய தொற்றுப் பரவலுடனான சூழலில், சமூகத் தனிமைப்படுத்தல் அவசியமாகியுள்ள நிலையில், குழுநிலைச் செயற்பாடுகளிலிருந்து அவர்களை வேறுபடுத்தி பேணச் செய்துள்ளது. முடக்க நிலை காணப்பட்ட காலப்பகுதியில் டிஜிட்டல் முறையில் அதிகளவு ஈடுபாட்டை பேணும் சிறுவர் சேமிப்புக் கணக்காக செலான் டிக்கிரி காணப்பட்டதுடன், இந்த ஆண்டிலும் சிறுவர்களுக்காக புத்தாக்கமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதில் முதலாவது அங்கமாக, "Cooking Kiddos" அமைந்திருந்தது. இந்தத் திட்டத்துக்கு பெரும் வரவேற்புக் கிடைத்திருந்ததுடன், எமது சிறு வாடிக்கையாளர்கள் மீது நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்துவோம்." என்றார்.

கடந்த ஆண்டில் நீடித்த முடக்கநிலை அமுலில் இருந்த போது, சிறுவர்கள் மத்தியில் அதிகளவு ஈடுபாட்டை பேணுவதில் செலான் டிக்கிரி முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தது. இதில் Tikiri lock down diary, டிக்கிரி டிஜிட்டல் அவுருது, வெசாக் பத்தும், டிக்கிரி சாம்ப், ஸ்டோரி டெலிங் போன்ற பல செயற்பாடுகள் அடங்கியிருந்தன. இந்த செயற்பாடுகள் அவர்களின் கவனத்தை ஈர்த்திருந்ததுடன், தமது வீடுகளில் அடைபட்டுக்காணப்பட்ட நிலையில் அவர்களை தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் பேணியிருந்தது. டிஜிட்டல் செயற்பாடுகளில் பெற்றோரையும் ஈடுபடுத்தும் வகையில் கலாநிதி. குமுது டி சில்வா உடன் கைகோர்த்து 'டிக்கிரி ஸ்டோரி டெலர்' எனும் வீடியோத் தொடரை சமூக வலைத்தளத்தில் செலான் வங்கி முன்னெடுத்திருந்தது. இதன் போது தனிமைப்படுத்தப்பட்டிருக்கையில் சிறுவர்களை எவ்வாறு பராமரிப்பது மற்றும் பிள்ளைகளுடன் வீடுகளில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் போன்றன பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

# பருவகால உற்சாகத்தை பரப்ப OPPO வின் புத்தாண்டு பாடல்



இலங்கையின் மிகவும் விரும்பப்படும் கையக்கத் தொலைபேசிகள் மற்றும் ஸ்மார்ட் அணிகலன்கள் வழங்குநரான OPPO, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு புதுவருட பாடலொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. OPPO தரக்குறியீட்டின் தூதுவரும் The Voice நிகழ்ச்சியின் இசை பயிற்சியாளருமான உமாரியா சின்ஹவம்சவினால் பாடப்பட்ட இப்பாடலில், நடிகரும் பாடகருமான கயான் குணவர்தன, உள்ளிட்ட பிரபலங்களும் நடன இயக்குனர் ரமோத்மாலக மற்றும் அவரது நடன குழுவின் அழகிய நடனமும் இடம்பெற்றுள்ளன.

பாடலுக்கான காட்சி ஒரு அழகிய கிராமப்புறத்தை மையமாகக் கொண்டு படமாக்கப்பட்டுள்ளதுடன், கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் வழங்கிய புத்தாண்டு மரபுகளுடன் இப்பாடல் அமைந்துள்ளது. இவ்வீடியோவில் இப்பருவ காலத்தில் விற்பனையாகி வரும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இரசிகர்களின் விருப்பத் தேர்வான OPPO F19 Pro வும் இடம்பெற்றுள்ளது, விற்பனையின் முதல் நாளில், F19 Pro அதன் முன்னோடியான F17 Pro வுடன் ஒப்பிடும் போது விற்பனையில் 200% அதிகரிப்பை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

OPPO ஸ்ரீலங்காவின் பிரதான நிறைவேற்று அதிகாரி பொப் லி இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில் "இத்திட்டமானது, இலங்கை கலாச்சாரத்தில் ஆழமாக மூழ்குவதற்கு எங்களுக்கு உதவியுள்ளது. இப்பருவ காலத்திற்கு உயிரூட்டும் வகையில், அதன் அடிப்படை விடயமான உருவாதல் மற்றும் வளர்தல் என்பவற்றை முன்னிறுத்தி, OPPO ஒரே நேரத்தில் இரண்டு விற்பனைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஏப்ரல் 0213 வரை ERABADU WASI மற்றும் ஏப்ரல் 05 18 வரை OPPO SERVICE WASI ஆகியனவே அரை இரண்டுமாகும்." என்றார்.

இப்பாடல் தொடர்பான தனது அனுபவத்தை தெரிவித்த உமாரியா சின்ஹவம்ச, "எமது இளம் மற்றும் ஆற்றல்மிக்க கலைஞர்களுடன் இணைந்து பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தமையானது ஒரு சிறந்த அனுபவமாகும். உள்ளூர் கலாச்சாரத்தைத் தழுவியதாக இதனை உள்வாங்கியமை தொடர்பில் OPPO வினை நான் பாராட்டுகிறேன். அதுவே OPPO வை மக்கள் விரும்புவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இலங்கையர்களுக்கு OPPO உடன் மிக ஆழமான தொடர்பு உள்ளது என்பதுடன் அதன் மறுதலையும் அவ்வாறு அமைந்துள்ளது." என்றார்

இதேவேளை, இதில் பங்குபற்றிய நடிகரும் பாடகருமான கயான் குணவர்தன, OPPO உடனான தனது முதலாவது பாரிய பிரச்சாரமான இது ஒரு மறக்கமுடியாத அனுபவம் எனத் தெரிவித்தார். "இந்த திட்டத்தின் ஒரு பகுதியானமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். OPPO உடன் பணிபுரிவது மிகவும் உற்சாகமான அனுபவமாக இருந்தது. காரணம், எமது ஆக்கப்பூர்வமான விடயங்களை மேற்கொள்வதற்கு எமக்கு முழுமையான சுதந்திரம் கிடைத்தது. இது குறிப்பாக OPPO மற்றும் F19 Pro வினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. " என்றார்.



# ஹாங்காங்கின் கழுத்தை நெரிக்கிறதா சீனா?

ஹாங்காங்கின் செயலாட்சித் தலைவரையும் (Chief Executive) அதன் சட்டமன்ற உறுப்பினர்களையும் தேர்வு செய்வதில் ஏற்கெனவே ஜனநாயகத்துக்கு விரோதமான நிலை நிலவுகிறது. இந்நிலையில், சீன அரசு சமீபத்தில் இந்த நடைமுறைகளில் செய்திருக்கும் தீவிரமான மாற்றங்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? ஏனென்றால், எதிர்ப்பின் முறைகள், ஒடுக்குமுறை நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வாளர்கள் என்ற முறையில் இந்த மாற்றங்கள் அழிவை நோக்கி இட்டுச்செல்லக் கூடியவை என்று நாங்கள் கருதுகிறோம்.

மக்களின் குரலுக்குச் செவிமடுத்தல்

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் மாற்றங்களின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கான வழிமுறைகளில் ஒன்று சீனத் தன்மைகொண்ட ஜனநாயகம் எனும் நீண்ட மரபைக் கருத்தில் கொள்வதாகும். இந்தக் கருத்தாக்கம் இரண்டு சீன சித்திர எழுத்துக்களின் சேர்க்கையால் வெளிப்படுத்தப்படுவது. இது 'ஜனநாயகம்' என்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டாலும் வெறும் தேர்தல் பிரச்சாரங்கள், வாக்களிப்பு, நிறுவனமயப்பட்ட அரசியலின் பிற அம்சங்களையும் தாண்டிய பொருள் கொண்டது. சீன மொழியின் ஒரு வகையான கேன்டோனிஸில் இந்தச் சொல்லின் எழுத்துக்கள் 'மன்ஸியூ' என்று உச்சரிக்கப்படுகின்றன. மக்களும் ஆட்சியும் என்று இது பொருள்படும். 'ஸியூ'வில் (ஆட்சியில்) இருப்பவர்கள் 'மன்'னின் (மக்களின்) குரலுக்குச் செவிமடுத்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்துகொடுக்கும் ஒரு அமைப்பு என்ற பொருளையும் 'மன்ஸியூ' உணர்த்தும். இதுபோன்று மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் அரசாங்கத்துக்கு முக்கியமானவை எவை என்றால், பொறுப்பேற்புத் தன்மைக்கான அமைப்புகள்தான். இவை, தங்கள் எதிர்ப்பைத் தேர்தல்களின் மூலம் மட்டும் வெளிப்படுத்தும் வழிமுறைகளைத் தாண்டியும் சில அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றன. போராட்ட கோஷங்களைக் கேட்பது, மனுக்களைப் படித்துப்பார்ப்பது, சமூகக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது போன்ற பல்வேறு வகைகளில் ஆட்சியாளர்கள் மக்கள் குரலுக்குச் செவிமடுக்கலாம்.

மக்களுக்குச் சுதந்திரத்தை வழங்கும் அமைப்புகளையும் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடும் அமைப்புகளையும் ஒருங்கே கொண்டிருக்கும் கலப்பு ஆட்சியின் கீழ் ஹாங்காங் இருக்கிறது. 2003லும் 2012லும் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு எதிராகப் பொது மக்கள் போராடியதால் அந்தத் திட்டங்களை உள்ளூர் அதிகாரிகள் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். எந்த அளவுக்கு மக்கள் அவர்களுடைய திட்டங்களை வெறுத்தார்கள் என்பது அப்போது மிகத் தெளிவாகத் தெரிந்தது. தேசியப் பாதுகாப்பு, தேசத் துரோகம் ஆகியவை தொடர்பான சட்டங்களை ஹாங்காங் அரசு நிறைவேற்ற வேண்டுமென்று சீனா விரும்பியது. மக்களின் போராட்டங்களுக்குப் பிறகு அந்தச் சட்டங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. சீனாவில் இருப்பதுபோல் ஹாங்காங் பள்ளிகளில் தேசப்பற்று தொடர்பான கல்வியை 2012ல் அறிமுகப்படுத்த முயன்றபோது மாணவர்கள் போராடியதால் அதே மாதிரி நடந்தது.

சீனா கொண்டுவந்திருக்கும் புதிய தேர்தல் விதிமுறைகளாலும், கடந்த ஆண்டிலிருந்து போராட்டங்களையும் பிற எதிர்ப்பு வடிவங்களையும் நசுக்கியிருப்பதாலும் மக்கள் எதிர்ப்பு காரணமாக ஹாங்காங்கின் எதிர்காலச் செயலாட்சித் தலைவர் ஆட்சியிலிருந்து அகற்றப்படும் ஆபத்தானது அவருக்கு இனி இருப்பதாகத் தெரியவில்லை. 'மன்' (மக்கள்) ஆற்றக்கூடிய எதிர்வினைகளைப் பற்றிப் பெரிதும் கவலையின்றித் தற்போது 'ஸியூ' (ஆட்சி) ஹாங்காங்கை ஆளலாம். 2003, 2012 ஆகிய ஆண்டுகளில் உருவானது போன்ற இயக்கங்கள் உருவாவதற்குத் தற்போது அரசியல் வெளியில் மிகக் குறைவான வாய்ப்பே இருக்கிறது. அந்த இயக்கங்களின் தலைவர்கள் பலரும், அதைப் போலவே 2014, 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பெரிய போராட்டங்களில் கலந்துகொண்ட முக்கியமான பங்கேற்பாளர்கள் பலரும் தற்போது சிறையிலோ அல்லது நாடு கடத்தப்பட்டோ இருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் உயர் பதவியில் இருப்பதைத் தீர்மானிப்பது என்பது எப்போதுமே தேர்தல்களைவிட தேர்வுசெய்தல் என்ற நடைமுறையைச் சார்ந்ததாகவே இருந்துவந்திருக்கிறது. ஹாங்காங் காலனிய ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது, பிரிட்டன் நாடாளுமன்றமே ஹாங்காங் ஆளுநர்களைத் தேர்ந்தெடுத்ததே தவிர, அந்த நகரத்தின் குடிமக்களுக்கு அந்த நடைமுறையில் எந்தப் பங்களிப்பும் அளிக்கப்படவில்லை. ஹாங்காங், சீனாவின் சிறப்பு நிர்வாகப் பிராந்தியமாக ஆகும் விதத்தில் அந்த நகரம் 1997ல் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து 1,200 உறுப்பினர்கள் அடங்கிய தேர்தல் குழுவினராலேயே ஹாங்காங்கின் செயலாட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிறார். அந்த உறுப்பினர்களில் கிட்டத்தட்ட அனைவருமே சீனாவால் முன்கூட்டியே அனுமதி கொடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்கள். அதேபோல் வேட்பாளர்களின் பட்டியலுக்கும் சீனாவின் ஒப்புதல் தேவைப்பட்டது.

புதிய விதிமுறைகள்

தற்போதைய ஏற்பாடானது சட்டமன்றத்துக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் இடங்களை 35லிருந்து (அதாவது தற்போது இருக்கும் 70ல் பாதி) 20 என்ற அளவில் குறைத்திருக்கிறது, அல்லது விரிவாக்கப்பட்ட சட்டமன்றத்தில் உள்ள 90 இடங்களில் நான்கில் ஒரு பங்குக்கும் குறைவு என்ற அளவில். மீதமுள்ள 70ல் 30 இடங்கள் வெவ்வேறு தொழில்களைச் சார்ந்தோருக்குப் பிரித்தளிக்கப்படும், 40 இடங்களுக்கான பிரதிநிதிகள் தற்போது 1,500 என்ற எண்ணிக்கையில் இருக்கும் தேர்தல் குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சட்டமன்றத்துக்குப் போட்டியிடும் யாராக இருந்தாலும் அவர்கள் ஹாங்காங் அரசால் பரிசோதிக்கப்படுவார்கள். அவர்களிடம் போதுமான அளவுக்கு 'தேசபக்தி' இயல்பு இருக்கிறதா என்பதைப் பரிசோதிப்பதற்காக இந்த நடைமுறை. தேசபக்தி இல்லாதவர்கள் (எடுத்துக்காட்டாக, சீனாவை விமர்சிப்பவர்கள்) தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல்செய்யக் கூடாது. தேசபக்தியின் அடிப்படையில் ஒரு வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால், அரசியல்ரீதியிலான கருத்துரிமையின் பாதுகாவலர்களாக முன்பு இருந்த ஹாங்காங் நீதிமன்றங்களால்கூடத் தற்போது உதவிக்கு வர முடியாது.

தேர்தல்களுக்கு அப்பாற்பட்டும் புதிய விதிமுறைகள் செல்வாக்கு கொண்டிருக்கின்றன. காலனிய ஆட்சியின் இறுதிக் காலத்திலும் சரி, பிரிட்டனிடமிருந்து சீனாவுக்குக் கைமாறியதிலிருந்து கடந்த ஆண்டு வரையிலும் சரி, ஹாங்காங் கருத்து வேறுபாடுகளுக்கும் எதிர்க் கருத்துகளுக்கும் இடமளிக்கும் நகரமாகவே இருந்தது.

முன்பு சட்டபூர்வமானவை என்று கருதப்பட்ட பேரணிகள் தற்போது தொடர்ச்சியாகத் தடைசெய்யப்படுகின்றன. ஹெட்லைனர் என்ற தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டுவந்த, செயலாட்சித் தலைவரைக் கேலிசெய்யும் நிகழ்ச்சிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

சீன கம்யூனிஸக் கட்சி மீதும் ஹாங்காங் அரசு மீதும் விமர்சனம் செய்ய முடியாத வகையில் மாணவர் அமைப்புகளுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டுவருகிறது. இவை எல்லாமே மேலும் எதேச்சதிகாரமான, மக்களின் குரலுக்குச் செவிமடுக்காத ஒரு யுகத்தின் வரவுக்குக் கட்டியம்கூறுகின்றன. இந்த யுகத்தில் 'மன்' (மக்கள்) தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தவே செய்வார்கள், ஆனால் நுட்பமான வழிமுறைகளில்.

# நோயற்ற வாழ்வில் நாம் வாழவேண்டும்

வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டிய மனிதத்தின் உடலானது நொய்ந்துபோன நிலையில் தோன்றுவது நோய் பிணித்திருப்பது பிணி. அது உடலையும் பிணித்திருக்கிறது; உயிரையும் பிணித்திருக்கிறது. பிறவிப்பிணி என்று தமிழ் இலக்கியங்கள் பேசுகிற பிணி, உயிர்ப் பிணி. உடலைப் பிணித்த பிணியின் தொடர்ச்சியே நோய்.

காற்றுத்தேவன் புடைத்து நொறுக்கிவிடும் பொருள்களைப் பட்டியலிடுகிற மகாகவி பாரதி, நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை, நொய்ந்த மரம் நொய்ந்த உடல், நொய்ந்த உயிர், நொய்ந்த உள்ளம் என்பனவற்றை நிறுத்துகிறார். நொய்ந்துபோன உடலும் உள்ளமும் கொண்ட உயிரை எளிதாகக் காலன் எடுத்துச் செல்கிற காலகட்டம் இது. வீடே உலகமாய் ஒடுங்கிய இந்த நாளில், வீட்டைப்போலவே, திண்ணமுறக் கட்டவேண்டியது உடலை. உடலைக் கட்டினால் உயிரைக் கட்டலாம் என்பது உணரத்தக்க உண்மை.

வீடுகள் எவ்வளவுதான் பாதுகாப்பானவை என்றாலும் வீட்டின் உள் இருப்போரை விழுங்கிவிடக் காத்திருப்பது பசி. உடலைப் பற்றி, உயிரை விழுங்கும் பிணியைப் பசி என்று கண்ட நம் முன்னோர் பசிப்பிணி என்று அதற்குப் பெயரும் சூட்டினர். அது முறைப்படி தீர்க்கப்படாவிட்டால், முறை பிறழும்; அனைத்துப் பாவங்களையும் செய்யத் தூண்டும் என்றும் எச்சரிக்கை செய்தனர். பசிப்பிணி என்னும் பாவி என்கிறது மணிமேகலை பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்று பட்டியலிடுகிறார் ஔவையார். வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று கட்டளையிடுகிறார் பாரதி.

பசிப்பிணி போக்கும் உணவை அமுதம் என்றே அழைத்தனர் தமிழர். அமுதம் வானவர்க்கு உரியது என்று புராணங்கள் பேசுகின்றன. அது புனைவோ மெய்யோ, ஆனால், வான் அமிழ்தம் என்று வள்ளுவர் காட்டுவது வான்மழையை. தானும் உணவாகித் தரணியில் வாழும் எல்லாவுயிர்களுக்கும் உணவாகும் அனைத்தையும் உருவாக்கும் மூல காரணியாய் அது திகழ்கிறது என்கிறார். அது கடவுளை நிகர்த்த கருணை உடையது. அவர்க்கு முன்னமே, மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே என்று பாடிப் புகழ்ந்தவர் கபிலர்.

தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பதும், பசித்த வயிற்றுக்கு அன்னமிடுதலும் புண்ணியம் எனக் கொண்டனர் முன்னோர். அதனால்தான், தண்ணீர்ப் பந்தல்களும், அன்ன சத்திரங்களும் நாடெங்கும் நிறுவப்பெற்று நல்லறம் பேணப்பட்டது. இதனை முன்னிறுத்தியே தமிழகத்து விழாக்களைத் திட்டமிட்டு நடத்தவும் செய்தனர்.

நீரும் சோறும் புனிதமானவை; பேணப்பட வேண்டியவை. அதனால்தான் தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்ற அனுபவ வாசகம் மக்களிடைப் புழக்கம் ஆனது. ஒரு சோறு சிந்தினால் ஒரு நாள் பட்டினி என்ற எளிய தத்துவம் எழுதப் படிக்கத் தெரியாத பாமரத் தாய்மார்களின் வாய்வழி வந்து பழக்கம் ஆனது. இவ்விரண்டையும் எல்லாரும் எப்போதும் தடையின்றிப் பெறவேண்டி முறைசெய்யும் அரசை, உயிர் எனக் கொண்டாடியது புரனூறு.

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால், யான்உயிர் என்பது அறிக்கை

வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

என்று பாடினார் மோசிகீரனார். தன்னுயிர் போல, மன்னுயிர் அனைத்தையும் பேணிக் காத்த தசரதனை,உயிரெலாம் உறையும் ஓர் உடம்பும் ஆயினான் என்று கம்பர் பாராட்டுகிறார்.

அப்படி எல்லாவுயிர்களையும் இனிது பேணியவர்களாக மன்னர்கள் திகழ்ந்தனர். அவர்கள் முறைபிகிறபோது, புலவர்கள் அறம் உரைத்து ஆற்றுப்படுத்தினர். மக்களின் பிரதிநிதிகளாக அவர்களே விளங்கினர். தகுதிசால் வள்ளல்களைப் பாடிப் பெற்ற பரிசில்களைத் தனக்கெனக் கொள்ளாமல் தன்னைப்போல் வறுமையில் வாடிய மக்களுக்கு வாரி வழங்கினர்.

குமணவள்ளலைப் பாடிப் பரிசு பெற்ற பெருஞ்சித்திரனார், தன் மனைவியிடம்,உன்னை விரும்பி வாழ்பவர்களுக்கும், நீ யாரை விரும்பி வாழ்கிறாயோ அவர்களுக்கும், உன்னைப் பின்பற்றிக் கற்றுக் கொண்டு வாழும் உன் சுற்றத்தார்களுக்கும், உனக்கும் பசி போக்கக் கடனாகக் கொடுத்து உதவியவர்களுக்கும், இன்னாருக்கு என்று கணக்குப் பார்க்காமல், என்னை எதும் கேட்காமல், எல்லாருக்கும் வழங்குவாயாக என்று கூறினார் (புரனூறு 163).

ஈத்துவக்கும் இன்பமே பேரின்பம் என்று கண்டவர்கள் அவர்கள். அதனால்தான், ஈதல் இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம் என்று உணர்ந்து உரைத்தார் திருவள்ளுவர். கடலன்ன செல்வம் இருந்தாலும் உண்பது நாழிதான், உடுப்பவை இரண்டே எனச் சொன்ன மதுரை நக்கீரனார், செல்வத்துப் பயனே ஈதல் என்று உணர்த்தினார்.

இறைக்கிற கிணறே சுரக்கும். கொடுக்கிறவர்களுக்கே கிடைக்கும் என்பது மக்களின் அனுபவ நம்பிக்கை. அள்ளிக் கொடுக்க முடியாதபோது, கிள்ளியாவது கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தனர்.

எல்லாராலும் எல்லா அறங்களும் பின்பற்றுதல் என்பது சாத்தியமில்லை. ஆனால், தவிர்க்கக்கூடாது என்பதால், அறம் செயவிரும்பு என்று ஔவையார் அறிவுறுத்தினார். விருப்பம் எவ்வகையிலாவது செயல் வடிவாகிவிடும் என்பது இயற்கை நியதி.

தன்னிடம் இருப்பதைக் கொடுப்பதல்ல, தானம்; தன்னிடம் வந்து இரப்பவர்க்கு என்ன தேவை என்று தருவதே தானம்; அது கடவுள் நிலைக்கு மனிதனை உயர்த்துவது. அதனால்தான், புல்லாக இருந்தாலும், பூவாக இருந்தாலும் சமமாக ஏற்றுக்கொள்பவன் இறைவன். அதுபோல், எவராக இருந்தாலும் பேதம் பாராமல் அவர்களுக்கு உரியன வழங்கியவன் பாரி என்று வள்ளல் தன்மைக்கு இலக்கணத்தை வரையறுத்துச் சொல்லிக் கொடுத்தவர் கபிலர்.

இத்தனைக்கும் வேள்பாரி முடியுடை வேந்தன் அல்லன்; பறம்புமலையாண்ட குறுநில மன்னன். கடையெழு வள்ளல்களை அடுத்துக் குறுநில மன்னர்கள் கொடையாளர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதற்குக் கம்பனைப் புரந்த சடையப்ப வள்ளல் ஒரு சான்றாளன். பின்னர் இடைக்காலப் புலவர்களைத் தங்களால் இயன்ற அளவு பேணிய வள்ளல்கள் சிற்றிலக்கியங்களில், சின்னஞ்சிறு தனிப்பாடல்களில் நிலைபெற்றிருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் பின்னர் வந்த வள்ளல் யார் என்று கேட்போர்க்குக்காலம்தந்தபதில், வடலூர் தந்த இராமலிங்கர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிடும் உள்ளமும், பசித்தோர்க்கு இரங்கி உணவளிக்கும் பண்பும் எவருக்கெல்லாம் இருக்கின்றனவோ, அவர்களுக்குள் இந்த வள்ளல் தன்மை வற்றவில்லை என்பதை வரலாறு கணித்துத் தருகிறது.

பசிப்பிணியை விடவும் மனிதத்தைப் பிணித்த மற்றொரு கொடுநோய், வறுமை. அதனால்தான், கொடிது கொடிது வறுமை கொடிது என்று ஔவையார் பாடினார்.

அதனினும் கொடிது இளமையில் வறுமை என்றார். எதற்கும் அஞ்சாத இளமையை, வறுமை தின்னத் தொடங்கிவிட்டால் எதிர்க்கும் வேகத்தில் வன்முறை தோன்றும். எச்சில் கையை உதறினால்கூட, அதில் ஒட்டியிருக்கும் சோறு போய் விடும் என்று ஈயாத கருமிகள் ஆகிய கயவர்கள், தங்கள் தாடைகளை முறுக்கிய கை கொண்டு உடைக்கிறவர்களுக்கே கொடுக்கிறவர்களாக ஆவார்கள் என்று, திருவள்ளுவர் எச்சரிக்கை விடுத்தார்.

அதே நேரத்தில், ஆத்திரத்தில் அத்தகு வன்முறையாளர்களாக, இளைஞர்கள் ஆகிவிடலாகாது என்ற தாயுளத்தால், தன் பசியை விடவும் தன்னை ஈன்ற தாயின் பசியைக் கண்டாலும், அதனை மாற்றுதற்குச் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை என்றும் அறம் உரைத்தார். பசியினைவிடவும் கொடிய பாவி இந்த வறுமை. அதனால்தான், இதனை,இன்மை என ஒரு பாவி என்றும் எடுத்துக்காட்டினார்.

அரிசி இல்லை என்று அவச்சொல் கூறாதே. அதற்குப் பதிலாக அகரம் இகரம் என்றால் போதும். புரிந்து கொள்வேன் என்று தரித்திரத்தைக் கூடத் தமிழ் கொண்டு சொல்லல் தகாது என்று மனைவிக்கு அறிவுறுத்திய மகாகவி பாரதி, செல்வத்திற்குரிய திருமகளை நோக்கி, நின்னருள் பெற்று, இல்லை என்ற சொல்லை இல்லையாக வைப்பேன் என்று சபதமும் செய்தார்.வசதி படைத்தவன் தரமாட்டான்; வயிறு பசித்தவன் விடமாட்டான் என்று காலங் காலமாய்த் தொடரும் இந்தப் போராட்டத்தைப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடி வைத்தார்.

மனிதர் நோக மனிதர் பார்க்கும் இந்த வழக்கத்தால், பகை முளைக்கிறது; மனிதம் சிதைகிறது. அதனால்தான், சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தன்று புகாரில் வாழும் மூதிற்பெண்டி கூடிக் குலவையிட்டு இந்திரன் ஏவலால் வந்து காவல் செய்யும் பூதத்தை வணங்கி,

பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்

பசியும், பிணியும், பகையும், நீங்கி;

வசியும், வளனும், சுரக்க

என்று வாழ்த்தியதாக, இளங்கோ வடிகள் பாடுகின்றார்

இப்போது, கொரோனா தீநுண்மிப் பரவலைத் தடுக்கத் தமிழகத் திருக்கோயில்களின் திருவிழாக்களைச் சிறப்போடு நடத்த முடியாது தவிக்கிறோம். இயல்பு நிலைக்கு எப்போது வருவோம் என்று ஏங்கும் மக்களுக்கு எல்லாமும் கிடைக்கிற காலம் வருகிறபோது வரட்டும். அதற்கு முன்னதாக, அவர்களைப் பற்றுகிற தொற்று நோயான கரோனா தீநுண்மியிடம் இருந்து காப்பது முக்கியம். பசிப்பிணியும் வறுமைநோயும் வந்து வருத்தாமல் மக்களைக் காப்பதும் மிக முக்கியம். வருடந் தவறாமல் வந்து போகின்ற சித்திரைத் திருநாளில், இப்போது, நாம் வைக்கும் விண்ணப்பம், 'நோயற்ற வாழ்வில் நாம் வாழவேண்டும் என்பதே. அது தொற்றுநோய் மட்டுமல்ல, இடைவெளிவிடாது எல்லாரையும் பற்றி வருத்தும் வறுமை நோயும் தான் என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது.

# இலை மேல் வளரும் இறைச்சி

இறைச்சிக்காக விலங்குகளை பண்ணையில் வளர்ப்பதற்கு மாற்று வழிகள் இல்லையா? இருக்கிறது. இறைச்சியின் செல்களை ஆய்வகத்தில் வளர்த்தெடுக்கும், 'செல் வேளாண்மை' அவற்றில் ஒன்று. கிண்ணியில் வளரும் செல்கள், கறியாகத் திரண்டு வர, சாரம் போன்ற அமைப்பு தேவை. அதற்கு பசலைக் கீரை இலையை பயன்படுத்தலாம் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஏற்கனவே மனித இதயத் திசுக்களை வளர்க்க இந்த முறை பயன்பட்டுள்ளது. என்றாலும், அந்த முறையைக் கண்டறிந்த அமெரிக்காவின் பாஸ்டன் கல்லூரி விஞ்ஞானிகள், இந்தத் தடவை, அதை மாட்டிறைச்சி வளர்ப்பதற்கு பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர்.



பசலி இலையிலுள்ள புடைத்த நரம்பு அமைப்பை மட்டும் வைத்துக்கொண்டு, அதிலுள்ள பிறநிறமிகள், செல்களை நீக்கிவிடுகின்றனர் விஞ்ஞானிகள். பிறகு, மாட்டிறைச்சியின் செல்களை வெளிறிய பசலை இலை மீது வைத்து வளர்க்கின்றனர்.

இப்படி முதல் முறையாக வளர்க்கப்பட்ட மாட்டிறைச்சி செல்கள், 14 நாட்களுக்கு பல்கிப் பெருகியது. இந்த ஆய்வை மேலும் தொடர்ந்து, இறைச்சி வளர்ச்சிக் காலத்தை அதிகரிக்க விஞ்ஞானிகள் முயற்சிக்கின்றனர். இதற்கு வேறு தாவரங்கள் உதவுமா என்றும் அவர்கள் ஆராய்கின்றனர். ஆய்வகத்தில் வளரும் இறைச்சிக்கு, ஏற்கனவே வரவேற்பு அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# மீஞ்சும் உணவில் மின்சாரம்

ஆஸ்திரேலியாவிலுள்ள காக்பர்ன் நகரத்தின் உணவுக் கழிவுகளை, பசுமை ஆற்றலாக மாற்றுகிறது ஒரு தொழில்நுட்பம். இது மனித வயிறு இயங்கும் முறையை பின்பற்றி, இயங்கக்கூடியது என்பதுதான் ஆச்சரியம்.

காக்பர்னிலுள்ள உணவகங்கள் மற்றும் அங்காடிகளில் சேகரிக்கப்படும் உணவு மற்றும் காய்கறி கழிவுகளை செயற்கை செறிமான ஆலை வாங்கிக்கொள்கிறது. வந்து சேரும் கழிவுகளை கூழ் போல ஆக்கி, செறிமானத் தொட்டிகளில் போட்டால், அதிலுள்ள நுண்ணுயிரிகள் அவற்றை சிதைத்து விடும்.



இதிலிருந்து, மீத்தேன் வாயு கிடைக்கும். மீத்தேன் மூலம் இயங்கும் இரு பெரிய, 'ஜெனரேட்டர்'கள், உற்பத்தி செய்யும் 2.4 'மெகா வாட்' மின்சாரம் ஆலைக்கும், அருகாமையிலுள்ள மூவாயிரம் வீடுகளுக்கும் கிடைக்கிறது.

இதுவரை இந்த பரிசோதனை ஆலை 43 டன் உணவுக் கழிவுகளை கையாண்டுள்ளது. மாறாக, இந்த கழிவுகள் குப்பை மேட்டில் தேங்கியிருந்தால், சுற்றுச்சூழலில் 81 ஆயிரம் கிலோ 'கார்பன்டையாக்சைடு' கலந்திருக்கும். தவிர செறிமான தொட்டிகளிலிருந்து கிடைக்கும் கூழ் போன்ற திரவத்தை, 'ரிச் க்ரோ' நிறுவனம் விவசாயிகளுக்கு உரமாக விற்கிறது. குப்பைகளை ஆற்றலாக மாற்றும் நுட்பங்களுக்கு தற்போது மவுசு கூடி வருகிறது.

# அயல்நாட்டு செய்திகள்



## கொரோனா வைரஸ் தொற்று

## காஞ்சிபுரத்தில் ஏழு கோயில்கள் மே 15 ஆம் திகதி வரை பூட்டு



கொரோனா நோய்த்தொற்று அச்சுறுத்தல் காரணமாக மத்திய அரசின் தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 7 கோயில்களில் பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் கோயில்களும் மூடப்பட்டுள்ளன.

மத்திய அரசின் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் காஞ்சிபுரம் நகரில் கைலாசநாதர்,சுரகேசுவரர், இறவாதீஸ்வரர், பிறவாதீஸ்வரர், முத்தீஸ்வரர், மதங்கீசுவரர் என்ற 6 சிவாலயங்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட வைகுண்டப் பெருமாள் கோயில் உட்பட 7 கோயில்கள் வரும் மே 15 ஆம் திகதி வரை மூடியிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு காரணமாக பக்தர்கள் யாரும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கோயிலுக்குள் சுவாமிக்கு நடைபெறும் பூஜைகள் மட்டும் வழக்கம் போல நடைபெறுகிறது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு காரணமாக காஞ்சிபுரத்தில் சுற்றுலாப்பயணிகள் அதிகம் வரக்கூடிய கைலாசநாதர் கோயில் வெறிச்சோடிக் காணப்படுகிறது.தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் காஞ்சிபுரம் நகரில் உள்ள 7 கோயில்கள் மற்றும் காஞ்சிபுரம் அருகேயுள்ள தென்னேரி, திருமுக்கூடல், உத்தரமேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள புராதனக் கோயில்களும் மத்திய அரசின் உத்தரவின் பேரில் மூடப்பட்டுள்ளது.

# சின்னக்கலைவாணர் நடிகர் விவேக்கிற்கு மாரடைப்பு;

## சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

நகைசுவை நடிகர் விவேக் மாரடைப்பு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நடிகர் விவேக்கின் உடல்நிலையை உன்னிப்பாக கவனித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் திரைப்பட படப்பிடிப்புக்காக வட இந்திய மாநிலங்களுக்கு நடிகர் விவேக் சென்று திரும்பியிருந்தார். நேற்று முன்தினம் காலை தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும், கொரோனா தடுப்பூசியில் பின்விளைவு இல்லை என்பதை உணர்த்துவதற்காகவும் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டார். பின்னர் சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் முன்னிலையில் தடுப்பூசி குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.



தொடர்ந்து விவேக் காலை முதற்கொண்டு திரைப்பட படப்பிடிப்பில் இருந்து வந்தார். அப்போது தீடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக சென்னையில் உள்ள மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நடிகர் விவேக்கின் உடல்நிலையை உன்னிப்பாக கவனித்து வருவதாக மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். அவரச சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள அவருக்கு மூச்சு திணறல் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கிய நகைசுவை நடிகர்களில் ஒருவராக நடிகர் விவேக் இடம்பிடித்து வருகிறார்.

தமிழ் சினிமாவை பொறுத்தமட்டில் முன்னணி நகைசுவை நடிகராக உள்ள விவேக்கின் திடீர் உடல்நலக்குறைவு சினிமா வட்டாரத்தில் மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. திரைத்துறை மட்டுமின்றி நடுதல், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு பணிகளிலும் ஈடுபட்டு வந்த நிலையில் விவேக்கிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. சின்னக்கலைவாணர் என்று அழைக்கப்படும் விவேக், தனது திரைப்படங்களில் நேர்மறை எண்ணங்களை அதிகம் விதைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாக்கு எண்ணும் மையங்களில் மர்ம லொறிகள்: திமுக நிர்வாகிகள் புகார்

வாக்கு எண்ணும் மையங்களில் லொறிகள் செல்லும் நிகழ்வுகளால் சர்ச்சையானது. தலைமை தேர்தல் அதிகாரியை சந்தித்து திமுக நிர்வாகிகள் ஆ.ராசா, ஆர்.எஸ். பாரதி, பொன்முடி புகார் மனு அளித்துள்ளனர்.

இதன் பிறகு மூன்று பேரும் கூட்டாக அளித்த பேட்டி:

வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும். வாக்கு எண்ணும் மையங்களில் 12ம் வகுப்பு செய்முறை தேர்வு நடத்தப்படுகிறது. ராமநாதபரத்தில் ஓட்டு எண்ணிக்கை நடக்கும் அறைகளுக்கு 31 பேர் மடிக்கனணியுடன் சிலர் சென்றுள்ளனர். அத்தோடு மையங்களுக்கு இரவு நேரத்தில் லொறிகள் சென்றுள்ளன. அமைச்சர்கள் போட்டியிடும் தொகுதிகளில் அதிகளவு முறைகேடு நடக்கிறது. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவை. வாக்கு எண்ணும் மையங்களில் விதிமீறல் நடக்கிறது. மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து தேர்தல் கமிஷனுக்கு அழுத்தம் கொடுக்கிறார்களோ என தோன்றுகிறது. தேர்தல் கமிஷன் மீது நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி' இம்மாத இறுதியில் இந்தியாவிற்கு

ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி' தடுப்பு மருந்து இம்மாத இறுதியில் இந்தியாவிற்கு வழங்கப்படும் என ரஷ்யாவுக்கான இந்திய தூதர் தெரிவித்துள்ளார்.

உலகின் முதல் கொரோனா தடுப்பூசியை ரஷ்யா கடந்த ஆண்டு உருவாக்கியது. 'ஸ்புட்னிக் வி' என்னும் இந்த தடுப்பூசியை இந்தியாவில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் உரிமையை ஐதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் ரெட்டிஸ் லேபரட்டரீஸ் நிறுவனம் பெற்றுள்ளது. ஸ்புட்னிக் வி தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டுக்கு அனுமதிக்கலாம் என மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பின் நிபுணர் குழு பரிந்துரை வழங்கியதை அடுத்து, மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இதனையடுத்து, டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்துடன் இணைந்து ஸ்புட்னிக் வி தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க ரஷ்யா முடிவெடுத்து உள்ளது. கிளாண்ட் பார்மா, பனாசியா பயோடெக் உள்ளிட்ட பல நிறுவனங்களுடனும் தடுப்பூசி தயாரிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவில் 85 கோடி டோசுக்கும் அதிகமான ஸ்புட்னிக்வி தடுப்பூசி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் மாத இறுதியில் முதல் தவணையாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பு மருந்து இந்தியாவிற்கு வழங்கப்படும் என்று ரஷ்யாவுக்கான இந்திய தூதர் பால வெங்கடேஷ் வர்மா தெரிவித்துள்ளார்.



## தமிழகத்தில் மேலும் கட்டுப்பாடுகள்? தலைமைச் செயலர் ஆலோசனை



கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த மேலும் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து, சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலா் ராஜீவ் ரஞ்சன் தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், சுகாதாரத் துறை முதன்மை செயலாளர் இராதாகிருஷ்ணன், பொது சுகாதார துறை இணை இயக்குநர் செல்வ விநாயகம், வருவாய் நிர்வாக ஆணையா் பணீந்திர ரெட்டி, காவல் துறை தலைமை இயக்குநா் ஜே.கே. திரிபாதி, சென்னை மாநகராட்சி ஆணையா் கோ.பிரகாஷ், பெருநகர காவல் ஆணையா் மகேஷ்குமார் அகா்வால் உள்பட அரசின் பல்வேறு துறைகளைச் சோ்ந்த உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாகவும், வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்கள் பாதிக்காத வகையில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கொரோனா தொற்று தினசரி பாதிப்பு 8 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. தொற்று அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழக அரசு ஏற்கெனவே விதித்துள்ளது. ஆனாலும், நாள்தோறும் பதிவாகும் தொற்றானது கூடுதலாகி வருவதால், அதனை கட்டுப்படுத்துவது தொடா்பாக ஆலோசனை நடைபெற்றுள்ளது.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் எத்தகைய கட்டுப்பாடுகளை விதிப்பது, பிளஸ் 2 தோ்வை எப்போது நடத்துவது என்பன உள்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

## கும்பமேளாவில் புனித நீராடலுக்கு வந்த

# 30 சாதுக்களுக்கு கொரோனா தொற்று

உத்தர்கண்ட்டின் ஹரித்துவாரில் நடக்கும் கும்பமேளாவில் புனித நீராடலுக்கு வந்த 30 சாதுக்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

உத்தரகண்டின் ஹரித்வாரில் துவங்கி, பல மாவட்டங்களில் 1,650 ஏக்கர் பரப்பளவில், கும்பமேளா நிகழ்ச்சி நடந்து வருகிறது. கங்கை நதியில் புனித நீராடுவதற்காக இலட்சக்கணக்கான மக்கள் குவிந்தனர். கடந்த மூன்று நாட்களில் மட்டும், 48 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் புனித நீராடினர். கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில், எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல், மக்கள், கூட்டம் கூட்டமாக குவிந்துள்ளது, மாநில அரசுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது.



கடந்த 10ம் தேதி முதல் 15ம் தேதி வரை கும்பமேளாவுக்கு வந்த 2.35 இலட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில், 2,171 பேருக்கு கொரோனா உறுதி ஆகியுள்ளது. ம.பி.,யை சேர்ந்த மகா நிர்வானி அஹாராவின் தலைவர் கபில் தேவ், கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

இந்நிலையில், ஹரித்துவார் தலைமை மருத்துவ அதிகாரி எஸ்.கே. ஜா கூறுகையில், ஹரித்துவாரில் கும்பமேளாவில் பங்கேற்ற சாதுக்களில் 30 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு உள்ளது. குறிப்பிட்ட அகாதாக்களை சேர்ந்தவர்களுக்கு மட்டும் தொற்று ஏற்படவில்லை. அனைத்து அமைப்பை சேர்ந்தவர்களும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து இந்திய அகாதா பிரஷத் அமைப்பு தலைவர் மகந்த் நரேந்திர கிரியும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டு எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். கும்பமேளாவிற்கு வந்து சென்ற வெளி மாநிலத்தவர்கள் தங்களது வீடுகளில் தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும். கொரோனா அறிகுறி இருந்தால் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.






# மில்லர், கிறிஸ் மோரிஸ் அதிரடி

# டெல்லி அணியை வீழ்த்தியது ராஜஸ்தான்

மில்லர் அரைச் சதமடிக்க, கிறிஸ் மோரிஸ் 18 பந்தில் 36 ஓட்டங்கள் விளாச ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

ஐபிஎல் தொடரின் 7வது லீக் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்பிடி, டெல்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடிய. முன்னணி வீரர்களான பிரித்வி ஷா (2), ஷிகர் தவான் (9), ரகானே (8) ஆகியோரை இடது கை வேகப்பந்து வீச்சாளர் உனத்கட் அடுத்தடுத்து வெளியேற்றினார்.

அடுத்து மார்கஸ் ஸ்டாய்னிஸை டக்அவுட்டில் வெளியேற்றினார் முஷ்டாபிஜூர் ரஹ்மான் வெளியேற்றினார். இதனால் டெல்லி அணி 37 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நான்கு விக்கெட்டுகளை இழந்து திணறியது. அணியின் தலைவர் ரிஷப் பண்ட் ஒருபக்கம் நிலைத்து நின்று சிறப்பாக விளையாடி 32 பந்தில் 9 பவுண்டரியுடன் 51 ஓட்டங்கள் எடுத்து ரன்அவுட் ஆனார்.

லலித் யாதவ் 20 ஓட்டங்களும், டாம் கர்ரன் 21 ஓட்டங்களும், கிறிஸ் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களும் அடிக்க டெல்லி கேப்பிட்டல்ஸ் 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்கள் எடுத்தது.

### 3 விக்கெட் வீழ்த்திய உனத்கட்

ராஜஸ்தான் அணி சார்பில் உனத்கட் 3 விக்கெட்டும், முஷ்டாபிஜூர் ரஹ்மான் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ஜோஸ் பட்லர், மனன் வோரா இறங்கினர். டெல்லி பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசி அசத்தினர். இதனால் பட்லர் பட்லர் 2, வோரா 9, சஞ்சு சாம்சன் 4, ஷிவம் டூபே 2, ரியான் பராக் 2 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ராஜஸ்தான் அணி ஒரு கட்டத்தில் 42 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 முக்கிய விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் டேவிட் மில்லர் அரைச் சதமடித்து 47 பந்தில் 62 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ராகுல் திவாட்டியா 19 ஓட்டங்களில் வெளியேறினார். கடைசியில் கிறிஸ் மோரிசும், உனத்கட்டும் போராடினர். இருவரும் கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர்.

கடைசி ஓவரில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற 12 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கிறிஸ் மோரிஸ் 2 சிக்சருடன் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். மோரிஸ் 18 பந்தில் 4 சிக்சர்களுடன் 36 ஓட்டங்களுடனும், உனத்கட் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் 3 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

டெல்லி அணி சார்பில் ஆவேஷ் கான் 3 விக்கெட்டும், கிறிஸ் வோக்ஸ், ரபாடா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

## அல் நஜா விளையாட்டுக் கழகத்திற்கு பெருமை சேர்த்தவர்களுக்கு கௌரவம்





(பாலமுனை விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்றுகூடலும், கலந்துரையாடலும் 2021 நிகழ்வு கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் தலைமையில் (11) கோணாவத்தை பல்தேவைக் கட்டிடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரிந்து கழகத்திற்கு பெருமை சேர்த்த வீரர்களான ஏ.எம்.றிஸ்வான், ஏ.ஆர். நிக்காஸ் மற்றும் கழகத்தின் ஸ்தாபக தலைவர் ஏ.பி.அன்சார், கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் வை.எல்.எம். நியாஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே.அமீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், விசேட அதிதிகளாக கோணாவத்தை ஜூம்ஆப் பள்ளிவாயல் தலைவர் எஸ்.எம்.அமீன், கவிஞர் ஈழமதி ஜப்பார், அல்நஜா விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகரும், ஆசிரியருமான எம்.ஐ.ஹாபீழ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபின் சேவைகளைப் பாராட்டி, அல்நஜா விளையாட்டுக் கழகத்தினர் பாராளுமன்ற உறுப்பினருக்கு பொன்னாடை போர்த்தி, ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

## 26 அணிகள் கொண்ட றபீக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தின் 26 அணிகள் பங்குகொள்ளும் அணிக்கு ஐவர் ஏழு ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட றபீக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நாள் நிகழ்வு (09) மாலை சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் பிளாஸ்டர் விளையாட்டுக்கழக முகாமையாளர் எம்.ஐ.எம். பஸ்மிரின் நெறிப்படுத்தலில் கழகத்தின் தலைவர் ஏ.எல். முஹம்மத் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண மற்றும் அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனங்களின் செயலாளர் சிதாத் நாலக லியனாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் றபீக் கட்டுமான நிறுவன பணிப்பாளர் ஏ.எம். றபீக், சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். சபூர்தீன், பிளாஸ்டர் விளையாட்டு கழக தலைவரும், அபிவிருத்தி உத்தியோக்கத்தருமான ஆர்.எம்.இம்தாத், கழக செயலாளரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தருமான ஏ.சி.எம். நிஸார், கிழக்கு மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பேரவை பணிப்பாளர் சபை உறுப்பினர் யூ. எல்.என். ஹுதா, உட்பட அம்பாறை மாவட்ட கிரிக்கெட் சம்மேளன பிரதிநிதிகள், வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.